# நம்முடைய சுதேசம்

## சென்னைராஜதானியின்

## புதுமாதிரியான பூகோள சாஸ்திரம்

**காமீரான் மாரிஸன்,** எம்.ஏ., எல்.எல்.பி.

இந்தியா, பர்மா, லங்கை இவற்றின் ஆரம்ப பூகோள சாஸ்திரங்கள்
முதலியவற்றை இயற்றியவர்



மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்
சென்னை, பம்பாய், கல்கத்தா, லண்டன்
1919

22454

# சூசீபத்திரம்.


அத்தியாயம். பக்க

1. இதுவரையில் நாம் தெரிந்துகொண்ட விஷயங்கள்; இனி நாம் கற்பவை .... .... ....

2. இந்தியா — இமயமலைகள் — பெரிய சமநிலங்கள் — தக்காணத்துப் பீடபூமி — தாழ்ந்திருக்கும் கடற்கரைகள் .... .... ....

3. படத்தைப்பற்றிய விஷயங்கள்—இந்தியாவின் படத்தில் நமது மாகாணநிலை .... .... ....

I. மேடுகளும், பள்ளங்களும்—கிழக்குத்தீரச் சமவெளி—மேற்குத்தீரத் துண்டுநிலம்—சென்னையில் தக்காணம் .. .... ....

II. மலைகள்—மேற்குத்தொடர்ச்சி மலையும் கிழக்குத்தொடர்ச்சி மலையும் .... .... ....

III. நதிகள்—வங்காளக் குடாக்கடலில் விழும் நதிகள்—அரபிக்கடலில் விழும் நதிகள் ....

IV. 'ரெயில்வே' பிரயாணங்கள் — சென்னையிலிருந்து வடக்கே கல்கத்தாவுக்கு — பம்பாய்க்கு வடமேற்காக — தென்மேற்காக மேலைத்தீரவெளிக்கு—தெற்கே கடலோரமாக .. ....

4. நமது மாகாணத்தின் சீதோஷ்ணஸ்திதி—வெப்பமும் குளிர்ச்சியும் ஈரமும் வறட்சியும்—காற்று வீசுதல் — பருவக்காற்று — மலைகள் வடகிழக்குப் பருவக்காற்றைத் தடுத்து நமது மாகாணத்தில் மழையைப் பெய்வித்தல்—மழையின் பரிமாணம்—பருவங்கள் .... .... .... ....

5. மழையின் பிரயோசனமும் அதனை அளக்கும் விதமும்—பாசனம்—அணைகள் கட்டுதல்—ஏரிகள்—கிணறுகள்—நிலவளம் .... .... ....

6. நமது மாகாணத்துப் பயிர்கள்—நன்செய்ப் பயிர்களும் புன்செய்ப் பயிர்களும்—தோட்டப் பயிர்கள்—மலைப் பயிர்கள்—காடுகள் — சுரங்கங்களும் உலோகங்களும் — உபயோகமான மிருகங்களும் காட்டு மிருகங்களும் .. .... .... ....

7. ஜனங்களின் ஜீவனோபாயம்—உழவு—கைத்தொழில்—உள்நாட்டு வியாபாரமும் அயல்நாட்டு வியாபாரமும்—ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் .... .... ....

8. ராஜதானியின் பிரிவுகள்—சுதேச ராஜ்யங்கள் .... .... .... ....

9. கர்நாடக ஜில்லாக்கள்—வடசர்க்கார் .... .... .... ....

10. மத்திய ஜில்லாக்கள் .... .... .... ....

11. தென் ஜில்லாக்கள் .... .... .... ....

12 'விடப்பட்ட' ஜில்லாக்கள் .... .... .... ....

13. நீலகிரி ஜில்லா .... .... .... ....

14. மேலைச்சமுத்திரதீர வெளி—சுதேச ராஜ்யங்களாகிய கொச்சியும் திருவாங்கூரும் ....

15. சென்னபட்டணம் .... .... .... ....

16. நம்முடைய மாகாணத்தின் கடலோரமாகச் சுற்றிவருதல் .... .... ....

17. பிரயாணத்தின் தொடர்ச்சி .... .... .... ....

18. பிறதேச யாத்திரை .... .... .... ....

படத்தைப்பற்றிய விஷயங்கள்.—மழை—பாசனம்—தானியங்களும் காடுகளும்—ஜனத்தொகை—பாஷைகள்—ஜில்லாக்களும் நதிகளும்—இருப்புப்பாதைகள் .... .... ....



224541

U·211 N19
915·4
19 JUN 1919
MADRAS.

# சென்னை ராஜதானியின் பூகோளம்

## இதுவரையில் நாம் தெரிந்துகொண்ட விஷயங்கள்.

இதற்கு முந்திய வகுப்பில் நாம் படித்த விஷயங்களுள், சிலவற்றை இப்பொழுது ஞாபகப்படுத்திக்கொள்வோம். முதலில் ஒரு இடத்திலிருந்து வேறொரு இடத்துக்குப் போக வழியைத் தெரிந்துகொண்டோம். வலதுபக்கம் இன்னது இடதுபக்கம் இன்னது என்பதும், தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு என்றால் என்ன என்பதும் நமக்குத் தெரியும்; சூரியனையும், துருவ நக்ஷத்திரத்தையும் பார்த்துத் திசைகளை அறிந்துகொள்ளலாமென்பது தெரிந்தது. சூரியனையும் நக்ஷத்திரங்களையும் பார்க்க முடியாத போது திசைகாட்டியினால் திசைகளை அறிந்துகொள்ளலாமென்றும் தெரிந்துகொண்டோம். கடலில் இருந்தாலும் கரையில் இருந்தாலும் திசைகாட்டி நமக்குத் திசைகளைக் காட்டுகிறது.

பூகோளசாஸ்திரம் (ஜியாக்ரபி) என்பது பூமியைப் பற்றிச் சொல்லும் சாஸ்திரம் என்று தெரிந்துகொண்டிருக்கிறோம். அது பூமியின் பற்பல பாகங்களாகிய நிலம் (தரை), நீர் (கடல்), மலைகள், சமநிலங்கள், நதிகள், குடாக்கடல்கள், ஜலசந்திகள் முதலியவைகளைப்பற்றிச் சொல்லுகின்றது. வேறு சில விஷயங்களையும் தெரிவிக்கிறது. நீரையும் தரையையும் மனிதர்கள் இன்னவிதமாக உபயோகிக்கிறார்களென்றும் அது தெரிவிக்கிறது. ஜனங்கள் நிலத்தை உழுது பயிரிடுகிறார்கள்; நிலத்தின் மேல் வீடுகள் கட்டுகிறார்கள்; கிராமங்களையும் பட்டணங்களையும் உண்டாக்குகிறார்கள். நிலத்தைத் தோண்டி நிலக்கரி, கல், இரும்பு, பொன், வெள்ளி முதலியவற்றை எடுக்கிறார்கள்; நிலத்தில் அங்குமிங்கும் போவதற்கு சாலைகளையும், புகைவண்டி ஓடுவதற்குத் தகுதியான இருப்புப் பாதைகளையும் அமைக்கிறார்கள். மனிதர்களுக்கு மலைகளும் உதவுகின்றன; சமநிலங்களும் உதவுகின்றன; ஆறுகளும் உதவுகின்றன.

கடலிலிருந்து உப்பும் மீனும் கிடைக்கின்றன. உலகின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்குப் போவதற்குக் கடலே ஒரு பெரிய வழியாக இருக்கிறது.

உலகத்தின் ஒரு பாகத்தைப்பற்றிய பூகோள சாஸ்திரத்தைப் படிப்பதால் அதன் வடிவம், இயற்கையமைப்பு, ஜலாதாரம் ஆகிய இவைகள் தெரிகின்றன. அல்லாமலும், அதனை ஜனங்கள் இன்னவிதமாக உபயோகிக்கிறார்கள், அதில் இன்ன தானியங்களைப் பயிரிடுகிறார்கள், இன்ன இன்ன பட்டணங்களையும் துறைமுகங்களையும் அமைத்திருக்கிறார்கள், இன்ன இன்ன இடங்களில் இருப்புப் பாதைகளைப் போட்டிருக்கிறார்கள் என்றும் தெரிந்துகொள்ளுகிறோம்.

படங்களைப்பற்றியும் அவற்றின் உபயோகங்களைப்பற்றியும் முன்னமே படித்தோம். படிக்கக் கற்றுக்கொள்ளும்பொழுது நாம் எழுத்துக்களை உபயோகிக்கிறோம்: கணக்கைக் கற்றுக்கொள்ள எண்களை உபயோகிக்கிறோம்: அப்படியே பூகோள சாஸ்திரம் கற்றுக்கொள்ள வேண்டுமானால் படங்களையும், மாதிரியுருவங்களையும் (Models) உபயோகிக்கிறோம். தச்சன் வேலைசெய்யும்போது உளியையும் செம்மட்டியையும், வாளையும் உபயோகிப்பதுபோல், நாம்பூகோளசாஸ்திரம் கற்கும்போது படத்தையாவது, மாதிரியுருவத்தையாவது, குளோபையாவது உபயோகிக்கவேண்டும்.

### இனி நாம் கற்பவை.

உலகத்தில் நாம் இருக்கும் பாகத்தின் விவரத்தைப்பற்றி இனிமேல் தெரிந்துகொள்ளப்போகிறோம். அந்தப்பாகத்திற்கு, சென்னை ராஜதானி அல்லது சென்னை மாகாணம் என்று பெயர். ஒவ்வொருவனுக்கும் அவன் அவனுடைய கிராமத்தைப்பற்றிய விஷயங்கள் தெரியும். அநேகர் அங்கங்கே நடந்து சென்றும் வண்டிகளிலோ குதிரைகளின்மேலோ ஏறிப்போயும் மலையின்மேலேறிச் சுற்றிப் பார்த்தும் தமது தாலூகாவைப் பற்றியும் ஜில்லாவைப்பற்றியும் பல விஷயங்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். நமது மாகாணமோ நமது ஜில்லாவைக்காட்டிலும் மிகவும் பெரியது; அதன் பூகோளசாஸ்திரத்தை நாம் தெரிந்துகொள்ளுவது எப்படி? அதற்கு மாகாணமுழுவதும் நடந்துபார்க்கவேண்டும்; அல்லது குதிரையின்மேலாவது, துவிசக்கர வண்டிகள் (பைசிகிள்) மேலாவது ஏறிச் செல்லவேண்டும், அல்லது ஆகாய விமானத்தில் ஏறிப் பறந்து சுற்றிப் பார்க்க

915.4

வேண்டும். இவைகளே சிறந்த வழிகள் என்பது உனக்குத்தெரியும். ஆனால், அவ்வாறு செய்வதற்கு நமக்கு இப்போது நேரம் இல்லை. அதற்காக நாம் என்னசெய்யவேண்டும்? படத்திலிருந்தும் புஸ்தகத்திலிருந்தும் நமது மாகாணத்தைப் பற்றிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

தரையின் வடிவம் எப்படியிருக்கிறது, மேடு எங்கே, பள்ளம் எங்கே, மலைகள் எங்கே, சமநிலங்கள் எங்கே, ஆறுகள் எங்கே பாய்கின்றன? கிராமங்களும் பட்டணங்களும் எங்கே இருக்கின்றன, சாலைகளும் இருப்புப்பாதைகளும் எங்கே போகின்றன, என்னும் இந்த விஷயங்களையெல்லாம் படம் தெரிவிக்கிறது. மேலும் அந்தப்படமானது கடற்கரையுள்ள இடத்தையும் முனைகள் இருக்கும் இடத்தையும் ஜலசந்திகளும் குடாக்கடல்களும் தீவுகளும் துறைமுகங்களும் இருக்கும் பாகங்களையும் அந்த இடங்களுக்குக் கப்பல்கள் போகக்கூடிய வழிகளையும் காட்டுகின்றது. நல்ல படமாக இருந்தால், அதிலிருந்து மேலேசொல்லியவற்றின் பெயர்களையும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

புஸ்தகமோ நமக்கு வேறுவகையில் உதவுகின்றது. படத்தினால் நாம் எளிதில் தெரிந்துகொள்ள முடியாத விஷயங்களை அது தெரிவிக்கிறது. ஜனங்கள் எப்படி வசிக்கிறார்கள், நிலத்தை எப்படி உபயோகிக்கிறார்கள், ஒரு இடத்தில் நெல்லும், மற்றொரு இடத்தில் சோளமும், வேறொரு இடத்தில் காபியும் தேயிலையும் ஏன் பயிரிடவேண்டும் என்னும் விஷயங்களைச் சொல்லுகின்றது. ஆறுகளையும், கடற்கரைகளையும், தீவுகளையும் ஜனங்கள் இன்னவிதமாக உபயோகிக்கிறார்களென்றும் புஸ்தகம் சொல்லுகின்றது.

உன் படுக்கை அறையைப்பற்றி நான் உன்னைக்கேட்டால் நீ என்ன செய்வாய்? அதன் வடிவத்தைப்பற்றியும் பருமனைப்பற்றியும் பேசுவாய். உடனே நான் "அது இருக்கட்டும்; நிறுத்து. அந்த அறை எந்த வீட்டில் இருக்கிறது? எந்த வீதியில்? எந்தக் கிராமத்தில்? அவைகளை முதலில் சொல்லு" என்று கேட்பேனல்லவா? அப்படியே சென்னை ராஜதானியின் விவரத்தைக் கற்க ஆரம்பிக்கையில், "இந்த ராஜதானி எங்கே இருக்கிறது? இந்தியாவின் எந்தப் பாகத்தில்? பூகோளத்தின் எந்தப் பக்கத்தில் இருக்கிறது? படத்தில் காட்டு" என்று முதல் முதலில் கேட்பேன்.

## 2. இந்தியா.

நாம் வசிக்கும் கிராமம் ஒரு தாலூகாவின் பாகம். தாலூகாவோ ஜில்லாவின் ஒரு பாகம்; நமது ஜில்லா சென்னை மாகாணத்தின் ஒரு அதுபோல் நமது மாகாணமானது இந்தியா என்னும் விசாலமான நிலத்தின் ஒரு கும். அந்த இந்தியாவோ ஆசியா கண்ட ஒருபாகம்; ஆசியாவானது உலகத்திலுள்ள பூபாகங்களான கண்டங்களுள் ஒன்று; ளத்தையாவது, பூகோள படத்தையாவது தால், ஆசியாகண்டம் இன்ன இடத்தில் கிறதென்பது தெரியும். அதுபோலவே கண்டத்துப் படத்தைப் பார்த்தால் வின் இன்னபாகத்தில் இந்தியா இ தென்று தெரியும். ஆசியாவின் தென்பா இந்தியா இருக்கிறது; இந்து மகாசமுத்தி முன்னே சாய்ந்து நீண்டிருக்கிறது; மூன் கங்களிலும் சமுத்திரத்தால் சூழப்பட்டி தால் அது ஒரு பெரிய த்வீபகற்பமாகு

### இமயமலைகள்.

படத்தைப் பார்த்தவுடன் இந்தியாவ மலைத் தொடர்களினால் ஆசியாவின் மற்றப் களிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறது என்று கிறதல்லவா? வடக்கே மிகவும் பெரிய ம வரிசையாக இருக்கின்றன. அவை ஒரே ரல்ல; பல தொடர்கள் சேர்ந்த அடுக்க அவைகளுக்கு இமய மலைகள் என்று அவைகளின் மற்றொரு பக்கத்தில் இரு திபேத்து என்னும் பீடபூமி. அது மிகவும் மானது. அந்த மலைகளைத் தாண்டுவது மிகவு டம்; அவற்றின் வழியாக ஒருவரும் இந்தி குள் ஒருகாலத்திலும்படையெடுத்துவரமுடி

இந்தியாவின் வடகிழக்கில் சுலைமான் னும் வேறு மலைத்தொடர்கள் இருக்கி அவை இமயமலைகளின் மேற்குக்கோடியிலி அரபிக்கடல் வரையில் பரவியிருக்கி அவை இந்தியாவுக்கும் ஆப்கானிஸ்தானம் சில்தானம் என்னும் தேசங்களுக்கும் மத் உள்ளவை. இமயமலைகளின் கிழக்குக் விருந்து வேறு மலைத்தொடர்களும் குன்று தெற்கே வங்காளக் குடாக்கடல் வரையில் யுள்ளன; அவை பர்மா தேசத்தை இந் னின்றும் பிரிக்கின்றன. இதனால் வ வடமேற்கிலும், வடகிழக்கிலும் இந்தியா மலைத்தொடர்களினால் காக்கப்பட்டு தென்று தெரிகிறது. இந்தியாவின் மற்ற கங்களிலெல்லாம் சமுத்திரம் இருப்பதைப் தெரிவிக்கிறது.

### இந்தியாவின் பெரிய சமநிலங்கள்.

இமயமலைகளுக்குத் தெற்கேவிஸ்தாரமா பூமியொன்று இருக்கிறது; அது மிகவும் பெ

அது ஏறக்குறையத் தட்டையாக இருக்கிறதென்று சொல்லலாமே அல்லாமல், முழுவதும் தட்டையானதென்று சொல்லமுடியாது. அந்தச் சமபூமியின் மேற்குப் பாதியிலுள்ள ஆறுகள் மேற்கே ஓடிச் சிந்துநதியுடன் கலந்து அரபிக்கடலில் விழுகின்றன; கிழக்கே பற்பல ஆறுகள் தோன்றிக் கங்கையோடாவது பிரம்மபுத்திரா நதியோடாவது சேர்ந்து வங்காளக் குடாக்கடலில் விழுகின்றன. இந்த ஆறுகளெல்லாம் இமயமலைகளில் உள்ள பள்ளத்தாக்குகளில் உற்பத்தியாகின்றன; அந்த மலைகளின்மீது பெய்யும் பனியும் மழையுமே அவைகளுக்கு வேண்டிய ஜலத்தைக் கொடுப்பவை.

இந்த நதிகளையே மேற்சொல்லிய சமபூமிகளின் தோட்டக்காரர்கள் என்று சொல்லலாம். அநேக ஆயிரம் வருஷங்களாக இவை அந்த மலைகளிலிருந்து செழிப்பான மண்ணை வாரிக்கொண்டு வந்திருக்கின்றன. வெள்ளம் எடுக்கும்போது இவை அந்த மண்ணைச் சமநிலங்களின்மேலே பரப்பி மழமழப்பாக்கி அவைகளை மட்டப்படுத்துகின்றன. அந்தச் சமநிலங்கள் உலகத்திலுள்ள நிலங்கள் எல்லாவற்றிலும் மிகவும் செழிப்பானவையென்றும், நல்ல நீர்வளமுள்ளவையென்றும், சிறந்த பாய்ச்சல் உள்ளவையென்றும் சொல்லும்படி இந்த ஆறுகள் செய்திருக்கின்றன. அங்கே மனிதர்களின் உணவுக்கு உபயோகமான பயிர்களெல்லாம் எளிதில் முளைத்துச் செழிப்பாக வளரும். ஆகையால், அந்தச் சமபூமிகளில் ஜனங்கள் அதிகமாக வசிக்கிறார்கள்; இந்தியாவின் மற்றப் பாகங்களைக்காட்டிலும் அங்கே கிராமங்களும் பட்டணங்களும் அதிகம். அவைகள் இருக்குமிடம் இந்தியாவில் மிகவும் முக்கியமான பாகமென்று நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அந்தச் சமவெளிகளில் டில்லி, லாகூர், ஆக்ரா, கான்பூர், லக்னோ, அலகபாத்து, காசி, பாட்னா, கல்கத்தாமுதலிய பிரசித்தமான பல பட்டணங்கள் இருப்பதைப் படத்தில் காணலாம்.

### தக்காணத்துப் பீடபூமி.

மேலேசொன்ன சமபூமிகளுக்குத் தெற்கேயுள்ள நிலம் உயரமானதென்று படம் காட்டுகிறது. அதன்வழியாக மலைத்தொடர்கள் செல்லுகின்றன; ஆனால், அவை இமயமலைகளைப்போல் அதிக உயரமானவையல்ல. இந்தியாவில் உயரமாக உள்ள இந்தப் பாகம் தக்காணத்துப் பீடபூமி என்று சொல்லப்படும். இந்தியாவில் த்வீபகல்பமான பாகத்தின் விசேஷமான இடத்தை இந்தப் பீடபூமியே வியாபித்திருக்கிறது.

ஆறுகள் பெரும்பாலும் கிழக்குப் பக்கமாக ஓடி வங்காளக் குடாக்கடலில் விழுகின்றன; இரண்டுமாத்திரம் மேற்கேயோடி அரபிக்கடலில் விழுகின்றன: சில சிறிய நதிகள் வடக்கேயோடிக் கங்கையோடு கலக்கின்றன. இந்தப் பீடபூமியின் மண் மேற்சொல்லிய சமபூமிகளின் மண்ணைப்போல் அவ்வளவு செழிப்பானதல்ல. இங்கே பெய்யும் மழையும் கொஞ்சம்; கோடைநாளில் அநேகம் ஆறுகளில் ஜலம் வற்றிப்போகும். ஆகையால், தக்காணம் அந்தச் சமபூமிகளைப்போல் செழிப்பாக இல்லை. இங்கே சில பயிர்களே விளைகின்றன. ஜனக்கூட்டமும் அதிகமில்லை; கிராமங்களும் பட்டணங்களும் குறைவு. முக்கியமான பட்டணங்கள் நான்கே இருக்கின்றன. அவையாவன:—நாகபுரி (நாகப்பூர்), புனா, ஹைதராபாத், பங்களூர்.

### தாழ்ந்திருக்கும் கடற்கரைகள்.

இந்தியா த்வீபகற்பம் முழுவதுமே பீடபூமி அல்ல. கடலோரமாக இரண்டு பக்கங்களிலும் தாழ்வான துண்டு நிலம் நீளமாகப் பரவியிருக்கிறது. இதைப் படத்தில் காணலாம். கிழக்கே உள்ள துண்டுநிலம் சங்காநதியின் முகத்துவாரத்திலிருந்து கன்னியாகுமரிமுனை வரையில் வியாபித்திருக்கிறது. அது வடக்கே ஒடுக்கமாகவும், தெற்கே அகலமாகவும் உள்ளது. அதில் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி என்னும் நான்கு நதிகளின் டெல்டாக்கள் அடங்கியிருக்கின்றன.

மேற்குக்கரை முழுவதிலும் மற்றொரு துண்டு நிலம் பள்ளமாக இருக்கிறது. அது அரபிக்கடலுக்கும் மேற்குத் தொடர்ச்சிமலை என்னும் நீண்ட மலைத்தொடருக்கும் மத்தியில் இருக்கிறது. கிழக்குக்கரை நிலத்தைக்காட்டிலும் அது அகலக் குறைவானதென்பதைப் படத்திலிருந்தே தெரிந்துகொள்ளலாம்.

கிழக்குத்தீரவெளியில் பெரும்பாகமும், மேற்குத்தீரவெளியில் ஒரு பாகமும், தக்காணத்துப் பீடபூமியில் சிறிதுபாகமும் சென்னை மாகாணத்தில் சேர்ந்திருக்கின்றன.

## 3. படத்தைப்பற்றிய விஷயங்கள்;

### இந்தியா படத்தில் நமது மாகாணநிலை.

(குறிப்பு.) இந்தப் புஸ்தகத்தின் கடைசியில் உள்ள படங்களின் உதவியைக்கொண்டு படித்தால் இந்தப் பாடத்திலும் பின்னுள்ள பாடங்களிலும் உள்ள விஷயங்கள் நன்றாக விளங்கும்.

சென்னை ராஜதானி அல்லது சென்னை மாகாணம் என்பது இந்தியாவின் எந்தப்பாகத்தில்


நெம்பர் 10.
சென்னை ராஜதானி
(இயற்கையமைப்புப்படம்)
மைல் காட்டும் அளவுகோல்.
100 50 0 100
குறிப்பு அட்டவணை.
ராஜ. ராஜமகேந்திரம்
அன. அனந்தபுரம்
ஹி. ஹிந்துபுரம்
பங். பங்களூர்
மை. மைசூர்
காஞ். காஞ்சீபுரம்
சே. சேலம்
ஈ. ஈரோடு
கோய. கோயம்புத்தூர்
பா.க. பாலக்காட்டுக்கணவாய்
உ. உதகமண்டலம்
தொ. தொட்டபெட்டா
ஷோ. ஷோரனூர்
எர் எர்ணாகுளம்
ஆமு. ஆனைமுடி
திண். திண்டுக்கல்
கோ. கோடைக்கானல்
திச். திருச்சிராப்பள்ளி
கும். கும்பகோணம்
திநெ. திருநெல்வேலி
ராமே. ராமேசுவரம்
தனு. தனுஷ்கோடி
பம்பாய்
அரபிக்கடல்
வங்காளக் குடாக்கடல்.
இலங்கைத்தீவு
விஜயநகரம்
விசாகபட்டணம்
மசூலிபட்டணம்
பழவேற்காட்டுத்தீவுகள்
பழவேற்காட்டேரி
சென்னபட்டணம்
புதுச்சேரி
நாகபட்டணம்
பாக்ஸ் ஜலசந்தி
மங்களூர்
தலச்சேரி
கொச்சி
திருவனந்தபுரம்
தூத்துக்குடி
மன்னார்குடா
கன்னியாகுமரிமுனை
கொழும்பு

இருக்கிறது? படத்தைப்பார்த்தே இதனை நன்ருகத் தெரிந்துகொள்ளலாம்.

பம்பாய் ராஜதானி மேற்குக்கரையில் இருக்கிறது. சில்கா ஏரியிலிருந்து அதன் தென்கோடி வரையில் கிருஷ்ணு, துங்கபத்திரா என்னும் நதிகளின் வழியே தென்மேற்காக ஒரு சாய்வான கோட்டை இழு. இதனுல் த்வீபகல்பத்தின் நுனிப்பாகம் பிரிந்துபோம்; அதிலிருந்து மைசூர் சம்ஸ்தானத்தையும் குடகு ராஜ்யத்தையும் நீக்கிவிட்டால் பாக்கிநிற்பதே சென்னை ராஜதானியாகும். இந்தியாவின் படத்தில் நமது மாகாணத்தின் எல்லைவழியாக இந்தக் கோடு போகும் வழியே போனுல், பேகார்—ஒரிஸ்ஸா, மத்திய மாகாணங்கள், ஹைதராபாத் சம்ஸ்தானம், பம்பாய், மைசூர் சம்ஸ்தானம் ஆகிய இவை முறையே காணப்படும். மற்றப் பக்கங்களையெல்லாம் கடல் சூழ்ந்திருக்கின்றது.

தெற்கேயுள்ள இராமேசுவரம் என்னும் சிறிய தீவும், வெகுதூரத்துக்கு அப்பால் அரபிக்கடலிலுள்ள லக்ஷத்தீவுகளும் நமது மாகாணத்தைச் சேர்ந்தவைகள். இலங்கைத்தீவு மட்டும் சேரவில்லை. அந்தத் தீவின் துரைத்தனமே வேறு மாதிரியானது. இந்தியா ராஜப்பிரதிநிதியின் அதிகாரத்திற்கு இலங்கை அடங்கியதன்று.

நமது மாகாணமானது இந்தியாவென்னும் த்வீபகற்பத்தின் ஒரு பாகமென்று சொல்லலாம். ஆனுல் இந்தப் பாகம் கோணலானது. மேற்குத் தீரவெளியைக்காட்டிலும் கிழக்குத்தீரவெளியில் விசேஷமானபாகம் அதில் அடங்கியிருக்கிறது.

## I. மேடுகளும், பள்ளங்களும்.

நமது மாகாணத்து நிலையை ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கு மற்ருெரு வழி உண்டு. அதாவது படத்தைப்பார்த்து இன்ன இன்ன பாகங்கள் சென்னை மாகாணத்தைச் சேர்ந்துள்ளன என்று தெரிந்துகொள்வதேயாம்:—

1. **கிழக்குத்தீரத்துச்சமவெளி:** வடக்கே சில்கா ஏரியிலிருந்து தெற்கே கன்னியாகுமரி முனை வரையில் கிழக்குக் கடலோரமாக நீளமான சமநிலமொன்று கரையிலிருந்து கிழக்குத் தொடர்ச்சிமலைவரையில் உள்நாட்டில் பரவிநிற்கின்றது. அந்த நிலத்தில் கோதாவரி, கிருஷ்ணு, காவேரி என்னும் நதிகளின் டெல்டாக்கள் அடங்கியிருக்கின்றன. அதன் வடபாகம் சில்கா ஏரி முதல் கிருஷ்ணு டெல்டாவரையில் குறுகலாக் உள்ளது. அதற்கு ‘வடசர்க்கார்’ என்று பெயர்.

தென்பாகம் அதிக அகலமானது; அது கிருஷ்ணு டெல்டாவிலிருந்து கன்னியாகுமரி வரையில் வியாபித்திருக்கிறது; அதற்குக் கர்நாடகம் என்று பெயர். சென்னை ராஜதானியின் கிழக்குக்கரையைச் **சோழமண்டலக்கரை** என்று சொல்லுவார்கள்.

2. **மேற்குத்தீரத்துத் துண்டுநிலம்:** மேற்குத் தொடர்ச்சிமலைக்கும் அரபிக்கடலுக்கும் மத்தியில் குறுகலான பள்ளத்தாக்கு ஒன்று இருக்கிறது. அது தெற்கே கன்னியாகுமரி வரையில் நீண்டிருக்கிறது. அங்கேயுள்ள சமுத்திரதீரத்துக்கு மலையாளதீரமென்று பெயர்.

3. **சென்னையில் தக்காணம்:** கிழக்குத் தொடர்ச்சி மலைக்குப் பின்னே குன்றுகள் அடர்ந்த தக்காணமென்னும் பீடபூமி இருக்கிறது. அது வரையில் நமது மாகாணத்தின் ஒருபகுதி வியாபித்திருக்கிறது. அதன் கிழக்கே கிழக்குத்தொடர்ச்சிமலையும் வடக்கே துங்கபத்திரா, கிருஷ்ணு என்னும் நதிகளும், தெற்கே மைசூர் சம்ஸ்தானமும் இருக்கின்றன. இந்தப் பிரதேசத்திற்கு விடப்பட்ட (Ceded) ஜில்லாக்கள் என்று பெயர். ஹைதராபாத்து நைஸாம் அவர்களால் இந்த ஜில்லாக்கள் சென்னை ராஜதானிக்கு விடப்பட்டன. அதனுல்தான் இவைகளுக்கு இப்பெயர் வந்தது. நமது மாகாணத்தில் சில பாகம் பள்ளத்தாக்காக இருக்கிறது; அது கடற்பக்கமாகச் சரிந்திருக்கிறது. சிலபாகம் மலைநாடாகவும் வேறு சிலபாகம் பீடபூமியாகவும் உள்ளன.

### படத்தினுல் தெரிந்துகொள்ளக்கூடியவை.

## II. மலைகள்.

சென்னை ராஜதானியின் பூகோள விவரத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கு மற்ருெரு வழியுண்டு. மலைத்தொடர்கள் இன்னபக்கமாக உள்ளனவென்று படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்வதேயாகும். **மேற்குத் தொடர்ச்சி மலையானது** மேற்குக்கரையின் வழியாகக் கன்னியா குமரிவரையில் போகிறது. அந்த மலையின் உயரம் ஒருமைல்கூட இராது; ஏறக்குறைய 4000 அடி இருக்கும். எவ்விடத்திலும் அது கடற்கரைக்குச் சமீபமாகவே இருக்கிறது. ஒரு இடத்தில் மாத்திரம் இடைவெளியொன்று காணப்படும். அதற்குப் **பாலைக்காட்டுத்திறப்பு** என்று பெயர். அந்தத் திறப்பு ஏறக்குறைய 20 மைல் அகலமுள்ளது. கிழக்கு வெளிகளிலிருந்து மலைத்தொடருக்குமேற்கேயுள்ள வெளிகளுக்குப்போகவும் வரவும் ஏற்ற சாலைகளையும் இருப்புப்பாதையையும் அமைக்க இந்தத் திறப்பு அனுகூலமாக உள்ளது. இதற்குத் தென்புறத்தில் உள்ள மலைத்தொடருக்கு **‘ஆனைமலை’** என்று பெயர். இந்த மலைகள் தென்னிந்தியாவில் உள்ள மலைத்தொடர்களில் மிகவும் சிறந்தவை. இவற்றின் கொடு

முடிக்கு 'ஆனைமுடி' என்று பெயர். அது கடல் மட்டத்திற்குமேல் கிட்டத்தட்ட 9000 அடி உயரமானது. தென்னிந்தியாவில் அதிக உயரமானமலை அதுவே. கிழக்குத் தொடர்ச்சிமலையின் தென்பாகத்திற்கு 'ஏலமலைகள்' என்று பெயர். ஆனைமலைகளின் கிழக்கே பழனிமலை இருக்கிறது.

**கிழக்குத் தொடர்ச்சிமலை:** இந்த மலைத்தொடர்போகும்வழியைப் படத்தில் பார். இது மேற்குத் தொடர்ச்சிமலையைப்போல் உயரமானதன்று. மேற்குத் தொடர்ச்சிமலை ஒரே தொடர்ச்சியாக இருக்கின்றது. கிழக்குத் தொடர்ச்சிமலை அப்படியில்லை. இதில் அங்கங்கே இடைவெளிகள் உண்டு பீடபூமியிலிருந்து வரும் ஆறுகள் கிழக்குப் பக்கமாக ஓடி இந்த இடைவெளிகளின் வழியே கடலில் விழுகின்றன. தக்காணத்துப் பீடபூமிக்கு இந்த மலைத்தொடரே எல்லை என்று சொல்லலாம். மேற்குத் தொடர்ச்சிமலை கடற்கரைக்கு அருகில் இருக்கிறது. கிழக்குத் தொடர்ச்சிமலையோ கடற்கரையிலிருந்து ஒதுங்கியிருக்கிறது; கொஞ்சம் கொஞ்சமாகக் கடற்கரையிலிருந்து உள்ளடங்கி நீலகிரியில் உயர்ந்து வளர்ந்திருக்கும் பெரிய மலைகளோடு கலக்கின்றது. இவ்விதம் கூடும் இடத்திலுள்ள மலைகளுள் அதிக உயரமானது 'தோட்டபெட்டா' (பெருமலை) என்று சொல்லப்படும். அது சமுத்திரமட்டத்துக்குமேல் ஒன்றரை மைல் உயர்ந்திருக்கிறது. கிழக்குத் தொடர்ச்சிமலைக்கு ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு பெயர் வழங்கிவருகிறது. கிருஷ்ணுவுக்குத் தெற்கே அதற்கு நல்லமலை என்று பெயர். இந்தத் தொடர் அங்கங்கே கொஞ்சம் முன்னே நீண்டு பிதுங்கியிருக்கிறது. அந்தப் பிதுக்கங்களில் ஒன்றுக்கு நகரிமலை என்று பெயர். மப்பு மந்தாரம் இல்லாத தினத்தில் நகரிமலையைச் சென்னபட்டணத்திலிருந்தே பார்க்கலாம். சேலத்துக்கு அருகில் மற்றொரு பிதுக்கம் இருக்கிறது. அதற்குச் சேர்வராயமலை என்று பெயர்.

## III. நதிகள்.

மற்றொரு விதமாகவும் நமது மாகாணத்துப் பூமி விவரணத்தை நாம் தெரிந்துகொள்ளலாம். அதாவது, இந்த மாகாணத்தில் ஓடும் நதிகளைக் கொண்டு தெரிந்துகொள்வதேயாம். இந்த நதிகள் பெரும்பாலும் கிழக்குமுகமாக ஓடி வங்காளக் குடாக்கடலில் விழுகின்றன. சில நதிகள் மட்டும் மேற்குமுகமாக ஓடி அரபிக்கடலில் விழுகின்றன. எந்த நதியும் மேட்டிலிருந்து பள்ளத்துக்கு ஓடும்.

**வங்காளக் குடாக்கடலில் விழும் நதிகள்:** இவைகளுள் முக்கியமானவை கோதாவரி, கிருஷ்ணு, பெண்ணையாறு, பாலாறு, பொன்னையாறு, காவேரி, வைகை, தாமிரபர்ணி. இவைகளைக் காட்டிலும் சிறிய ஆறுகள் பல உண்டு.

ஆறுகள் எல்லாவற்றிலும் பெரியது கோதாவரி. அது பாயும் பிரதேசம் எவ்வளவு பெரியதாக இருக்கிறது பார்! அது நமது மாகாணத்துக்கு வெளியே வெகுதூரத்திலுள்ள மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது. அது உற்பத்தியாகும் இடத்திற்கும் அரபிக்கடலுக்கும் 50 மைல் தூரந்தான் இருக்கும். அது பெரும்பாலும் ஹைதராபாத்தில் அடங்கிய தக்காணத்துப் பீடபூமியின் வழியாக ஓடுகிறது. அவ்விடத்தில் பல பெரிய உபநதிகள் அதனோடு வந்து கலக்கின்றன. பிறகு, அது கிழக்குத்தொடர்ச்சி மலையில் ஓர் இடுக்கு வழியாகப் பாய்கிறது. அந்த இடுக்கு வழி அகலமாக இராவிட்டாலும் ஆழமானது. அதற்குப்பிறகு அது போகும் வழி கஷ்டமானதன்று. சமமாக இருக்கிற சமுத்திரதீர வெளியின் வழியாக ஓடிக் கடலில் விழுகின்றது. அது கடலில் விழுகையில் பல கிளைகளாகப் பிரியும். அதனால் அதனுடைய டெல்டா பெரியதாக இருக்கிறது.

கிருஷ்ணுநதியும் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, கற்பாறை மிகுந்த பீடபூமியின் வழியாக ஓடுகின்றது. இந்த நதியும், இதன் உபநதியான துங்கபத்திராவும் கொஞ்ச தூரம்வரையில் விடப்பட்ட ஜில்லாக்களுக்கு எல்லையாக இருக்கின்றன. படத்தில் இதைக் கவனித்துப் பார். பெஸ்வாடா என்னும் நகரத்தில் கிருஷ்ணு நதி கிழக்குத்தொடர்ச்சி மலையின் ஓர் இடுக்கு வழியாகச் சென்று சமுத்திர தீரவெளியில் பிரவேசிக்கிறது. கோதாவரியைப்போலவே இதுவும் இவ்விடத்தில் அகலமாக உள்ளது. அதனால், ஒரு பெரிய டெல்டா உண்டாகியிருக்கிறது.

**பெண்ணையாறு, பாலாறு, பொன்னையாறு:** இவை மூன்றும் சிறிய ஆறுகள். படத்தில் இவற்றின் போக்கைக் கவனித்துப் பார். இவை மூன்றும் மைசூர் பீடபூமியிலே ஒன்றுக்கொன்று சமீபமாக உற்பத்தியாகின்றன; கிழக்குத்தொடர்ச்சி மலையின் வழியாக இவை சமுத்திர தீரவெளியில் பாய்ந்து கடலில் விழுகின்றன. இவைகளின் முகத்துவாரங்கள் வெகுதூரம் விலகி இருக்கின்றன. இதைக் கவனித்துப் பார். இவை ஆழமான நதிகளல்ல. அதனால், இவைகளில் படகுகள் செல்ல முடியாது.

**காவேரி:** இது வெகு தூரத்துக்கு அப்பால் உள்ள மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி

றது. அங்கிருந்து கிழக்கே மைசூர் சமஸ்தானத்தில் அடங்கிய தக்காணத்துப் பீடபூமியின் வழியாக இது செல்லுகிறது; நமது மாகாணத்துக்கும், மைசூர் சமஸ்தானத்துக்கும் மத்திய எல்லையில் [illegible] இருக்கிறது. அங்கே காவேரி அதிக உயரத்திலிருந்து மிகவும் வேகமாக விழும். அதற்கு, 'சிவசமுத்திரத்து நீர்வீழ்ச்சி' என்று பெயர். மலைநாட்டிலிருந்து காவேரி அவ்விதம் விழுந்து வந்து பிறகு கிழக்கே சமதரையில் ஓடுகிறது. அப்பால் திருச்சிராப்பள்ளிவரையில் சென்று ஸ்ரீரங்கம் என்னும் புண்ணியஸ்தலத்தில் இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. அந்த இரண்டு கிளைகளுக்கும் நடுவிலேதான் ஸ்ரீரங் மென்னும் தீவு உள்ளது. இந்த ஊருக்குக் கிழக்கே காவேரி பல கிளைகளாகப் பிரிகிறது. அந்தக் கிளைகள் எல்லாம் தாழ்ந்து சமமாக இருக்கும் பிரதேசத்தின் வழியாக ஓடிக் கடலில் விழுகின்றன. அவைகளுள் வடக்கேயுள்ள கிளைக்கு, **கோள்ளிடம்** என்று பெயர்.

**வைகையாறு:** இது மேற்குத்தொடர்ச்சி மலையின் கிழக்குப் பக்கத்தில் உள்ள சரிவுகளில் உற்பத்தியாகிறது. பழனி மலையிலிருந்து உபநதிகள் அதில் வந்து கலக்கின்றன. பிறகு அது மதுரையின் வழியாக ஓடி, 'பாக்' என்னும் ஜலசந்தியில் விழுகிறது. அந்த ஜலசந்தி அதிக அகலக் குறைவானது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நடுவிலுள்ள ஜலசந்தி அதுதான்.

**தாமிரபர்ணியாறு:** இது மேற்குத்தொடர்ச்சி மலையில் கிளம்பி, திருநெல்வேலி என்னும் பட்டணத்தைக் கடந்து போய், மன்னார்குடாக்கடலில் விழுகிறது.

பெரிய மூன்று ஆறுகளைத் தவிர மற்றவைகள் எல்லாம் கோடைக்காலத்தில் பெரும்பாலும் வறண்டிருக்கும்.

**அரபிக்கடலில் விழும் நதிகள்:** மேற்குத்தொடர்ச்சிமலையில் கடலின் பக்கமாக உள்ள சரிவுகளில் அதிக மழை பெய்யும்; அதனால், அவற்றிலிருந்து அநேகம் ஆறுகள் உற்பத்தியாகி மலையாளதீரத்தில் பாய்கின்றன. மழைநாளில் அவைகளில் ஜலம் நிறைந்திருக்கும். ஆனால், அவைகள் கடற்கரைக்கு அருகிலேயே உற்பத்தியாவதால், கிழக்கேயுள்ள ஆறுகளைக்காட்டிலும் நீளக்குறைவாக இருக்கின்றன. மலைகளை விட்டிறங்கி அவைகள் சமநிலத்தில் பாயும் இடங்களில் படகுகள் விசேஷமாக ஓடுகின்றன. திருவாங்கூர் சமஸ்தானத்தில் **பெரியாறு** என்னும் நதியையும், அப்பால் அதற்கு வடக்கே உள்ள **பொன்னணியாறு, பெய்பூராறு** என்பவைகளையும் படத்தில் பார்க்கலாம்.

## IV. ரேயில்வே' பிரயாணங்கள்.

[illegible] த்தைக் கற்றுக்கொள்வதற்குச் சில வழிகளை மேலே தெரிந்துகொண்டோம். ஆனால் அவைகளைக் காட்டிலும் சிறந்த வழியொன்று இருக்கிறது. அதாவது அங்கங்கே போகும் இருப்புப்பாதைகளின் வழியாகப் புகைவண்டிகளில் ஏறிப்போய் அந்த அந்த இடங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளுதல்.

**முதலில், கிழக்குத்தீரவெளியின்** வழியாக வடக்கே கல்கத்தாவுக்குப் போகும் இருப்புப் பாதையில் பிரயாணஞ் செய்வதாக வைத்துக் கொள்வோம் வழி முழுவதிலும் நமது இடது பக்கத்தில் கிழக்குத்தொடர்ச்சிமலை கண்ணுக்குத் தெரியும். வலதுபக்கத்தில் கடல் இருக்கிறது. ஆனால், சில இடங்களில் மாத்திரம் சமுத்திரத்தை நாம் பார்க்கும்படியாக இருப்புப்பாதை கரையை ஒட்டிச் செல்லுகின்றது. அது செல்லும் வழியெல்லாம் சமமான கடற்கரைநிலம். ஆகையால், இருப்புப்பாதை போடுவதற்காக நிலத்தைச் சமமாக்கவேண்டிய கஷ்டம் இல்லை. ஆனால், கிழக்குத் தொடர்ச்சிமலையிலிருந்து அநேகம் ஆறுகள் உற்பத்தியாகிப் பள்ளத்தாக்குகளின் வழியாகப் பாய்ந்து கடலில் விழுகின்றன. அந்த ஆறுகளின்மேல் புகைவண்டிகள் ஓடுவதற்குப் பாலங்கள் போடுவது பெருத்த கஷ்டமாயிற்று. அந்தப் பாலங்களுள் மிகவும் பெரியவை இரண்டு. ஒன்று கிருஷ்ணாநதிப் பாலம்; மற்றொன்று கோதாவரிநதிப் பாலம்.

கிருஷ்ணாநதியின் பாலம் பெஸ்வாடா என்னும் ஊரில் கட்டப்பட்டிருக்கிறது; கோதாவரிநதியின் பாலம் ராஜமகேந்திரம் என்னும் நகரத்தில் கட்டப்பட்டிருக்கிறது. கிருஷ்ணாநதியின் பாலத்தில் பன்னிரண்டு வளைவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு வளைவும், 300 அடி நீளம் இருக்கும். கோதாவரியின் பாலம் ஒன்றரை மைலுக்கு மேல் நீளமானது.

நாம் பிரயாணம் செய்யும்போது வழியில் நெல் வயல்களும், தோட்டங்களும், கிராமங்களும் இருக்கின்றன. மிகவும் செழிப்பான பாகங்கள் ஆறுகளின் கரைகளையடுத்த இடங்களேயாம். கிருஷ்ணாவின் டெல்டாவும், கோதாவரியின் டெல்டாவும் மிகவும் விஸ்தாரமான சமநிலங்கள். நாம் அவைகளின் வழியாகப் போகும்போது பெரிய தோட்டத்தில் போவதுபோல் இருக்கும். எங்கே பார்த்தாலும் வயல்கள் மிகவும் நெருங்கி


நெம்பர் 10.
சென்னை ராஜதானி
(இயற்கையமைப்புப்படம்)
மைல் காட்டும் அளவுகோல்.
100 50 0 100
அரபிக்கடல்
வங்காளக் குடாக்கடல்.
இலங்கைத்தீவு
பம்பாய்
மர்மகோவா
மங்களூர்
கண்ணனூர்
தலச்சேரி
கள்ளிக்கோட்டை
நீலகிரி
கொச்சி
ஆலப்புழை
கொல்லம்
திருவனந்தபுரம்
கன்னியாகுமரிமுனை
மன்னார்குடா
தூத்துக்குடி
தாம்பிரபர்ணி
பாக்ஸ் ஜலசந்தி
யாழ்ப்பாணம்
கொழும்பு
காலிமீர் முனை
நாகபட்டணம்
கூட்டலூர்
புதுச்சேரி
செங்கற்பட்டு
சென்னபட்டணம்
பழவேற்காட்டுத்தீவுகள்.
பழவேற்காட்டேரி
பெண்ணை
மசூலிபட்டணம்
பெஜவாடா
காகிநாடா
விஜயநகரம்
பிம்லிபட்டணம்
விசாகபட்டணம்
பல்லாரி
குறிப்பு அட்டவணை.
ராஜ. ராஜமகேந்திரம்
அன. அனந்தபுரம்
ஹி. ஹிந்துபுரம்
பங். பங்களூர்
மை. மைசூர்
காஞ். காஞ்சீபுரம்
சே. சேலம்
ஈ. ஈரோடு
கோய. கோயம்புத்தூர்
பா.க. பாலக்காட்டுக்கணவாய்
உ. உதகமண்டலம்
தொ. தொட்டபெட்டா
சோ. சோரனூர்
எர் எர்ணகுளம்
ஆமு. ஆனைமுடி
திண். திண்டுக்கல்
கோ. கோடைக்கானல்
திச். திருச்சிராப்பள்ளி
கும். கும்பகோணம்
திந. திருநெல்வேலி
ராம ராமேச்வரம்
தனு தனுஷ்கோடி

இருக்கின்றன. விளைவுகாலத்தில் விசேஷமான நெல்லை அறுத்துக் கண்டு முதல் செய்வார்கள்.

வழியிலுள்ள முக்கியமான பட்டணங்கள் படத்தில் காணப்படுகின்றன. அவையாவன:—நெல்லூர், பெஸ்வாடா, ராஜமகேந்திரம், (கடற்கரையில்) விசாகபட்டணம், விஜயநகரம், பர்ஹாம்பூர். அங்கிருந்து கடைசியில் நாம் 'சில்கா' ஏரியைக் கடந்துபோகிறோம். அந்த ஏரிக்கு அப்பாலுள்ள இடமே நமது ராஜதானியின் வடக்கு எல்லையாகும். சென்னையிலிருந்து சில்கா ஏரி ஏறக்குறைய 700 மைல் தூரத்தில் இருக்கிறது. கல்கத்தா அதற்கு அப்பால் 300 மைல் தூரத்தில் உள்ளது.

**இரண்டாவது பிரயாணம்:** பிறகு சென்னையிலிருந்து வடமேற்கே பிரயாணஞ் செய்வோம். உள்நாட்டில் சமுத்திர தீரவெளியின் வழியாக ஏறக்குறைய ஐம்பதுமைல் தூரம் போனபிறகு **அரக்கோணம்** ஜங்ஷன் வருகிறது. அங்கிருந்து பம்பாய்க்குப் பிரிந்து போகிற இருபுப்பாதையில் நாம் போகவேண்டும். சிறிதுதூரத்துக்கு அப்பால் அந்தப் பாதை சமநிலத்தில் போகவில்லை. பிறகு அது மலைக்கணவாய்களின் வழியாகத் தக்காணத்துப்பீடபூமியின்மேல் ஏறுகிறது. கடப்பை என்னும் ஊரின் வழியாக நாம் **குந்தக்கல்** என்னும் இடத்திற்குப் போகிறோம். போகும்போது பெண்ணையாற்றையும், அதன் உபநதிகள் பலவற்றையும் கடக்கிறோம். நமக்கு நான்கு பக்கத்திலும் உள்ள நிலம் பீடபூமி. எந்தஇடத்திலும் மரஞ் செடிகள் முளைக்காத வெறுங் குன்றுகளும் பாறைகளும் காணப்படுகின்றன.

குந்தக்கல் என்பது தக்காணத்தில் விடப்பட்ட ஜில்லாக்களிலுள்ள இருப்புப்பாதைகளுக்கு மத்தியஸ்தானம். அதிலிருந்து பல பக்கங்களுக்கு இருப்புப்பாதைக் கிளைகள் பிரிந்துபோவதைப் படத்தில் பார்க்கலாம். குந்தக்கல்லுக்கு அப்பால் ஏறக்குறைய அறுபதுமைல் தூரத்தில் துங்கபத்திரா நதியைப் பார்க்கிறோம். அங்கே அழகான பாலம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. பிறகு நமது மாகாணத்தின் எல்லையைவிட்டு ஹைதராபாத் சமஸ்தானத்தில் செல்லுகிறோம். அதுவரையில் சென்னையிலிருந்து நாம் 350 மைல் தூரம் பிரயாணம் செய்துவந்தோம்; வங்காளக் குடாக்கடலுக்கும் அரபிக்கடலுக்கும் நடுவில் வந்திருக்கிறோம்; ஆனால், பம்பாய்க்குப்போக இன்னும் பாதிவழி கூட ஆகவில்லை.

**மூன்றாவது பிரயாணம்:** பிறகு சென்னையிலிருந்து தென்மேற்கப் பக்கமாக த்வீபசற்பத்தின் வழியே மேலைத் தீரவெளிக்குப் போவோம். முன்போல் அரக்கோணத்துக்குப்போவோம்; அங்கிருந்து சிறிதுதூரம்போனவுடன் பாலாற்றுப் பள்ளத்தாக்குவருகிறது. அந்தப் பள்ளத்தாக்கானது ஆற்காட்டுக்கும் வேலூருக்கும் சமீபத்தில் இருக்கிறது. சுற்றுப் பக்கங்களில் உயரம்இல்லாத குன்றுகளைக் காணலாம். அப்பால், ஜோலார்பேட்டை ஜங்ஷன் வருகிறது. அங்கிருந்து வலதுபக்கமாக ஒரு கிளைப்பாதை போகிறது. அது மலைக்கணவாய்களின்மேல் ஏறி மைசூர் சமஸ்தானத்துக்குள் செல்லுகிறது. ஆனால், நாம் அந்தப் பாதையில் போகாமல் முதலில் வந்த பெரிய பாதையிலேயே செல்லுகிறோம். வழியில் பொன்னையாற்றைத் தாண்டுகிறோம். பிறகு சேலம் என்னும் பட்டணத்துக்குப் போய் அங்கிருந்து இரண்டொரு மணி நேரத்தில் ஈரோடு ஜங்ஷனுக்கு வருகிறோம். அங்கே காவேரி நதிக்கு அழகான பாலமொன்று கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்தினால் காவேரியாற்றைத் தாண்டுகிறோம்.

படத்தைப்பார்த்தால், நமது மாகாணத்தின் இரண்டு ஓரங்களுக்கும் ஏறக்குறைய நடுமத்தியில் நாம் வந்திருக்கிறோமென்று தெரியும். ஈரோடிலிருந்து பெரிய பாதையைவிட்டு நாம் தென்கிழக்கே திரும்பிப் போகலாம். அப்படிப் போனால், காவேரி நதியின் பள்ளத்தாக்கு வழியாகத் திருச்சிராப்பள்ளிக்குப் போய்ச் சேருவோம். ஆனால், நாம் அப்படிப் போகாமல் தென்மேற்காகவே பிரயாணஞ்செய்வோம். அப்பொழுது கிழக்குத் தொடர்ச்சிமலை மிகவும் சமீபத்தில் தெரியும். பிறகு போத்தனூர் ஜங்ஷனுக்கு வந்து சேருவோம்; அங்கே மரஞ்செடிகள் முளைக்காத சில கல்மலைகளின் சிகரங்களைக் காணலாம்.

போத்தனூர் ஜங்ஷனிலிருந்து ஒரு கிளைப்பாதை வடக்கே போகிறது. அந்தப் பாதை செங்குத்தான நீலகிரியின் அடிவாரத்தைச் சேருகிறது. அங்கிருந்து ஒரு இருப்புப்பாதை மலைவழியாகப் புறப்படுகிறது. அது போகும் வழி மலைகளுக்கு இடையிலுள்ள சமநிலமாகும். அந்தச் சமநிலம் அகலமாக இராது. அந்த வழியாக உதகமண்டலத்துக்குப் போகலாம். உதகமண்டலம் என்பது ஒரு மலை நகரம். அது கடல் மட்டத்துக்குமேல் 7000 அடி உயரத்தில் இருக்கிறது.

போத்தனூரிலிருந்து முக்கியமான இருப்புப்பாதை வழியாக மேற்கே பிரயாணம் செய்கையில், நமக்கு இரண்டு பக்கங்களிலும் உயரமான மலைகள் காணப்படுகின்றன. நாம் போகும் வழியானது மேற்குத் தொடர்ச்சி மலையில் ஏற்பட்டிருக்கும் ஓர் இடைவெளியாகும். அது மிகவும் குறுகலானது.

அந்த இடைவெளியைத்தான் 'பாலேக்காட்டுத் திறப்பு' என்பார்கள். அதன் வழியாகப் பொன்னுணியாறு மேற்கேயோடி அரபிக்கடலில் விழுகின்றது. இருப்புப்பாதையானது அந்த நதியின் பள்ளத்தாக்கில் சிறிது தூரம் செல்லுகின்றது. பிறகு வடக்கே திரும்பி, 'கள்ளிக்கோட்டை' என்னும் கடற்கரை நகரத்திற்கு வருகிறது. அங்கிருந்து கடற்கரைக்குச் சமீபத்திலுள்ள சமநிலத்தின் வழியாகச் சென்று, தலைச்சேரி, கண்ணனூர் என்னும் பட்டணங்களைக் கடந்து மங்களூருக்கு வருகிறது.

நாம் அந்த வழியில் போகையில் மேற்கே கடல் காணப்படுகிறது. கிழக்கே மேற்குத் தொடர்ச்சிமலை தெரிகிறது. அந்த மலைத்தொடர் நாம் போகும் இருப்புப்பாதைக்கு வெகுதூரத்தில் அடிவானத்தைச் சேர்ந்தாற்போல் இருக்கிறது. அதன்மீது மேகங்கள் படிந்திருக்கின்றன. இப்பொழுது நாம் சென்னையிலிருந்து நெடுந்தூரம் புகைவண்டி மார்க்கமாகப் பிரயாணம் செய்து வந்திருக்கிறோம். அதாவது 550 மைல் தூரம் வந்திருக்கிறோம். ஆனால் சென்னையிலிருந்து மங்களூருக்குக் குறுக்குப் பாதையாக வருவோமானால் ஏறக்குறைய 330 மைல் தூரந்தான் இருக்கும். அந்த இருப்புப்பாதையில் மங்களூரே கடைசி ஸ்டேஷன்; அதற்கு அப்பால் இருப்புப்பாதை போகவில்லை.

மங்களூருக்கு வடக்கே கடலோரமாகப் போனால் நூறு மைல் தூரத்திற்குள்ளாகவே பம்பாய் ராஜதானியை அடையலாம். கிழக்குப்பக்கமாக மலைத்தொடரைக் கடந்து போவோமானால் மைசூர் சம்ஸ்தானத்திற்கு வரலாம்.

**நான்காவது பிரயாணம்** இன்னுமொருமுறை சென்னையிலிருந்து புறப்படுவோம். இப்போது தென்னிந்தியா இருப்புப்பாதையின் வழியாகத் தெற்கே போவோம். இந்தப் பாதையானது கடற்கரையை யடுத்த விசாலமான சமநிலத்தில் போகிறது. காவேரி டெல்டா வரையில் கடற்கரைக்குச் சமீபமாகவே இந்த இருப்புப்பாதை செல்லுகிறதென்று படத்தினால் தெரிகிறது. பிறகு இந்தப் பாதை மேற்கே திரும்பித் தஞ்சாவூரின் வழியாகத் திருச்சிராப்பள்ளிக்குப் போகிறது. நாம் போகும்போது செங்கற்பட்டுக்குச் சமீபத்தில் பாலாற்றைக் கடக்கிறோம்; கூடலூரில் பெண்ணையாற்றின் டெல்டாவைத் தாண்டுகிறோம்; அதற்குத் தெற்கே கொஞ்சதூரத்தில் கொள்ளிடத்தைக்கடக்கிறோம். திருச்சிராப்பள்ளிபோய்ச் சேர்ந்த பிறகு அங்கிருந்து உள் நாட்டுக்குத் திரும்பிக் காவேரிக்கரையோடு போனால் ஈரோடு சேரலாம். ஆனால் நாம் அப்படிப் போகவில்லை; திருச்சிராப்பள்ளியிலிருந்து தெற்கே ஓடும் இருப்புப்பாதையில் போகிறோம். அவ்வாறு போனால், நாலைந்து மணிநேரத்தில் மதுரையை அடைவோம். அது வைகையாற்றங்கரையில் இருக்கிறது.

மதுரையில் இந்த இருப்புப்பாதை இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. ஒரு கிளைப்பாதை வைகைநதியை யடுத்துத் தென்கிழக்காக ஓடிக் கடலோரத்தில் உள்ள மண்டபம் என்னும் ஊருக்குப் போகிறது. அந்த இடத்திற்கும் இராமேசுவரமென்னும் தீவிற்கும் நடுவில் பாம்பன்கால்வாய் இருக்கிறது. அது அதிக அகலமானதன்று. அதன்மேல் புகைவண்டிபோவதற்காக ஒருபாலம் கட்டியிருக்கிறார்கள். அந்தப் பாலத்தின் வழியாக இருப்புப்பாதையானது மண்டபத்திலிருந்து இராமேசுவரத்திற்குப் போகிறது. அந்தத் தீவின் கோடியில் தனுஷ்கோடி இருக்கிறது. அதற்கும் இலங்கைக்கரைக்கு இப்பால் இருக்கும் ஒரு தீவுக்கும் 22 மைல் தூரமே இருக்கும். புகைக்கப்பலில் ஏறினால் தனுஷ்கோடியிலிருந்து இரண்டு மணிக்குள்ளாக இலங்கைக்குப்போய்ச் சேரலாம்.

மதுரையிலிருந்து தென்கிழக்கே திரும்பாமல் தெற்கே போகிற இருப்புப்பாதையில் போனால், மேற்கே வெகுதூரத்தில் மேற்குத்தொடர்ச்சி மலை தெரியும். வழியில் மணியாச்சி என்னும் ஒரு ரெயில்வே ஜங்ஷன் வருகிறது. அங்கிருந்து தூத்துக்குடிக்கு ஓர் இருப்புப்பாதை போகிறது. தூத்துக்குடி என்பது ஒரு துறைமுகம். அங்கிருந்து புகைக்கப்பலில் ஏறினால் ஒரே ராத்திரியில் கொழும்பக்குப் போகலாம். கொழும்பு என்னும் பட்டணம் இலங்கைத்தீவின் தலைநகரம். ஆனால், நாம் மணியாச்சியிலிருந்து அந்தப் பக்கம் திரும்பாமல் நேரே போகிறோம். நாம் போகும் பாதை மேற்குப்பக்கமாக வளைந்து திருநெல்வேலி என்னும் பட்டணத்துக்குப் போகிறது. திருநெல்வேலியானது தாமிரபர்ணியாற்றின் கரையின்மேல் இருக்கிறது. அந்த ஆற்றங்கரையில் உள்ள இடங்கள் எல்லாமே மிகவும் செழிப்பானவை.

தாமிர பர்ணியாறு மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து புறப்பட்டு மன்னார்குடாக்கடலிற்போய் விழுகிறது. புகைவண்டியில் ஏறி நாம் திருநெல்வேலிக்கு வந்தவுடன் மேற்குத்தொடர்ச்சி மலை சமீபமாகத் தெரியும். அங்கிருந்து நாம் வடமேற்கே திரும்பிப்போகையில் அந்த மலை நமக்கு இடது பக்கத்தில் இருக்கும். இருப்புப்பாதையானது காடுகள் அடர்ந்த மேட்டுநிலத்தில் நெடுந்தூரஞ் சென்று கடைசியில் அந்தக்காட்டிலிருந்து வெளிப்பட்டு மேட்டு நிலத்தின் மேற்குப்பக்கத்துச்

சரிவுகளுக்குப் போகிறது. அந்த வழி ஒடுக்கமாகவும் பள்ளமாகவும் இருக்கிறது. அது கடலோரத்துக்குச் சமீபமானது. அந்த வழியே கொல்லம் என்னும் பட்டணத்துக்குப் போய்ச் சேர்வோம். கொல்லம் அரபிக் கடலின் கரையில் உள்ள பட்டணம். அது திருவாங்கூர் சம்ஸ்தானத்தைச் சேர்ந்தது.

இப்பொழுது நமது மாகாணத்தில் ஏறக்குறைய எல்லா மூலைகளுக்கும் போய் வந்துவிட்டோம். நம்முடைய பிரயாணத்தில் வழி முழுவதும் பெரும்பாலும் கடலோரமாகவே இருக்கிறது; சில இடங்களில் வழி மலைத்தொடர்களின் பக்கமாக இருக்கிறது. அந்த வழிகளைப் படத்தில் கவனித்துப்பார்.

சென்னையிலிருந்து மெயில் வண்டியில் புறப்பட்டால், 30 மணி நேரத்துக்குள்ளாக எந்த ஸ்டேஷனுக்கும் போய்ச் சேரலாம்; அநேகம் ஸ்டேஷன்களுக்கு அதிசீக்கிரத்தில் போய் விடலாம்.

சில்கா ஏரியிலிருந்து சென்னைக்கு ஒரு நேர்க்கோட்டை இழுத்துப் பார்த்தால், அது ஏறக்குறைய 700 மைல் தூரத்தைக்காட்டும். அதே மாதிரி சென்னையிலிருந்து கன்னியா குமரிக்கு ஒரு நேர்க்கோட்டை இழுத்துப் பார்த்தால், அது ஏறக்குறைய 400 மைல் தூரத்தைக் காட்டும். சென்னை ராஜதானி ஒன்றரை லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. இந்தியாவில் பம்பாய் ராஜதானிக்கு அடுத்தபடியாகவுள்ளது நமது சென்னை ராஜதானி தான். இதைப் படத்தினால் தெரிந்து கொள்ளலாம்.

## 4. நமது மாகாணத்தின் சீதோஷ்ண நிலை.

சமநிலங்களையும் மலைகளையும் நதிகளையும் கடற்கரைகளையும் போய்ப் பார்ப்பதால் மாத்திரமே நமது மாகாணத்தைப்பற்றிய எல்லா விஷயங்களும் நமக்குத் தெரிந்துவிடுமோ? தரையைப் பார்ப்பது மட்டும் போதாது. ஆகாயத்தையும் உற்றுப் பார்க்கவேண்டும். மாகாணத்தின் சீதோஷ்ண ஸ்திதியைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்ளவேண்டும். சீதோஷ்ண ஸ்திதி யென்று சொல்லும்போது நாம் இரண்டு விஷயங்களைச் சொல்லுகிறோம்; வெப்பமா குளிர்ச்சியா என்பதையும், வறட்சியா, ஈரமா என்பதையும் குறிக்கிறோம்.

**வெப்பமுங் குளிர்ச்சியும்.** — உலகத்தில் வெப்பத்திற்கெல்லாம் காரணம் சூரியன்; சூரியனிடத்திலிருந்தே வெப்பம் உண்டாகிறது. ஆனால், அந்தச் சூரியன் உலகத்தில் உள்ள எல்லா இடங்களுக்கும் ஒரேவிதமான வெப்பத்தைத் தருவதில்லை; சில பக்கங்களில் வெப்பம் குறைவாக இருக்கிறது; வேறு சில பக்கங்களில் அதிகமாக இருக்கிறது. ஒரே இடத்திலும் சூரியன் வருஷம் முழுவதும் ஒரே மாதிரியாக வெப்பந் தருவதில்லை.

வெப்பமான காலம், குளிர்ச்சியானகாலம் என இரண்டு காலங்கள் உண்டு. குளிர்ச்சியான காலத்தைக்காட்டிலும் வெப்பமான காலத்தில் சூரியன் உச்சிவேளையில் ஆகாயத்தில் அதிக உயரத்தில் கிளம்புகிறது. ஆகாயத்தைக் கவனித்துப் பார்த்தவர்களுக்கு இந்த விஷயம் தெரிந்திருக்கும். ஆதலால், சீதோஷ்ண ஸ்திதிக்கு முக்கிய காரணமாக இருப்பது என்ன? சூரியகிரணமேயாகும்; பூமியின்மேல் சூரியகிரணம் சாய்வாக விழுந்தால் வெப்பம் குறைவாக இருக்கும்; நேராக விழுந்தால்வெப்பம் அதிகமாக இருக்கும். ஆகாயத்தில்சூரியன் எவ்வளவுக்கு எவ்வளவு உயரத்தில் போகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு வெப்பம் அதிகமாக இருக்கும். டிசம்பர் மாதத்தில் உச்சிவேளையில், சூரியன் அதிக உயரத்துக்குப்போவதில்லை. மே, ஜூன், ஜூலை மாதங்களில் சூரியன் நமது தலைக்கு நேரே இருக்கிறதென்று சொல்லலாம். பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் சூரியன்மேலும்மேலும்உயர்ந்துகொண்டே போவதால், நாளுக்குநாள் வெப்பம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் சூரிய வெப்பம் மிகவும் கடுமையாக இருக்கிறது. அப்பொழுது சூரியன் ஏறக்குறைய நமது தலைக்கு நேராகப் பிரகாசிப்பதுதான் அதற்குக் காரணம். செப்டம்பர் மாதத்தில் அதற்குக் கொஞ்சம் தாழ்வான இடத்திலிருந்து சூரியன் பிரகாசிக்கிறது. டிசம்பர்மாதக் கடைசிவரையில் சூரியன் அந்த நிலையிலிருந்து நாளுக்குநாள் தாழ்ந்துகொண்டே வருகிறது. உச்சியிலிருந்து சூரியன் ஆகாயத்தில் தாழ்ந்துகொண்டு வரும் தினங்களில் குளிர்ச்சி அதிகரித்துக்கொண்டு வரும்.

நாம் வசிக்கும்பிரதேசத்தில் நல்ல குளிர்காலத்திலும் சூரியன் வானத்தில் மிகவும் தாழ்வாக இருப்பதில்லை; சூரியன் நமக்கு எப்பொழுதும் அதிக உஷ்ணம் கொடுக்கிறது. ஆகையால், நாம் இருப்பது உஷ்ணமான பிரதேசமென்று சொல்ல வேண்டும்.

இந்தியாவிலிருந்து வெகுதூரம் வடக்கே போவோமானால் அங்கே இருக்கும் பிரதேசங்களில் சூரியன் ஜூன்மாதத்தில் அதிக உயரத்தில் இரு

ப்பதில்லை; டிசம்பர் மாதத்தில் அதிகமாகத் தாழ்ந்திருப்பதுமில்லை. அங்கே சூரியவெப்பம் நமது தேசத்தில் இருப்பதுபோல் கடுமையாக இராது; ஆகலால் அந்தப் பிரதேசங்களைச் சீதளமான பிரதேசங்கள் என்று சொல்லுகிறோம். வடக்கே வெகுதூரம் போனால், அங்கே சூரியன் குளிர் காலத்தில் பலநாள் வரையில் அடிவானத்துக்கு மேலே கிளம்புவதில்லை; தரையில் உறைபனியும் பனிக்கட்டியும் படிந்திருக்கும்.

குன்றுகளின்மேலும் மலைகளின்மேலும் ஏறிச் செல்வோமானால், அந்த இடங்கள் குளிர்ச்சியாக இருக்கும். தாழ்வான பள்ளத்தாக்குகளில் அவ்வளவு குளிர்ச்சி இருப்பதில்லை. உயரத்துக்குத் தகுந்தபடி குளிர்ச்சி அதிகமாகிறது. இமயமலையின் உச்சியில் சூரியன் நன்றாகப் பிரகாசித்தாலும், அங்கே படிந்திருக்கும் பனிக்கட்டியும் உறைபனியும் உருகுவதேயில்லை.

நமது மாகாணத்தில் பீடபூமியைக் காட்டிலும் பள்ளத்தாக்குகளில் வெப்பம் அதிகம்; குன்றுகளிலும் மலைகளிலும் இருப்பதைக் காட்டிலும் பீடபூமியில் வெப்பம் அதிகம். உயரமாக இருக்கும் நீலகிரியில் கோடைநாளிலும் குளிர் அதிகமாக இருக்கும்; ஜனங்கள் உஷ்ணத்தை வருவித்துக்கொள்ளும் பொருட்டு அங்கே இராத்திரிவேளையில் கணப்பு வைத்துக்கொண்டு குளிர் காய்கிறார்கள். குளிர்காலத்தில் இரவில் சில வேளை அவ்விடத்தில் தண்ணீர் உறைந்துபோம்.

### வெப்பத்தையுங் குளிர்ச்சியையும்பற்றிய வேறொரு விஷயம்.

தண்ணீரைக் காயவைப்பதற்கு அதிக உஷ்ணம் வேண்டியிருக்கிறது. அதாவது, தண்ணீர் கொதிக்கையில் அதிக உஷ்ணத்தை உட்கொள்ளுகிறது; வெந்நீர் ஆறிப் போவதற்குமுன் அதிலிருந்து அதிக உஷ்ணம் வெளிப்படுகிறது. நிலமோ அப்படியல்ல. அதி சீக்கிரத்தில் அது வெப்பத்தை அடைந்து அதி சீக்கிரத்திலே ஆறிப்போகிறது. குளிர்காலம் வந்தால், தரை அதி சீக்கிரத்தில் குளிர்ந்துபோகிறது; கடலோ உஷ்ணமடைந்தால் மிகவும் நிதானமாக ஆறுகிறது. ஆகையால், கடற்கரையிலிருந்து ஓதுங்கி இருக்கிற தரை குளிர்காலத்தில் சீக்கிரமாகக் குளிர்ந்துபோகிறது; கடற்கரைக்குச் சமீபமாக இருக்கிற தரை நிதானமாகக் குளிர்கிறது. குளிர்காலத்தில் கடலிலிருந்து வீசுங் காற்று வெப்பமாக இருப்பது தான் அதற்குக் காரணம். கோடையிலோ கடலிலிருந்து ஓதுங்கி இருக்கிற தரை சீக்கிரத்தில் வெப்பமடைகிறது; கடற்கரைக்கு அருகிலிருக்கும் தரை நிதானமாக வெப்பமடைகிறது. கோடையில் கடலிலிருந்து வீசுங்காற்று குளிர்ச்சியாக இருக்கிறது. இந்தப்படி, சமுத்திரத்தை அடுத்திருக்கும் ஊர்கள் கோடைநாளில் உள்நாட்டு ஊர்களைப்போல் அதிக வெப்பமாக இருப்பதில்லை; குளிர்காலத்தில் இவ்வளவு குளிர்ச்சியாகவும் இருப்பதில்லை.

வெப்பம் உள்நாட்டில் மாறுவதுபோலக் கடற்கரைக்குச் சமீபமான இடத்தில் மாறுவதில்லை. கடற்கரையை அடுத்திருக்கும் ஊர்களைக்காட்டிலும் கடற்கரையிலிருந்து ஓதுங்கி இருக்கும் ஊர்களில் கோடையில் வெப்பம் அதிகமாகவும், குளிர்காலத்தில் குளிர்ச்சி அதிகமாகவும் இருக்கும். ஏப்ரல், மே மாதங்களில் சென்னையைக்காட்டிலும் பல்லாரியிலும் சேலத்திலும் வெப்பம் அதிகம்; டிசம்பர் ஜனவரி மாதங்களில் குளிர்ச்சி அதிகம்.

**ஈரமும் வறட்சியும்:** ஒரு சட்டியில் தண்ணீரைவிட்டுக் காய்ச்சினால், அதிலுள்ள நீர் ஆவியாக மறைந்துபோகிறது. அது அழிந்துபோகாமல் ஆகாயத்தில் வாயுவோடு கலந்துவிடுகிறது. அதை நாம் கண்ணினால் பார்க்க முடியாது; ஆனாலும் அது அங்கே இருக்கிறது. சூரியன் என்பது ஒரு பெரிய தீ: கடல் என்பது மிகவும் பெரிய ஜலத்தொகுதி.

சட்டியின் கீழே எரியும் தீ அதிலுள்ள நீரை ஆவியாகச்செய்கிறது. அதுபோல், பூமியிலுள்ள நீர் சூரியனால் ஆவியாகிறது. வெப்பத்துக்கெல்லாம் காரணம் சூரியன் என்று சொல்லியிருக்கிறோம்; அதுபோலவே ஈரத்திற்கெல்லாம் முக்கிய காரணம் கடல். நதிகளிலும், ஏரிகளிலும், குளங்களிலும் உள்ள ஜலத்தில் ஒவ்வொருதுளியும் கடலிலிருந்தே வருகிறது. மேகத்திலிருந்து மழை வருகிறது; மேகம் நீராவியினால் உண்டாகிறது; கடலிலுள்ள நீர் சூரிய வெப்பத்தினால் வற்றி மேகமாக மேலே கிளம்புகிறது. அந்த மேகங்கள் காற்றில் அடிபட்டு ஆகாயத்தில் அங்குமிங்கும் அலைகின்றன.

ஒரு தேசத்தின் சீதோஷ்ணம் அங்கே வீசும் காற்றின் தன்மைக்குத் தக்கபடி இருக்கிறதென்று தெரிந்துகொண்டோம். காற்று இன்னவிதமாக வீசுகிறதென்றும் தெரிந்துகொண்டோம். சமுத்திரத்திலிருந்து மேகங்களை ஊருக்குள் காற்று அடித்துக்கொண்டு போனால் அந்த இடத்தில் நல்ல மழை பெய்யும்; நிலங்களும் செழிப்பாக இருக்கும். ஒரு தேசத்திலிருந்து மேகங்களைக் காற்று அப்பால் அடித்துக்கொண்டு போனாலும், ஒரு பக்கமாக அடித்துக்கொண்டு போனாலும் அந்தத் தேசத்தில் அதிக மழை பெய்யாது; சில நதிகள்மட்டுமே அவ்விடத்தில் இருக்கும்; பல

பாலைவனங்களைக் காணலாம். இதனால் சமுத்திரத்திலிருந்து மேகங்களை ஊருக்குள் காற்று அடித்துக்கொண்டு போகையில் கடற்கரைப் பிரதேசங்களில் மழை அதிகமாகவும் உள்நாடுகளில் குறைவாகவும் இருக்குமென்று நாம் ஊகித்துக் கொள்ளலாம். இந்துமகா சமுத்திரத்தின் மத்தியில் இந்தியாதேசம் அமைந்திருப்பது அதிருஷ்ட வசமே. ஏனென்றால், மேற்கே அரபிக் கடலிலிருந்தும், கிழக்கே வங்காளக்குடாக்கடலிலிருந்தும், அது மேகங்களை ஏற்றுக்கொள்ளக் கூடுமல்லவா?

## பருவக்காற்று.

காற்றானது காரணமில்லாமல், எந்தத்திக்கில் வேண்டுமானாலும் தற்செயலாக அடிக்குமென்று நாம் எண்ணக்கூடாது. காற்று வீசும் விதத்தை ஜனங்கள் கவனித்துத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இன்னவிதியை அனுசரித்துத் தான் காற்று அடிக்கிறதென்பதும் அவர்களுக்குத் தெரியும். காற்று ஒரு திசையை நோக்கி ஏன் அடிக்க வேண்டும் என்பதையும் வேறொரு திக்கை நோக்கி ஏன் அடிக்கவில்லை என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

சென்னையில் ஓர் உத்தியோகசாலை இருக்கிறது. அதற்கு **நக்ஷத்திரசாலை** அல்லது **நக்ஷத்திர ஆபீசு** என்று பெயர். அந்த ஆபீசுக்குத் தினந்தோறும் காலையில் பல பக்கங்களிலிருந்தும் தந்திகள் வருகின்றன. ஒவ்வொரு முக்கியமான இடத்திலும் சூரியவெப்பத்தின் அளவு எப்படி, காற்று எந்தப் பக்கமாக அடித்தது, எவ்வளவு மழை பெய்தது என்னும் விஷயங்கள் தந்திமூலமாக அந்த ஆபீசுக்கு வருகின்றன. முதல்நாள் நடந்த சமாசாரத்தை மறுநாள் காலையில் அந்த அந்த ஊரில் இருப்பவர்கள் தந்தி மூலமாகத் தெரிவிக்கிறார்கள். சூரியவெப்பத்தின் அளவு, காற்று வீசும் திக்கு, மழையின் பரிமாணம் ஆகிய இந்த மூன்றிலுள்ள வித்தியாசங்களை நாள்தோறும் கவனித்துப் பார்த்தால் சீதோஷ்ண ஸ்திதியின் மாறுபாடு இன்னவிதியை அனுசரித்திருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம்.

காற்றானது தற்செயலாக வீசுவதில்லை; வருஷத்தில் சில காலங்களில் ஒரு திக்கில் வீசுகிறது; அப்படியே வருஷந்தோறும் வீசுகிறது. அவ்விதம் கிரமமாக ஒரு திக்கில் காற்று வீசுகிற காலம் **பருவம்** எனப்படும். ஒரு வருஷத்தில் அப்படிப்பட்ட பருவங்கள் சில உண்டு. பருவங்கள் எல்லாம் சூரிய வெப்பத்தை அனுசரித்து ஏற்படுகின்றன. இதனால், காற்றின் மாறுபாடு சூரியவெப்பத்தை அனுசரித்தே யிருக்கிறதென்று நாம் ஊகிக்கலாம். ஜூன் மாதத்தில் சூரியவெப்பம் அதிகம். அப்போது சமுத்திரத்திலிருந்து பலமான காற்றொன்று புறப்பட்டு நாட்டுக்குள் வீசுகிறது. அந்தக் காற்றானது மேகத்தின் கூட்டங்களை அடித்துக்கொண்டு வருகிறது. அது தென்மேற்காக அடிக்கும். அது கோடைக்காற்று என்று சொல்லப்படும். இந்தப் பருவக்காற்று மிகவும் அதிசயமான காட்சியைக் கொடுக்கும். இது நமது மாகாணத்திற்குச் சொந்தமானது; இந்தியாவுக்கே சொந்தமானதென்றும் சொல்லலாம்.

இந்தக் காற்று வீச ஆரம்பிப்பதற்கு முன்பு ஏப்ரல் மாதத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையின் மேல் நாம் நிற்பதாக நினைத்துக்கொள்வோம். அப்பொழுது ஆகாயம்வெளுத்துத்தெளிவாக இருக்கிறது; சூரியன் நன்றாகப் பிரகாசிக்கிறது; சமுத்திரத்திலிருந்து இளங்காற்று வீசுகிறது. ஜூன்மாதக் கடைசியில் அத்தனையும் மாறிப்போம். சூரியன் கண்ணுக்குத் தெரிவதில்லை; வானத்தில் மேகங்கள் விரைந்துசெல்லுகின்றன. காற்றானது அவைகளை நாட்டுக்குள் அடித்துக்கொண்டு போகிறது; இடி முழங்குகிறது; மின்னல் மின்னுகிறது; மழை தாரை தாரையாகப் பெய்கின்றது; மலையாறுகள் உடனே பெருகுகின்றன. சில வேளைகளில் அந்தக் காற்றின் வேகம் அதிகமாகி மரங்களை வேருடன் பெயர்த்து எறியும். இந்தப் பருவக்காற்று வருஷந்தோறும் தவறாமல் ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் என்னும் நான்கு மாதகாலம் அடிக்கிறது. இந்தியா தேசத்தில் வறண்டு கிடக்கும் வயல்களுக்கு நீரைக் கொடுக்கும்படி செய்கிற பெருங்காற்று இதுவே. இந்தப் பருவக்காற்று வீசாவிட்டால் பயிர்கள் உண்டாக மாட்டா; புல் பூண்டுகள் வாடிப்போம்; குடிகளும் கால் நடைகளும் பஞ்சத்தினால் வருந்தும்.

இந்தப் பருவக்காற்று இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. ஒரு கிளை அரபிக்கடலின் வழியாக வீசிக்கொண்டு வந்து இந்தியாவின் மேற்குக் கரையின்மேல் மோதுகிறது. மலையாளம் மேற்குக் கரையில் இருப்பதால் அங்கே அந்தக் காற்று அடிக்கிறது. மற்றொரு கிளை வங்காளக் குடாக் கடலின் வழியாக வீசிக்கொண்டுபோய் அக்கரையிலுள்ள பர்மாதேசத்தின்மீது மோதுகிறது. இந்தக் காற்றில் சிறிதுபாகம் வடமேற்காகச் சுற்றிக்கொண்டு கங்காநதியின் முகத்துவாரங்களிலும் நமது மாகாணத்து வடகோடியிலுள்ள பிரதேசங்களிலும் தாக்குகிறது. வடகோடியிலுள்ள பிரதேசங்களாவன கோதாவரிக்கு வடக்கேயுள்ள ஜில்லாக்களாகும்.

## பருவக்காற்றும் மலைகளும்.

பருவக்காற்றினால் அடித்துக்கொண்டு போகப் படுகிற மழை நிலத்தின்மீது எல்லாவிடத்திலும் ஒரேமாதிரியாகப் பெய்வதில்லை. வழியில் மலைகள் தடுக்கின்றன. அவைகள் மேகங்களைத் தடுத்து வேறு வழியில் திருப்பிவிடுகின்றன. அதனால் சில இடங்களில் மழை அதிகமாகவும் வேறு சில இடங்களில் குறைவாகவும் பெய்கிறது. தண்ணீரைக் காய்ச்சுவதனால் அது ஆவியாக மாறி ஆகாயத்தில் மறைந்து போகிறதென்று நமக்குத் தெரியும். ஆகாயத்தில் அது வாயுவோடு கலந்து விடுகிறது. அந்த வாயு குளிர்ந்தவுடன் முன்பு கண்ணுக்குத் தெரியாமல் இருந்த நீராவி மறுபடி தண்ணீராக மாறிப்போகிறது. குளிர் அதிகமாக இருக்கும் இராத்திரியில் ஆகாயத்திலுள்ள நீராவி தண்ணீராக மாறுகிறது. அந்தத் தண்ணீரைப் பனி என்று சொல்லுகிறோம்.

ஈரம் மிகுந்த வாயு ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் போகும்போது மலைகள் வழியில் இருக்கின்றன. அந்த மலைகளைத் தாண்டிப் போக ஆரம்பிக்கையில் அந்த ஈரவாயு மலைகளில் மோதிக்கொண்டு மேலே கிளம்புகின்றது. அப்பொழுது அந்த வாயு குளிர்ந்து மழையாகப் பெய்கின்றது. ஈரம் நிறைந்த வாயு, அல்லது மேகம் உயரமான மலைகளைத் திடீரென்று தாண்ட வேண்டி வருகிறது. அதனால் அந்த வாயு அதி சீக்கிரத்தில் குளிர்ந்துபோக மழை அதிகமாகப் பெய்கிறது.

இனி, நமது மாகாணத்திலுள்ள முக்கியமான மலைத்தொடரைப் பார்ப்போம்; அந்த மலைத் தொடரினால் என்ன நேரிடுமென்று கவனிப்போம். அரபிக்கடலின்மேல் வீசும் பருவக்காற்று கடற்கரையை அடுத்திருக்கிற மேற்குத் தொடர்ச்சி மலையின்மேல் மோதுகிறது. மேகம் நிறைந்த வாயு அந்த மலையின்மேல் எழும்புகிறது. அதனால் அது குளிர்ந்து அதிக மழையைக் கொட்டுகிறது. இந்த மலைத்தொடருக்கும் சமுத்திரத்திற்கும் நடுவில் ஒடுங்கி நீண்டிருக்கிற சமவெளி யொன்று உண்டு. அங்கே பருவக்காற்று வீசும்போது மழை விசேஷமாகப் பெய்கிறது.

மேலைத் தீரவெளியில் மழை அதிகந்தான். தரை நன்றாக நனைந்து ஜலம் ஊறுகிறது. அங்கே மலையிலிருந்து உற்பத்தியாகிற ஆறுகளும் ஓடைகளும் கரைபுரண்டு ஓடுகின்றன. குளங்களும் குட்டைகளும் நீர் நிரம்பித் தளும்புகின்றன. இப்படியாக நம்முடைய மாகாணத்து மேற்குத் தீரம் மற்ற பாகங்களைக் காட்டிலும் அதிக ஈரம் உடையதாக இருக்கிறது.

மலைத்தொடரினால் தடுக்கப்பட்டாலும் பருவக் காற்றானது மலையைத் தாண்டிப்போகிறது. ஆனால் அதற்குள் அதில் அடங்கியிருந்த ஈரமான மேகத்தின் பெரும்பாகம் மேற்குக் கரையிலே மழையாகப் பொழிந்துவிடும். இந்த மலைத்தொடருக்குக் கிழக்கேயுள்ள பிரதேசத்தில் பிரவேசிப்பதற்குப் பருவக்காற்றில் அதிக ஈரம் இல்லை. தக்காணத்துப் பீடபூமியில் மழை அதிகமாகப் பெய்யாமைக்கு இதுவே காரணம்.

இந்த மாகாணத்தில் மழை மிகவும் குறைவாகப் பெய்யும் இடம் விடப்பட்ட ஜில்லாக்களே. அங்கே தண்ணீர் அதிகமாகக் கிடைப்பதில்லை; கிணறுகளை ஆழமாகத் தோண்டவேண்டும். பல்லாரியில் பெய்கிற மழையைப்போல் மூன்று பங்கு மழை கள்ளிக்கோட்டையில் பெய்கிறது. மேற்குத்தொடர்ச்சி மலைக்குக் கிழக்கேயுள்ள பிரதேசங்களில் தென்மேற்குப் பருவக் காற்று வீசும்போது வேண்டிய அளவு மழை பெய்கிறது; தரை நனைந்து மெதுப்படவும், உழுது பயிர் செய்யவும் அந்த மழைபோதும். இந்தப் பருவத்தில் பெய்யும் மழையின் பெரும் பாகம் நமது மாகாணத்தில் கோதாவரிக்கு டைக் கேயுள்ள பிரதேசத்தில் பெய்கிறது.

அக்டோபர் மாதத்தில் இந்தக் காற்றானது திரும்பி அதுவரையில் அடித்துக்கொண்டிருந்த திசைக்குநேர் எதிரான திசையிலிருந்து அடிக்கிறது. அதற்கு முன்னால் அரபிக்கடலிலிருந்து தென்மேற்காக அடிக்கும்; அக்டோபர் மாதத்தில் வங்காளக் குடாக்கடலிலிருந்து வடகிழக்காக அடிக்கிறது. இதற்கு வடகிழக்குப் பருவக்காற்று என்று பெயர்; மாரிப்பருவக்காற்று என்றும் சொல்லுவார்கள். அந்தக் காலத்தில் நமது மாகாணத்தில் கிழக்குக் கரையிலிருந்து உள்ளடங்கி ஒதுங்கியிருக்கிற பிரதேசங்களில் மழை பெய்யும்; அதாவது, வடக்கே கோதாவரிநதி முதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் உள்ள ஊர்களில் மழை பெய்யும். மழை கடற்கரையில் அதிகமாகவும் உள் நாட்டுக்குப் போகப்போகக் குறைவாகவும் பெய்யும்; கிழக்குத் தொடர்ச்சி மலைக்குப் பின்பக்கமாக உள்ள ஊர்களில் மழை மிகவும் குறைவு.

## நமது மாகாணத்தில் அங்கங்கே பெய்யும் மழையின் பரிமாணம்.

இப்பொழுது நமது மாகாணத்தில் இன்ன இன்ன பிரதேசங்களில் இவ்வளவு இவ்வளவு மழை பெய்கிறதென்றும் ஓர்இடத்தைக் காட்டிலும் மற்றோர்இடத்தில் அதிக மழை பெய்வதற்குக் காரணம் இன்னதென்றும் நமக்குத் தெரியும்.

**1. மேற்குக்கரைத் துண்டுநிலம்.** இந்தத்துண்டு மேற்குத்தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடையில் உள்ளது. தென்மேற்குப் பருவக் காற்றின் வேகமெல்லாம் இந்த நிலத்தின்மீதே விசேஷமாகத் தாக்கும். அந்தக் காற்றில் அடிபட்டு வரும் மேகம் பெரும்பாலும் அங்கே மழையைக் கொடுக்கிறது. அதனால் அந்தத் துண்டுநிலம் மிகவும் ஈரமாக இருக்கும். நமது மாகாணத்தில் வேறு எந்த இடமும் அவ்வளவு ஈரமாக இராது. இந்தப் பருவத்தில் கோதாவரிக்கு வடக்கேயுள்ள ஜில்லாக்களிலும் நல்ல மழை பெய்கிறது.

**2. கிழக்குக்கரைத் துண்டுநிலம்.** இந்தத் துண்டு நிலத்திலும் நல்ல மழை பெய்கிறது. கோதாவரிக்குத் தெற்கே கடற்கரையை ஒட்டியுள்ள பிரதேசத்தில் நல்ல மழையுண்டு. இங்கே அதிக மழை மழைக்காலத்திலேதான் பெய்யும்.

**3. பீடபூமிப் பிரதேசம்.** விடப்பட்ட ஜில்லாக்களில் மழை மிகவும் குறைவு. மேற்குத்தொடர்ச்சி மலைக்குப் பின்னே இருப்பதால், தென்மேற்குப் பருவக்காற்றினால் உண்டாகும் மழை அங்கே பெய்வதில்லை; கிழக்குத்தொடர்ச்சி மலைக்குப் பின்னே இருப்பதால், வடகிழக்குப் பருவக்காற்றினால் உண்டாகும் மழையும் பெய்வதில்லை. நமது மாகாணத்தில் மழையில்லாமல் மிகவும் வறண்டிருக்கும் பிரதேசம் இதுவே.

### பருவங்கள்.

வெப்பம் குளிர்ச்சி, ஈரம் வறட்சி ஆகிய இவைகளைப்பற்றி நாம் இதுவரையில் படித்ததைக் கொண்டு ஒருவருஷத்தை நான்கு பருவங்களாகப் பிரிக்கலாம்.

| | |
|---|---|
| 1. ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு. ... | இளவேனிற் பருவம். |
| 2. ஏப்பிரல், மே. ... | முதுவேனிற் பருவம் (கோடை). |
| 3. ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர். ... | தென் மேற்குக் காற்றுப் பருவம். |
| 4. அக்டோபர், நவம்பர், டிசம்பர். ... | வடகிழக்குக் காற்றுப் பருவம் (மாரி). |

## 5. மழையின் பிரயோசனம்: மழையை அளக்கும் விதம்.

இந்தியா உஷ்ணதேசம். ஆகையால், நிலத்தில் உள்ள ஈரத்தைச் சூரியவெப்பம் சீக்கிரத்தில் இழுத்துக்கொள்ளுகிறது. மழை பெய்வதற்குச் சற்று முன்னே நிலத்தை உழுகிறோம்; இல்லாவிட்டால் மழை பெய்த உடனே யாவது உழுகிறோம். அந்தச் சமயங்களில் உழாவிட்டால், நிலத்தின் ஈரத்தைச் சூரிய வெப்பம் போக்கிவிடும். உழுத நிலங்களில் ஈரங்காக்கும்; உழாத தரைகளில் ஈரம் எளிதில் காய்ந்துபோம்.

ஒரு கிராமத்தின் நிலம் செழிப்பாக இருக்கிறதா இல்லையா என்று தெரிந்துகொள்ள வேண்டுமானால், அங்கே மழை அதிகமாகப் பெய்கிறதா இல்லையா என்று முதலில் கேட்கிறோம். மரக்கால் என்னும் ஒரு கருவியைக்கொண்டு ஒரு இடத்தில் இவ்வளவு மழை பெய்ததென்று அளந்து கண்டுபிடிக்கிறோம். மழை மரக்காலைப் பற்றி உபாத்தியாயர் சொல்லுவார். ஒருநாளில் அல்லது ஒருமணி நேரத்தில் இத்தனை அங்குல மழை பெய்ததென்று அந்த மரக்காலினால் தெரிந்துகொள்ளலாம். நமது மாகாணத்தில் அநேக இடங்களில் மழை மரக்கால் உண்டு; பெய்த மழையை அளந்து, அதை ஒவ்வொரு நாளும் காலையில் தந்திமூலமாகச் சென்னையிலுள்ள நக்ஷத்திர ஆபீஸுக்குத் தெரிவிக்கிறார்கள். இந்த வர்த்தமானங்களை யெல்லாம் படித்தபிறகு துரைத்தனத்தார் இன்ன பிரதேசத்தில் மழை அதிகமாகப் பெய்கிறது, இன்ன இடத்தில் மழையில்லை, அதனால் விளைவு குறைந்து பஞ்சம் வரும் என்று உடனே தெரிந்துகொள்ளுவார்கள்.

பெருத்தமழை பெய்தால் அதன் அளவு கால் மணி நேரத்தில் ஓரங்குலம் இருக்கும். சாதாரண மழை பெய்தால் ஒருமணி நேரத்தில் ஓர் அங்குலம் இருக்கும். மழைநாளில் ஒருநாள் பெய்யும் மழையின் அளவு 3 அல்லது 4 அங்குலம் இருக்கும்; பலமான மழை அடித்தால் 5 அல்லது 6 அங்குலம் இருக்கும். மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு தினத்தில் 10 அங்குலம் பெய்கிறது. சொற்ப மழையினால் ஆறுகளில் ஜலம் நிரம்புவதில்லை; ஆனால், பயிர்களும் புல் பூண்டுகளும் தளிர்க்கும். இரவில் பெய்யும் பனியும் செடிகள் வளர்வதற்கு அனுகூலமானது.

நமது மாகாணத்தின் சீதோஷ்ண ஸ்திதியை நாம் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். இன்ன விதமான பயிர்கள் நன்றாக விளையுமென்று சீதோஷ்ண ஸ்திதியைக்கொண்டு சொல்லலாம். சூரிய வெளிச்சம் மிகவும் குறைவாக உள்ள தேசங்களிலும் மழை மிகவும் குறைவாக உள்ள தேசங்களிலும் சில செடிகள்மாத்திரமே வளரும்.

நமது நாட்டைப்போன்ற உஷ்ணதேசங்களில் விளையும் பயிர்களுக்கும் குளிர் மிகுந்த தேசங்களில் விளையும் பயிர்களுக்கும் வித்தியாசம் உண்டு.

சில செடிகளுக்குத் தண்ணீர் அதிகம் வேண்டும்; சில செடிகளுக்குத் தண்ணீர் கொஞ்சம் இருந்தாலும் போதும். மழை பெய்தபிறகு புல் பூண்டுகள் முளைப்பதைப் பார்த்திருக்கிறோம். நாம் உண்ணும் பதார்த்தங்களைத் தண்ணீர் விட்டுச் சமைத்து எடுத்துக்கொள்கிறோம். அதுபோல், தரையிலிருந்து செடிகள் இழுத்துக்கொள்ளும் உணவை ஈரம் சமைத்துக் கொடுக்கிறது.

### பாசனம்.

இந்தியாவைப்போன்ற உஷ்ணதேசத்தில் வெப்பமும் வெளிச்சமும் சூரியனால் எப்பொழுதும் விசேஷமாகக் கிடைக்கின்றன. அவைகளைச் சேர்த்து வைக்கவேண்டிய அவசியமில்லை. மழை விஷயத்தில் அப்படி இருக்க முடியாது. மழையைச் சேர்த்து வைக்காவிட்டால், அதில் பெரும்பாகம் வீணாகும். சூரிய வெப்பம் அந்த மழை ஜலத்தை அநேகமாக உறிஞ்சிவிடும். பெய்கிற மழை பெரும்பாலும் தரையின்மேல் வழிந்தோடி நதிகளில் விழுந்து சமுத்திரத்தோடு கலக்கிறது. மழைநீரில் சிறிதுபாகம் தரையிலும் பாறையிலும் இறங்கி ஊறுகின்றது. நீரைத் தேக்கி வைத்துக்கொள்ளாவிட்டால் இப்பொழுது விளையும் பயிர்களில் பாதியளவுகூட விளையாது.

நீரைச் சேகரித்து வைத்துக்கொள்வதற்கு ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டுவதே சிறந்த வழியாகும். அணைகள் நீரைத் தடுத்துத் தேக்கும். கால்வாய்களையும் கண்ணிகளையும் வெட்டி அணைகளுக்கு அப்பால் தேங்கி நிற்கும் நீரை அவற்றின் வழியாக வெகுதூரங் கொண்டுபோய் ஆற்றின் இரண்டு பக்கங்களிலுமுள்ள வயல்களுக்குப் பாய்ச்சலாம். இவ்வாறு செய்வதால் ஆற்றுநீர் கடலிற்போய் விழுந்து வீணாகாமல் உபயோகமாகும்.

நமது மாகாணத்திலிருந்து வங்காளக் குடாக்கடலில் விழுகிற ஆறுகளுக்கெல்லாம் அணைகள் கட்டியிருக்கிறார்கள். இந்த விதமாகப் பாலாற்று ஜலமும் பொன்னையாற்று நீரும் பாசனத்திற்கு உபயோகப்படுகின்றன. இந்த ஆறுகளின் ஜலத்தில் சிறிதுபாகமே கடலில்போய் விழுகிறது. கோதாவரி, கிருஷ்ணா, காவேரி என்னும் ஆறுகளின் முகத்துவாரங்களின் தலைப்பில் கட்டி இருக்கும் அணைக்கட்டுகள் மிகவும் பெரியவை. இந்த அணைக்கட்டுகளினால் தேங்கும் நீர் விஸ்தாரமான நிலங்களுக்குப் பாய்கின்றது; அதனால் பயிர்கள் செழிப்படைந்து விசேஷமான விளைவைக் கொடுக்கின்றன.

திரைத்தனத்தார் செய்திருக்கும் அதிசயமான நீர்ப்பாசன ஏற்பாட்டினால் வைகையாற்றுக்கு ஜலம் வருகிறது. மேற்குத்தொடர்ச்சி மலையின் மேற்கே பெரியாறு என்னும் ஒரு நதி ஓடுகிறது. அந்த மலைப்பிரதேசத்தில் உயரமான இடத்தில் பெரிய கல்லணை ஒன்று கட்டி இருக்கிறார்கள். பெரியாற்றில் அவ்விடத்திலிருந்த மடு இந்தக் கல்லணையினால் பெரிய ஏரியாயிற்று. இந்த ஏரியிலிருந்து கால்வாயை வெட்டி ஜலத்தைக் கொண்டுபோனார்கள். பிறகு மலைகளைக் குடைந்து கணவாயின் வழியாக அந்த ஜலம் கிழக்கே ஓடி வைகையாற்றில் விழும்படி செய்தார்கள். அதனால் அந்த ஜலம் விஸ்தாரமான நிலத்துக்குப் பாய அனுகூலம் உண்டாயிற்று. முன்பு வீணாக அரபிக்கடலில் விழுந்துவந்த ஜலத்தைத் திருப்பி நாட்டில் பாயும்படி செய்து மலைகளின் வழியாக வங்காளக் குடாக்கடலில் விழும்படி செய்திருக்கிறார்கள். நீர் மிகுந்த இடத்திலிருந்து ஜலம் இல்லாத இடத்துக்குக் கொண்டுபோய் அதை உபயோகமாக்கி யிருப்பது எவ்வளவு புகழத்தக்கது!

### கோதாவரி, கிருஷ்ணா, காவேரி என்னும் ஆறுகளின் பாய்ச்சல்.

கோதாவரி, கிருஷ்ணா, காவேரி என்னும் ஆறுகளின் தலைப்புகளில் அணைகள் கட்டி, அவைகளிலிருந்து கால்வாய்கள் வெட்டியிருக்கிறார்களல்லவா? அந்தக் கால்வாய்களுக்கு அருகில் பல மாதங்கள் வரையில் மழையே பெய்யாவிட்டாலும் அவைகளில் ஜலம் நிறைந்திருக்கும். படத்தைப் பார்த்தாலே இந்த விஷயம் தெரியும்.

தென்மேற்குப் பருவக்காற்று அடிக்கும்பொழுது கிழக்கே பெய்யும் மழை மிகவும் கொஞ்சமென்பது தெரியுமல்லவா? அந்தக் காலத்தில், மேற்கே வெகுதூரத்திற்கு அப்பால் மேற்குத் தொடர்ச்சிமலையிலிருந்து அடித்துக்கொண்டு வரும் நீரினால் இந்தக் கால்வாய்கள் ஜலம் நிறைந்து பெருகுகின்றன. ராஜமகேந்திரத்துக்கு அருகிலுள்ள தவளேசுவரம் என்னும் ஊரில் கோதாவரிக்கு அணைகட்டி யிருக்கிறார்கள். ஜூன்மாதத்தில் நாம் இந்த அணைக்கட்டில் நிற்பதாக எண்ணிக் கொள்வோம். ஆகாயம் தெளிவாக இருக்கும்; மேகமே கண்ணுக்குத் தெரியாது; அநேக மாதங்களாக ஒரு துளி மழைகூட இல்லை. ஆற்றில் நீர் இல்லை; கால் நனையாமல் அணைக்கட்டின்மீது நடந்துபோகலாம். இரண்டு நாள் கழித்து மறுபடி அந்த அணைக்கட்டுக்குப் போனால் ஆகாயம் அப்பொழுதும் தெளிவாகவே இருக்கும். ஆனால், ஆற்றில்மாத்திரம் வெள்ளம் பெருகியிருக்கும்; அணைக்கட்டுக்குமேல் பத்து, பன்னிரண்டுஅடி உயரம் வரையில் கலங்கல் நீர் வேகமாகப் பாய்ந்தோடும். ஆறுபெருகும்; கால்

வாய்களில்எல்லாம் ஜலம் நிரம்பியிருக்கிறது என்று டெல்டாவில் உள்ள ஜனங்களுக்கெல்லாம் பறையடித்து எச்சரிக்கை செய்வார்கள். இதனுல் என்ன தெரிகிறது? மேற்கே தென்மேற்குப் பருவக் காற்று அடிக்கத் தொடங்கிவிட்டதென்று தெரிகிறது.

மேற்குத் தொடர்ச்சிமலேயில் பெய்த மழையினுல் தலேக் கோதாவரியிலும் அதன் உபநதிகளிலும் வெள்ளம் பெருகும்; அதனுல் கோதாவரி பெருக்கெடுத்துக் கரைபுரண்டோடும். கிருஷ்ணு நதியிலும் காவேரி நதியிலும் வெள்ளம் இப்படியே வருகிறது. இவைகளுக்கும் வெகுதூரத்தில் மேற்குத தொடர்ச்சிமலேயில் பெய்யும் மழைநீர் வந்து சேருகிறது. இந்தச் செழிப்பான டெல்டாக்களிலுள்ள ஜனங்கள் தங்கள் நிலங்களுக்கு வேண்டிய ஜலத்துக்காக மேகங்கள் வருகின்றனவோவென்று வானம் பார்க்கவேண்டியதில்லே. அவர்கள் ஆற்றின் நீர்மட்டத்தைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்தால் அவர்களுடைய வயல்களில் நீர் நிரம்பிப் போகிறது. இவ்விதமாக, கிழக்குக் கரையிலுள்ள நிலங்களின் பெரும்பாகத்துக்கு நமது மாகாணத்துக்கு வெளியே வெகுதூரத்தில் பெய்யும் மழைஜலம் வந்து பாய்கிறது.

ஆறுகளுக்கு அணேகட்டி நீரைச் சேகரிக்கும் வகையை இதுவரையில் சொல்லிவந்தோம். அப்படியல்லாமல், ஏரிகளிலும் நீரைச் சேகரித்து வைத்துக்கொள்ளலாம். தாழ்ந்த நிலங்களில் பள்ளமாக இருக்கும் பாகத்தில் செங்கல்லினுல் மதகுகள் கட்டுவார்கள். அவைகளில் மழைநீரைத் தேக்கி வைத்துக்கொள்ளலாம்; சிறு ஓடைகளில் பாயும் நீரையும் அந்தப் பள்ளங்களில் தேக்கிவைத்துக் கொள்ளலாம். அங்கிருந்து கால்வாய்கள் தோண்டி வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் சமீபத்தில் குளம் உண்டு. அப்படிப்பட்ட குளங்கள் நமது மாகாணத்தில் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. ஆற்ருேரமாயிராதபிரதேசங்களில்நெல் வயல்களேயும் கரும்புத் தோட்டங்களேயும் கண்டால், அவை ஏரி ஜலத்துப்பாய்ச்சலினுல் விளேவன என்று நிச்சயமாகச் சொல்லலாம். தரையில் அதிக ஆழமாக ஊறிப்போகிற நீரையும் உபயோகப்படுத்தி விடுகிருர்கள். ஆழத்திலுள்ள நீர் எட்டுகிறவரையில் கிணறுகள் தோண்டுகிருர்கள்.

மலேயடிவாரங்களில் கிணறுகள் இருப்பதைப் பார்க்கிருேம். மலேச்சரிவுகளிலிருந்து வழிந்தோடிவரும் மழைஜலமெல்லாம் அடியிலுள்ள தரையில் ஆழ்ந்து ஊறியிருக்கிறது. ஆறுகளிலுள்ள நீர் தரையின் கீழாக ஓடிச் சில கிணறுகளுக்குப் பாய்கிறது. கோடையில் ஜலம் வற்றியிருக்கும்போது ஆற்றங்கரைகளுக்கு அருகில் கிணறுகளேத் தோண்டுகிருர்கள்; ஆற்றுமணலிலும் கிணறுகள் தோண்டுவதுண்டு. அந்தமாதிரி தோண்டுவதால், தரையின் கீழே ஆழ்ந்திருக்கும் நீர்க்கால் எட்டும். கிணறுகளில் ஏற்றம் போட்டு வயல்களுக்கும் தோட்டங்களுக்கும் தண்ணீர் இறைப்பார்கள்; சில இடங்களில் மாடுகட்டிக் கபிலேயடித்துத் தண்ணீர் பாய்ச்சுவார்கள்; நீராவியந்திரங்களினுல் இறைப்பதும் உண்டு. ஆறுகளிலும் குளங்களிலும் நீர் வற்றிப்போன பிறகு அநேகநாள் வரையில் கிணறுகளில் ஜலம் இருக்கும்.

## நிலம்.

பயிரிடுவதற்கு வெப்பமும் ஈரமுமே போதுமென்று எண்ணவேண்டாம். நல்ல பயிர்கள் விளேவதற்கு நிலம் நன்ருக இருக்கவேண்டும். நமது மாகாணத்து நிலம் பெரும்பாலும் செழுமையற்றது. அநேக இடங்களில் ஆழமாக நீர் நிற்கக்கூடிய தரை இல்லே; அவ்விடங்களில் பருக்கைக் கற்களும் மணலும் நிறைந்திருக்கின்றன; சில இடங்கள், மலேப்பிரதேசமாகவும் கல்லுங் கரடும் பாறையும் நிறைந்த இடமாகவும் உள்ளன; கடலோரமெல்லாம் உப்புத்தரையாக இருக்கிறது. எல்லா அம்சங்களும் கலந்திருக்கும் நிலமே பயிரிடுவதற்கு ஏற்றது. அப்படிப்பட்ட நிலம் டெல்டாக்களிலும் ஆற்றுப்படுகைகளிலும் இருக்கும். ஆறுகளில் வெள்ளம் அடித்துக்கொண்டு வரும் வண்டற்குழம்பெல்லாம் அந்த நிலங்களில் படியும். ஆனுல், இந்த மாகாணத்திற்குள் செழுமை மிகுந்த நிலங்கள் கோதாவரி, கிருஷ்ணு, காவேரி என்னும் நதிகளின் டெல்டாக்களே. அந்த இடங்களில் நெடுந்தூரம் வரையில் வயல்கள் அடுக்கடுக்காகத் தொடர்ந்து நிற்கின்றன. தரிசுநிலமே கிடையாது. வருஷத்தில் இரண்டு மூன்று தடவை நிலம் விளேகின்றது. மேற்குத்தீரத்திலுள்ள நிலத்திலும் செழிப்பான பருவகாலத்திற் பெய்யும் கனத்த மழைகளினுல் வெள்ளம் புரண்டோடும். ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலேயிலிருந்து ஓடிவருகையில் நுட்பமான மண்ணே அடித்துக்கொண்டு வந்து கடற்கரையை அடுத்துள்ள பள்ளங்களில் பரப்புகின்றன. அதனுல் செழுமையற்ற பூமியையும் எருப்போட்டுச் செழிப்பாக்கலாம்.

நமது மாகாணத்தின் பெரும்பாகம் கருப்பான களிமண் நிலமாக இருக்கிறது. இந்த நிலத்தில் ஈரம் நீடித்துநிற்கும்; ஆகையால் நன்ருக உழ

லாம். இப்படிப்பட்ட நிலம் விடப்பட்ட ஜில்லாக்களிலும், குண்டூர் ஜில்லாவிலும், மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்கே நீலகிரியின் அடிவாரம்முதல் மன்னார் குடாக்கடலின் கரைவரையிலுள்ள பிரதேசத்திலும் இருக்கின்றது.

## 6. நமது மாகாணத்துப் பயிர்கள்.

மழை இன்ன இன்ன இடங்களில் இன்ன இன்ன அளவு பெய்கிறதென்று ஞாபகம் இருந்தால், இன்ன இன்ன பயிர்கள் முக்கியமாக விளைகின்றனவென்று எளிதில் தெரிந்துகொள்ளலாம். அந்தப் பயிர்கள் **நன்செய்**என்றும், **புன்செய்**என்றும், **தோட்டப்பயிர்** என்றும் மூன்றுவகையாகும்.

ஆறுகளிலிருந்தும் ஏரிகளிலிருந்தும் கால்வாய்கள் வெட்டி நீர் அதிகமாகப் பாய்ச்சக்கூடிய நிலங்களில் **நன்செய்ப்** பயிர் சாகுபடியாகும்; மலையாளத்தைப்போல் மழை அதிகமாகப் பெய்கிற இடங்களிலும் நன்செய்ப்பயிர் சாகுபடியாகும். முக்கியமான நன்செய்ப்பயிர் நெல். வயல்களில் நீர் அதிகமாக நிற்கக்கூடிய இடங்களில் நெல் நன்றாக விளைகிறது. இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

நெல் விளைகிற முக்கியமான பிரதேசங்களாவன:—(1) கோதாவரி, கிருஷ்ணா, காவேரி என்னும் ஆறுகளின் டெல்டாக்களில் உள்ள விஸ்தாரமான நிலங்கள்; கிழக்குமுகமாக ஓடும் நதிகளின் அணைக்கட்டுகளுக்கு அப்பால் உள்ள நிலங்கள்; (3) விசேஷமாக மழை பெய்கிற மலையாளம்; (2) ஆயிரக்கணக்காக அங்கங்கே இருக்கும் ஏரிகளின் பக்கத்தில் உள்ள நிலங்கள்.

போதுமான அளவு ஜலம் இருக்கும் அநேக இடங்களில் வருஷத்தில் இரண்டு மூன்று தடவை பயிரிடுகிறார்கள். கரும்பும் நன்செய்ப் பயிராகும். கரும்புக்கு அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஆனால், நெற்பயிருக்குச் செய்வது போல் வயல்களில் ஜலத்தை அதிகமாகத் தங்க விட்டால் கரும்பு அழுகிப்போம்.

**புன்செய்ப்** பயிர்கள் ஆறு, ஏரி, குளம், கிணறு ஆகிய இவைகளின் உதவி அதிகமாக இல்லாமலே விளைகின்றன. முக்கியமான புன்செய்ப் பயிர்களாவன:—சோளம், கம்பு, கேழ்வரகு, துவரை, கொள்ளு, காராமணி, கடலை, உளுந்து, பயறு முதலியன. கொட்டைமுத்து, எள்ளு, வேர்க்கடலை முதலியன எண்ணெய் வித்துக்கள். கருப்புக்களிமண் தரையில் பருத்தியும், மக்காச்சோளமும் பயிராகின்றன.

**தோட்டப்பயிர்கள்** கிணற்று நீரை ஆதாரமாகக் கொண்டு விளைகின்றன. நமது மகாணத்தில் நல்ல கிணறுகள் வெட்டக்கூடிய இடங்களிலெல்லாம் தோட்டப்பயிர் உண்டு. முக்கியமான தோட்டப் பயிர்களாவன:—காய்கறிகள், கிழங்குகள், மிளகாய், மஞ்சள், வெற்றிலை, வாழை, புகையிலை முதலியனவாம். கோதாவரிநதி விழும் கடலின் ஓரமாயுள்ள தீவுகளில் நேர்த்தியான புகையிலை பயிராகின்றது.

### மலைப்பயிர்கள்.

மழை மிகுதியாகப் பெய்து குளிர்ந்திருக்கிற மலைச்சாரல்களில் சில செடிகள் நன்றாக வளர்கின்றன. இந்தக் காரணத்தினால் நீலகிரி, ஆனைமலை, பழனிமலை முதலிய இடங்களில் தேயிலைச் செடிகளைப் பயிரிடுகிறார்கள். அடிக்கடி மழை பொழிவதால் நுட்பமான இளங் கொழுந்துகள் உண்டாகின்றன. அந்தக் கொழுந்துகளினால் சிறந்த தேயிலை கிடைக்கிறது. இந்தியாவிலிருந்து தேயிலை விசேஷமாக ஏற்றுமதியாகிறது. மலைகளில் ஈரங்காத்து வெப்பத்தோடு கூடியிருக்கிற இடங்களில் காபிச்செடி நன்றாகப் பயிராகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குச் சரிவுகளிலும், நீலகிரியிலும், சேர்வராய மலையிலும் பல காபித்தோட்டங்கள் உண்டு. நீலகிரியில் வளர்கிற சிங்கோனாமரத்துப் பட்டையிலிருந்து குவைனா என்னும் ஜ்வரமருந்து செய்கிறார்கள். ஏலக்காய்ச்செடி மேற்குத் தொடர்ச்சி மலையில் வளர்கிறது; மென்மையான கடற்காற்றும் மூடுபனியும் உள்ள பிரதேசங்களில் அது செழுமையாக வளரும்.

### காடுகள்.

மழை அதிகமாகப் பெய்கிற இடத்தில் மரங்களும் செடிகளும் நன்றாக வளரும்; ஆதலால் நமது மாகாணத்தில் முக்கியமான காடுகள் மேற்குத் தொடர்ச்சி மலையின் மேல்புறத்துச் சரிவுகளில் இருக்கின்றன; உதாரணமாக, ஆனை மலையில் தேக்குமரம் மிகுதியாக உண்டாகிறது. கிழக்குத் தொடர்ச்சி மலையிலும் பெருங்காடுகள் உண்டு. அவை கோதாவரிக்கு வடக்கே இருக்கின்றன. அங்கே தென்மேற்குப் பருவக்காற்று வீசும் போது மழை நன்றாகப் பெய்கிறது. அவ்விடத்தில் முக்கியமாக வளர்வது சால் என்னும் ஒருவகை மரம். கிழக்குத்தொடர்ச்சிமலையில் மழை அதிகமாகப் பெய்யாத இடங்களில் சில காடுகளே இருக்கின்றன; அந்தக் காடுகளில் வளரும் மரங்களும் சிறியவைகள். எல்லாக் காடுகளிலும் மூங்கில் வளரும்.

தென்னை மரத்துக்கு ஜலமும் கடற்காற்றும் வேண்டும். நமது மாகாணத்தின் கிழக்குக் கரையிலும் மேற்குக் கரையிலும் தென்னந் தோப்பு

கள் உண்டு; முக்கியமாக மேற்குக்கரையில் அவை அதிகம். அங்கே ரப்பர் மரங்களும் பயிராகின்றன.

### சுரங்கங்களும், உலோகங்களும்.

பூமியின் மேற்பரப்பில் பயிர்களை விளைவிக்கிறோமல்லவா? பூமியின் கீழே வெட்டி நமக்கு உபயோகமான வஸ்துக்களை எடுத்துக்கொள்ளுகிறோம். களிமண் பெரும்பாலும் எல்லாவிடத்திலும் கிடைக்கிறது. அது கட்டிடம் கட்டுவதற்கும் செங்கல் செய்வதற்கும் உபயோகப்படுகிறது. மேற்கு வெளியில் செங்கற் சூளைகளும் ஓடுகள் செய்யும் இடங்களும் அநேகம் இருக்கின்றன. சில இடங்களில் கருங்கல் கிடைக்கிறது. எல்லா இடங்களிலும் கோவில்களைக் கருங்கல்லினலேயே கட்டியிருக்கிறார்கள். விட பட்ட ஜில்லாக்களில் கெட்டியான ஒருவகைக் கருங்கல் உண்டு. அதற்குக் கடப்பைக்கல் என்றுபெயர்.

நமது மாகாணத்தில் விலையுயர்ந்த சுரங்கப் பொருள்கள் அதிகமாக இல்லை. நிலக்கரியும் இல்லை; தங்கமும் இல்லை. சேலம் ஜில்லாவில் சில இடங்களில் இரும்பின் தூள்கள் படிந்திருக்கின்றன. ஆனால், அந்தத் தூள்களை எடுத்து உருக்குவதற்கு நிலக்கரியும் சுன்னக்கல்லும் மிகுதியாகவேண்டும்; அவை இல்லாமையால் அந்த இரும்புத் தூள்கள் உள்ள படுகைகளைக் கவனியாமல் விட்டிருக்கிறார்கள். இந்த மாகாணத்தில் உற்பத்தியாகும் முக்கியமான உலோகம் மாங்கனீஸ் என்பது. அது விசாகபட்டணத்துக்கருகில் விசேஷமாக வெட்டி எடுக்கப்படுகிறது. அந்தத் துறைமுகத்திலிருந்தே அதனை மிகுதியாக ஏற்றுமதி செய்கிறார்கள். நெல்லூருக்கு அருகிலுள்ள கற்பாறைகளிலிருந்து அப்பிரகக்கட்டி வெட்டியெடுக்கப்படுகிறது. அது சித்திரங்களை அலங்கரிக்கும் வேலைக்கும் மின்சார யந்திர வேலைகளுக்கும் உபயோகிக்கப்படுகிறது. இந்த மாகாணத்தில் உற்பத்தியாகும் முக்கியமான வஸ்துவாகிய உப்பைப் பூமியிலிருந்து எடுக்காமல் கடல் நீரிலிருந்து எடுக்கிறார்கள். வங்காளக் குடாக்கடலின் கரை முழுவதிலும் உப்பளங்கள் உண்டு.

### உபயோகமான மிருகங்கள்.

செடிகள் மனிதர்களுக்குமாத்திரமே யல்லாமல் மிருகங்களுக்கும் உணவு கொடுக்கின்றன. ஆடுமாடுகளே முக்கியமாக வீடுகளில் வளரும் மிருகங்கள். ஒவ்வொரு கிராமத்திலும் ஆடுமாடுகளையே வளர்க்கிறார்கள். அவை நமது மாகாணத்தில் லக்ஷக்கணக்காக உண்டு. ஆனால், நல்ல உணவில்லாமையால், அவை பெரும்பாலும் பெலக்குறைவுடன் இருக்கின்றன. நெல்லூர் ஜாதி மாடுகளே சிறந்தவை. நெல்லூரிலுள்ள காளைகள் பருமனக இருக்கும்; செவ்வையாகவும் உழைக்கும்; அங்கேயுள்ள பசுக்கள் மிகுதியான பால் கொடுக்கின்றன. எருமைகளில் பல ஜாதிகள் உண்டு. இந்த மாகாணத்தில் உள்ள ஆடுகள் நல்ல ஜாதி ஆடுகள் அல்ல. ஒவ்வொரு கிராமத்திலும் வெள்ளாடுகள் உண்டு. அவை எவ்விடத்திலேனும் இருந்து எதையேனும் தின்று வயிறு வளர்க்கும். அவைகளை வளர்ப்பது கஷ்டமல்ல. மாட்டுத் தோல்களையும் ஆட்டுத்தோல்களையும் பதனிட்டு நல்ல தோலாக்குவதற்காக வெளித் தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். நமது மாகாணத்தில் குதிரைகளை அபிவிருத்தி செய்வதில்லை. அவை அயல் தேசங்களிலிருந்து முக்கியமாக ஆஸ்திரேலியாவிலிருந்து வருகின்றன. மட்டமான குதிரைகளை ஜட்காவண்டி இழுப்பதற்கு உபயோகிக்கிறார்கள்.

### காட்டு மிருகங்கள்.

ஒவ்வொரு கிராமத்தைச் சுற்றிலும் நரி, குரங்கு முதலான சிறிய காட்டுமிருகங்கள் காணப்படும். புலி, கரடி, சிவிங்கி முதலிய கொடிய காட்டுமிருகங்கள் கிராமங்களிலிருந்து வெகுதூரத்திற்கு அப்பாலுள்ள அடர்ந்த காடுகளில் இருக்கும். சமநிலங்களிலும், தக்காணத்துப் பீடபூமியிலும், உயரமில்லாத குன்றுகளிலும் பலவகை மான்கள் திரியும். காட்டெருமையும் கவரிமானும் மேற்குத்தொடர்ச்சி மலையில் இருக்கின்றன. யானைகள் மேற்குத்தொடர்ச்சி மலையில் மிகவும் சாதாரணமாக உண்டு. சில வேளைகளில் யானைக்கூட்டங்கள் சுற்றுப்புறத்துக் கிராமங்களுக்கு இறங்கிவந்து பயிர்களை அழித்துவிடும்.

## 7. ஜனங்களின் ஜீவனோபாயம்.

### உழவு.

உணவு சம்பாதிப்பதற்கு உழைக்கவேண்டும். நமது மாகாணத்தில் உள்ள ஜனங்களில் அநேகர் கிராமங்களில் வசிக்கிறார்கள். அவர்கள் வயல்களையும் தோட்டங்களையும் உழுது தண்ணீர் பாய்ச்சுகிறார்கள்; ஆடுமாடுகளை மேய்க்கிறார்கள். இந்த மாகாணம் பயிர்த்தொழிலினல் பிழைக்கிற ஜனங்கள்நிறைந்த பிரதேசம். சில ஜனங்கள் காடுகளில் மரம் மூங்கில் முதலியவைகளை வெட்டி ஜீவனம் செய்கிறார்கள். பெரிய கிராமந்தோறும் குயவர், சேணியர், சக்கிலியர், தச்சர், தட்டார், கொல்லர், ஆகிய இவர்கள் இருக்கிறார்-

கள். விவசாயிகளுக்குவேண்டிய கருவிகளை இவர்கள் செய்து விற்கிறார்கள். இவர்களைத் தவிர வேண்டிய சாமான்களை வெளியிடங்களிலிருந்து வருவித்து விற்கும் கடைக்காரர்களும் உண்டு.

## கைத்தொழில்.

சில ஊர்களில் அருமையான சில பண்டங்கள் செய்கிறார்கள். நேர்த்தியான பருத்திநூல் புடைவைகளும் பட்டுப் புடைவைகளும் வாங்கவேண்டுமானால் தஞ்சாவூருக்கும் மதுரைக்கும் போகிறோம்: ரத்தின கம்பளங்கள் வேண்டுமானால் எல்லூருக்குப் போகிறோம். மதுரையும் தஞ்சாவூரும் பித்தளைப் பாத்திரங்களுக்கும், செப்புப் பாத்திரங்களுக்கும், வெள்ளிச் சாமான்களுக்கும் பெயர் பெற்றவை. தந்தத்தினாலும், கருங்காலி மரத்தினாலும், சந்தன மரத்தினாலும் செய்யப்படும் விசித்திரமான சாமான்களுக்கு விசாகபட்டணம் பெயர் பெற்றது. மேலைத்தீர வெளியானது தென்னை மிகுந்த பிரதேசம். கொப்பரையைக் காயவைத்தல், அதை ஆட்டி எண்ணெயெடுத்தல், தேங்காய் நாரினால் கயிறுமுறுக்குதல், தென்னங்கீற்று முடைதல் ஆகிய இந்த வேலைகளில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் அங்கே அமர்ந்திருக்கிறார்கள். சென்னை நகரம்போன்ற பற்பல இடங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உண்டு. பருத்தி விளையும் ஊர்களில் நீராவியந்திர சாலைகளை வைத்திருக்கிறார்கள். அந்த யந்திர சாலைகளில் பஞ்சைப் பெரிய பொதிகளாகக்கட்டி வெளியிடங்களுக்கு அனுப்புகிறார்கள். சில ஊர்களில் நூல் நூற்பதற்கும், துணிகள் நெய்வதற்கும் யந்திரங்கள் உண்டு. சென்னை நகரத்துக்குப் போகிறவர்கள் அங்கே உள்ள கர்நாடக பஞ்சுயந்திரசாலை, பக்கிங்ஹாம் பஞ்சு யந்திரசாலை என்னும் பெரிய யந்திரசாலைகளைப் பார்க்கவேண்டும். அங்கே நெய்யும் துணிகள் பெரும்பாலும் முரட்டுத்துணிகள்: அந்தத் துணிகளில் சில வெளி நாடுகளுக்குப் போகின்றன. மேற்சொல்லிய இடங்களில் நூற்கிற பருத்திநூலை இந்த மாகாணத்தில் பற்பல கிராமங்களிலும் உள்ள கை நெசவுக்காரர்கள் வாங்கி உபயோகிக்கிறார்கள்.

கருப்பஞ்சாற்றையும், தென்னஞ்சாற்றையும், ஈச்சஞ்சாற்றையும் சில இடங்களில் காய்ச்சிச் சர்க்கரையும் வெல்லமும் செய்கிறார்கள். நெல்லிக்குப்பத்திலும் சாமரக்கோட்டையிலும் பெரிய சர்க்கரை ஆலைகள் உண்டு. மேற்குத்தொடர்ச்சி மலையில் விளையும் காபிக்கொட்டையை மலையாள தேசத்திற்கு வண்டிகளில் ஏற்றிவந்து உலர்த்தி அயல் தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

## மீன் பிடித்தல்.

அநேக ஜனங்கள் நிலத்தில் பாடுபடாமல் கடலில் உழைத்து ஜீவிக்கிறார்கள்; இந்த மாகாணத்தில் மேற்குக் கடற்கரையிலும் கிழக்குக் கடற்கரையிலும் மீன் பிடித்து ஜீவிக்கும் ஜனங்கள் உள்ள கிராமங்கள் நூற்றுக்கணக்கானவை. அந்தக் கிராமத்தவர்களில் சிலர் படகுகளிலேறிச் சென்று கடலில் மீன் பிடிப்பார்கள்; தூண்டில் முள்ளைப்போட்டுப் பிடிப்பாரும் சிலர் உண்டு; வலையை வீசிப் பிடிப்பாரும் உண்டு. அவ்விதம் பிடிக்கும் மீன் பெரும்பாலும் பச்சையாகவே சமைத்துச் சாப்பிடுவதற்கு உபயோகப்படுகிறது. பாக்கியுள்ள மீனை உலர்த்திப் பக்குவப்படுத்தி வெளியிடங்களுக்கு அனுப்புகிறார்கள். நமது மாகாணத்துத் தென்கோடிக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள கால்வாய் ஆழமானதன்று; மணற்பாங்கானது. ஆகையால் அது முத்துச்சிப்பிகள் விளைவதற்கு அனுகூலமானது. அந்தச் சிப்பிகளிலிருந்து முத்தை எடுக்கிறார்கள்.

## வியாபாரம்.

பயிரிடாமலும், கைத்தொழில் செய்யாமலும் மீன் பிடிக்காமலும் சில ஜனங்கள் வேறுவகையில் ஜீவனம் செய்கிறார்கள். அவர்கள் சாமான்கள் வாங்கி ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குக் கொண்டுபோய் விற்கிறார்கள். இந்தத் தொழிலுக்கு வியாபாரம் என்று பெயர். சிறிய கிராமத்திலும், அந்த ஊரில் விளையாததாகவும் செய்யாததாகவுமுள்ள சில பொருள்களைக் காண்கிறோம். சென்னபட்டணம், திருச்சிராப்பள்ளி, மதுரை முதலான பெரிய பட்டணங்களில் அவற்றின் சுற்றுப்பக்கத்து ஊர்களில் விளையாத பண்டங்களையும் உற்பத்தி செய்யாத பல பண்டங்களையும் விலைக்கு வாங்கலாம். பண்டங்களை விலைக்கு வாங்குகிறோம்; அல்லது விளைவிக்கிறோம், அல்லது கைத்தொழிலினால் செய்கிறோம். விளை பொருள்களையும் கைத்தொழிலினால் செய்யும் பொருள்களையும் விற்றுப் பணமாக்கி, அந்தப் பணத்தைக்கொண்டு ஜனங்கள் தாங்கள் விளைவிக்க முடியாத பண்டங்களையும் கைத்தொழிலினால் செய்ய முடியாத பொருள்களையும் வாங்கிக் கொள்ளுகிறார்கள் அப்படியுள்ள பண்டங்களில் சில நமது மாகாணத்தில் வேறு ஊர்களிலிருந்து வரும்; சில இந்தியாவின் மற்றப் பாகங்களிலிருந்தும் வரும்; சில அயல் தேசங்களிலிருந்து வரும். உதாரணமாக உப்பும், மண்ணெண்ணெயும், தீக்குச்சியும் எந்தக் கிராமத்திலும் கிடைக்கும். கடற்கரை ஊர்களிலிருந்து உப்பு வருகிறது. அங்கிருந்து சாலை மார்க்கமாகவும், படகு

கள் மூலமாகவும், இருப்புப்பாதை மார்க்கமாக வும் உப்பை உள்நாட்டுக் கிராமங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக அளவற்ற ஜனங்கள் வேலை செய்கிறார்கள். பர்மாவிலிருந்து நீராவிக் கப்பலில் வங்காளக் குடாக்கடலின் வழியாக மண்ணெண்ணெய் வருகிறது. அங்கே மண்ணெண்ணெயைக்கிணறுகளிலிருந்து தண்ணீரைப் போல யந்திரங்களினால் இறைத் தெடுக்கிறார்கள். தீக்குச்சி பூமியின் மற்றொரு பாகத்திலிருந்து கப்பலில் கடல் வழியாக வந்து சேருகிறது. இந்த விஷயங்களுக்கு அநேக ஜனங்கள் வேலை செய்யவேண்டும். வண்டிகள் கஷ்டமில்லாமல் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சரக்குகளைக் கொண்டுபோவதற்கு அனுகூலமாக இருக்கும் பொருட்டு எத்தனையோ கூலிக்காரர்கள் வேலை செய்கிறார்கள். இருப்புப் பாதைகளில் கூலியாட்களும், குமஸ்தாக்களும், ஸ்டேஷன் மாஸ்டர்களும், எஞ்சின் டிரைவர்களும், மற்ற வேலைக்காரர்களும் இருக்கிறார்கள். வேறு பலர் கால்வாய்களிலும் கோதாவரி, கிருஷ்ணா முதலிய பெரிய ஆறுகளிலும் படகுகளை ஓட்டிக்கொண்டு உழைக்கிறார்கள். அநேகர் துறைமுகங்களிலிருந்து கப்பல்களுக்கும், கப்பல்களிலிருந்து கடற்கரைக்கும் சாமான்களை எடுத்துக்கொண்டு போகிறார்கள்.

நமது மாகாணத்திலுள்ள பெரிய பட்டணங்களுக்கெல்லாம் இருப்புப்பாதை ஏற்பட்டிருக்கிறது. அந்த இருப்புப்பாதைகள் தேசபடத்தில் வரைந்திருப்பதைக் காணலாம். இவையல்லாமல், சாலைகள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன. அந்தச் சாலைகள் பெரிய பட்டணங்களிலிருந்து கிராமங்களுக்குப் போகின்றன. ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குப் போகவேண்டுமானால் ஒரு சாலையாவது ஏற்பட்டிருக்கும். கிழக்கே படகுகள் செல்லத்தக்க கால்வாய்கள் இருக்கின்றன; மேற்குக்கரையில் கடற்கழிகள் உள்ளன. கடற்பாதை என்னும் பெரியசாலை நமது மாகாணத்தைச் சுற்றிலும் இருக்கிறது. மேற்சொல்லிய சாலைகள், இருப்புப்பாதைகள், கால்வாய்கள், கடற்கழிகள், சமுத்திரம் என்னும் மார்க்கங்களின் வழியாக நமது மாகாணத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சாமான்கள் அடிக்கடி போய்வருகின்றன.

நமதுமாகாணத்தின் வேறு ஊர்களிலிருந்தும் இந்தியாவின் மற்றப் பாகங்களிலிருந்தும் அயல் தேசங்களிலிருந்தும் சரக்குகள் வருகின்றன. அவற்றிற்குப் பதிலாக வேறு சரக்குகளை அந்த அந்த இடங்களுக்கு அனுப்புகிறார்கள். இந்தத் தொழில் செய்கிறவர்கள் வர்த்தகர்கள். கிராமங்களிற்கூடும் சந்தைகளிலிருந்து சரக்குகளை அவர்கள் வாங்கி அந்தச் சரக்குகள் எங்கே வேண்டியிருக்குமோ அந்த இடங்களுக்குக் கொண்டுபோகிறார்கள். அங்கிருந்து வேறு சரக்குகளை அவர்கள் கிராமங்களுக்குக் கொண்டு வருகிறார்கள்.

## அயல்நாட்டு வியாபாரம், துறைமுகங்கள், கடற்கரைப் பட்டினங்கள்.

அயல்நாட்டுக்கு இந்தியாவிலிருந்து சரக்குகள் கடல் வழியாகப் போகின்றன; அயல்நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரும் சரக்குகளும் கடல் மார்க்கமாகவே பெரிய புகைக் கப்பல்களில் வருகின்றன. படகுகளில் வருவதில்லை. அந்தக் கப்பல்கள் ஜலத்தில் இருபது அடி ஆழம் அமிழ்கின்றன. ஆகையால், ஆழம் மிகுந்த துறைமுகங்கள் உள்ள இடங்களுக்கு மட்டுமே கப்பல்கள் கரையின்பக்கமாக வந்து நிற்கக்கூடும். நமது மாகாணத்தில் அவை வந்து நிற்கக்கூடிய பெரிய துறைமுகம் சென்னபட்டணத்தில் மாத்திரம் இருக்கிறது. இந்தத் துறைமுகம் எத்தனையோலக்ஷம் ரூபாய் செலவில் கட்டப்பட்டது. கரையிலிருந்து பலமான கற்சுவர்களை எழுப்பிச் சமுத்திரத்திற்குள் கொண்டுபோய் விட்டிருக்கிறார்கள். இரண்டு கைகளை ஒரு மனிதன் நீட்டி வளைத்துக்கொண்டு நிற்பதுபோல் அந்தச் சுவர்கள் இருக்கின்றன. இந்த இரண்டு கைகளுக்குள் அடங்கிய இடத்தில் மணலையும் மண்ணையும் பறித் தெடுத்து, ஜலம் ஆழமாக நிற்கும்படி செய்திருக்கிறார்கள். மணலை வாருவதற்கும் ஆழமாகப் பறிப்பதற்கும் நீராவி யந்திரக்கப்பல்கள் உண்டு. அந்தக் கப்பல்களுக்கு 'மணல் வாரிக் கப்பல்கள்' என்றுபெயர். கற்சுவர்களினால் சமுத்திரத்து அலைகள் தடுக்கப்படுகின்றன. கரைக்குள்ளே தோண்டப்பட்ட குளம்போன்ற இடத்திற்குள் அலைகள் அடிக்காமையால், நீராவிக் கப்பல்கள் கரைக்குச் சமீபத்தில் தங்கிநிற்க அனுகூலம் உண்டு. நமது மாகாணத்தில் ஆழமாகவும் நல்லதாகவும் இருக்கிற துறைமுகம் இது ஒன்றே.

ஆனாலும், நமது மாகாணத்தின் இரண்டு பக்கங்களிலும் அநேகம் கப்பல் துறைகள் இருக்கின்றன. மரக்கலங்களும் புகைக் கப்பல்களும் இந்தத் துறைகளுக்கு ஒரு மைல் அல்லது ஒன்றரை மைல் தூரத்தில் நங்கூரம் போட்டு நிற்கின்றன. அவைகளில் வரும் சரக்குகளைப் படகுகளில் இறக்கிக் கரைக்குக் கொண்டுவருவார்கள்; அவைகளில் ஏற்றவேண்டிய சரக்குகளையும் அப்படியே கரையிலிருந்து படகில் கொண்டுபோய் ஏற்றுவார்கள். இந்தக் கப்பல்

துறைகள் தேசபடத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. கிழக்குக் கரையில் காக்கிநாடா, நாகபட்டணம், கூடலூர் என்பவை முக்கியமான கப்பல் துறைகள்; மேற்குக் கரையில் தூத்துகுடி, கொச்சி, கள்ளிக்கோட்டை, மங்களூர் என்பவை முக்கியமானவை. தூத்துக்குடி இலங்கைக்கு எதிரே இருக்கிறது.

## முக்கியமான இறக்குமதிகள்.

வெளிநாட்டிலிருந்து நமக்கு வரும் முக்கியமான சரக்குகள் இன்னவையென்று பார்ப்போம். இந்தியாவில் எல்லாரும் பருத்திநூல் ஆடைகளை உடுக்கிறார்கள்; பரம தரித்திரன்கூட வருஷத்துக்கு ஒரு முறையாவது புதிய துணிகளை வாங்குவான். ஆதலால், பருத்திநூல் வஸ்திரங்கள் அதிகமாக இந்தியாவுக்கு வருகின்றனவென்று நாம் தெரிந்து கொள்ளலாம். நெய்த துணிகளும், நூற்ற நூல்களும் வருகின்றன. நூல்களை வாங்கி இந்த நாட்டுத் தொழிலாளிகள் துணிகள் நெய்கிறார்கள்.

பலவகையான உலோகங்களும் அயல் தேசத்திலிருந்து இந்தியாவுக்கு வருகின்றன. இரும்புக் கனிகளும், தாமிரச்சுரங்கங்களும், ஈயச்சுரங்கங்களும், தகரச் சுரங்கங்களும் இந்தியாவில் இல்லை. ஆகையால், அந்த உலோகங்கள் வெளிநாடுகளிலிருந்தே விசேஷமாக இந்தியாவுக்கு வருகின்றன. அப்படியே மேற்சொல்லிய உலோகங்களினால் செய்யப்பட்ட சாமான்களும் வெளிநாடுகளிலிருந்து வருகின்றன. அவையாவன இரும்புக் கம்பிகள், கை ஆணிகள், மர ஆணிகள், கத்திகள், கிராதிக் கம்பிகள், தண்ணீர்க் கொப்பரைகள், ஆயுதங்கள், உருளைகள், யந்திரங்கள் முதலியனவாகும். அவை முக்கியமாக இங்கிலாந்திலிருந்தே வருகின்றன.

இந்தியாவில் போதுமான சர்க்கரை உற்பத்தியாவதில்லை. அதனால் ஜாவா தீவிலிருந்தும், மற்றுமுள்ள உஷ்ணமான வெளிநாடுகளிலிருந்தும் சர்க்கரை மிகுதியாக இந்தியாவுக்கு வருகிறது.

நமது மாகாணத்தில் மண்ணெண்ணெய் கிணறுகள் இல்லை. நாம் உபயோகிக்கும் மண்ணெண்ணெய் பெரும்பாலும் பர்மாவிலிருந்தும் அமெரிகாவிலிருந்தும் வருகிறது. இலங்கைத் தீவிலிருந்து கொட்டைப் பாக்கு மூட்டை மூட்டையாக வருகிறது. தீக்குச்சி, கண்ணாடி, காகிதம், புஸ்தகங்கள் முதலியன விசேஷமாக வெளிநாடுகளிலிருந்து வருகின்றன. மேற்சொல்லியவைகளே முக்கியமான இறக்குமதிச் சரக்குகள்: இன்னும் நூற்றுக்கணக்கான இறக்குமதிச் சரக்குகளும் உண்டு.

## முக்கியமான ஏற்றுமதிகள்.

வெளிநாடுகளிலிருந்து கடல்வழியாக வருகிற இந்தச் சாமான்களுக்கெல்லாம் நாம் எவ்வாறு பணம் கொடுக்கிறோம்? சாமான்கள் செய்கிற யந்திர சாலைகளும் தொழிற் சாலைகளும் நமது நாட்டில் மிகவும் குறைவு. நமது மாகாணத்தில் உலோகக் கனிகளும் இல்லை. ஜனங்கள் பெரும்பாலும் பயிர்த்தொழில் செய்பவர்களாகவும் ஆடுமாடுகளை வளர்ப்பவர்களாகவும் இருக்கிறார்கள். வெளியூர்களிலிருந்து நமக்கு வருகிற சரக்குகளின் கிரயத்தை நமது ஊரின் விளைபொருள் ரூபமாகக் கொடுக்கிறோம். வயல்களிலும் காடுகளிலும் விளைகிற பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம்; ஆடுமாடுகளின் தோல்களையும் அப்படியே அனுப்புகிறோம். இவ்விதமாக அநேகம் கப்பல்களில் தானியங்கள் வெளியிடங்களுக்குப் போகின்றன. இலங்கை முதலான தேசங்களுக்கு நெல் அதிகமாகப் போகிறது. நெல்லை அனுப்புவது போல் சில விதைகளையும், அந்த விதைகளிலிருந்து எடுக்கும் எண்ணெயையும் வெளிநாடுகளுக்கு அனுப்புகிறோம். அப்படி அனுப்பும் முக்கியமான விதைகளாவன:—வேர்க்கடலை, கொட்டைமுத்து, எள்ளு, பருத்திக்கொட்டை, தேங்காய்ப்பருப்பு முதலியன.

ஜப்பான் தேசத்தாரும் மற்ற நாட்டார்களும் நமது தேசத்தில் விளையும் பஞ்சை விசேஷமாக வாங்குகிறார்கள். நமது மாகாணத்தில் பயிராகிற தேயிலையிற் பெரும்பாகம் கிரேட் பிரிட்டனுக்குப் போகிறது. அங்கே எல்லாரும் தேயிலைக் கிஷாயம் சாப்பிடுகிறார்கள். கிரேட் பிரிட்டன் தீவுகளில் உள்ளவர்களும் பிரான்சு தேசத்தாரும் நமது மாகாணத்தில் கிடைக்கிற காபிக்கொட்டையை அதிகமாக வாங்குகிறார்கள்.

ஈரம் மிகுந்த மேற்குக்கரையில் பயிராகிற ரப்பரும் பிரிட்டனுக்குப் போகிறது. மிளகு, மிளகாய், சுக்கு, புகையிலை ஆகிய இந்த நான்கும் இவைகளைப் பயிரிட முடியாத சீதள தேசங்களுக்குப்போகின்றன. நமது மலைக் காடுகளிலிருந்து தேக்கமரமும் சந்தனக்கட்டையும் அனுப்புகிறோம். மாடுகளினால் முரட்டுத் தோல்களும், ஆடுகளினால் மெல்லிய தோல்களும் கிடைக்கின்றன. அந்த முரட்டுத் தோல்களில் சிலவற்றைப் பதனிடாமலும் சிலவற்றைப் பதனிட்டும் அனுப்புகிறோம். வெளிநாட்டார் பாதரக்ஷைகளுக்குப் பதனிட்ட தோல்களையே பெரும்பாலும் உபயோகிக்கிறார்கள். நாம் அவ்வளவு உபயோகிப்பதில்லை. அந்தத் தேசத்தார்கள் நாம் பதனிட்டு

அனுப்பும் தோல்களை மிகுதியாக வாங்குகிறார்கள். இந்த மாகாணத்தில் அடியிற் குறிப்பிட்ட சில சாமான்களும் சென்னைத் துறைமுகத்திலிருந்து வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன:—

பருத்திநூல் துணிகள், பருத்தியினால் நூற்கப்பட்ட நூல்கள், தேங்காய்நார்க் கயிறு, பெரிய வடங்கள், தேங்காய்நார்ப் பாய்கள் முதலியன. வியாபாரிகள் மூலமாக மற்றத் தேசத்தாருக்கு வேண்டிய சரக்குகளை நாம் அனுப்பி நமக்கு வேண்டிய சாமான்களை அவர்களிடத்திலிருந்து தருவித்துக் கொள்கிறோம்.

உலகத்தில் மற்ற இடங்களில் இப்படியே வியாபாரம் நடந்துவருகிறது. ஜனங்கள் சாமான்களை மாற்றிக்கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு தேசத்தாரும் தங்கள் நாட்டில் விசேஷமாக விளையும் பொருள்களையும், பழங்களையும், சுரங்கங்களிலிருந்து வெட்டி யெடுக்கும் கனிஜ வஸ்துக்களையும், தாங்கள் சுலபமாகச் செய்யக்கூடிய சாமான்களையும் அயல்தேசங்களுக்கு அனுப்புகிறார்கள். இவைகளுக்குப் பதிலாக அந்த அந்த இடங்களில் சுலபமாகக் கிடைக்கும் வஸ்துக்களையும், அங்கங்கே அகப்படும் கனிஜங்களையும் விசேஷமாக விளையும் பழங்களையும் பொருள்களையும் அவர்கள் வருவித்துக் கொள்கிறார்கள்.

## 8. ராஜதானியின் பிரிவுகள்.

**ந**மது மாகாணத்தில் மேட்டு நிலங்களும், பள்ளத்தாக்குகளும் இருக்கின்றன. அங்குமிங்கும் குறுக்கே ஓடும் மலைத்தொடர்கள் அந்த மேட்டு நிலங்களையும் பள்ளத்தாக்குகளையும் பிரிக்கின்றன; ஆறுகள் மேட்டு நிலத்திலிருந்து பள்ளத்தாக்கு வழியாக ஓடுகின்றன. நமது மாகாணத்தைச்சுற்றிப் பெரும்பாலும் சமுத்திரமே இருக்கிறது. வேறொரு விதமாகவும் நமது மாகாணம் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆளுவதற்கு அனுகூலமாக அதனைப் பல பாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள்.

இந்தியாவைச் சென்னை ராஜதானி, பம்பாய் ராஜதானி, வங்காள ராஜதானி, பஞ்சாப் முதலிய பல மாகாணங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அதுபோல, ஒவ்வொரு மாகாணத்தையும் பற்பல சிறிய பாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அந்த சிறிய பாகங்களுக்கு ஜில்லாக்கள் என்று பெயர். நமது மாகாணம் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு விதமாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இப்போது இருபது ஜில்லாக்களுக்கு அதிகம் இருக்கின்றன. ஒரு ஜில்லாவிலுள்ள முக்கிய அதிகாரிகள் கலெக்டரும் ஜில்லா ஜட்ஜுமாவர். கலெக்டருடைய கச்சேரி இருக்கும் இடமே ஜில்லாவின் முக்கியபட்டணமாகும். ஒவ்வொரு ஜில்லாவும் பல தாலூகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தாலூகாவுக்குத் தலைமையதிகாரி தாசில்தார்.

ஒவ்வொரு ஜில்லாவின் எல்லைகளையும் சர்வே அதிகாரிகள் செவ்வையாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். தேசபடத்தைப் பாராமல் ஜில்லாக்களின் எல்லைகளைச் சொல்ல முடியாது. தேச படத்தினால் நமது மாகாணத்தின் பல ஜில்லாக்களையும் தெரிந்துகொள்ளலாம். அந்த ஜில்லாக்களாவன:—

1. செங்கற்பட்டு, தென்னாற்காடு, நெல்லூர்; இவை மூன்றும் சென்னபட்டணத்தைச் சுற்றி இருக்கின்றன; இவைகளுக்குக் கர்நாடகம் என்று பெயர்.

2. குண்டூர், கிருஷ்ணா, கோதாவரி, விசாகபட்டணம், கஞ்சம்; இந்த ஐந்தும் வடசர்க்கார் என்று பெயர் பெறும்.

3. வடஆற்காடு, சித்தூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி; இவை மத்திய ஜில்லாக்கள் என்று சொல்லப்படும்.

4. தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி. இந்த நான்கும் தென் ஜில்லாக்களாகும்.

5. அனந்தபுரம், பல்லாரி, கர்நூல், கடப்பை; இந்நான்கும் விடப்பட்ட ஜில்லாக்கள் என்று வழங்கப்படும்; இவை தக்காணத்தில் உள்ளவை.

6. நீலகிரி ஜில்லா; இது மலைப்பிரதேசம்; மிகவும் சிறியது.

7. மலையாளம், தென்கன்னடம்; இவை இரண்டும் மேற்குத்தீரத்திலுள்ளவை.

8. சென்னபட்டணம்; இதனையே ஒரு ஜில்லாவென்று சொல்லுவார்கள். இதற்கும் ஒரு கலெக்டர் உண்டு.

மொத்தம் எத்தனை ஜில்லாக்கள் இருக்கின்றன?

இந்த ஜில்லாக்களின் கலெக்டர்களெல்லாரும் சென்னைக் கவர்ன்மென்டாரின் அதிகாரத்துக்கு உட்பட்ட உத்தியோகஸ்தர்கள் ஆவர். இந்த மாகாணம் முழுவதையும் சென்னைக் கவர்ன்மென்டாரே ஆண்டு வருகிறார்கள்.

### சுதேச ராஜ்யங்கள்.

மேலேசொன்ன ஜில்லாக்களை அல்லாமல் நமது மாகாணத்தில் ஐந்து சுதேச ராஜ்யங்கள் இருக்கின்றன. அவைகளுள் மேற்குக்கரையில் திருவாங்கூரும் கோச்சியும் உள்ளன. இவை

இரண்டும் பெரிய ராஜ்யங்கள். மற்ற மூன்றும் சிறியவை. அவையாவன:— புதுக்கோட்டை, சாண்டூர், பங்கனபள்ளி. புதுக்கோட்டை திருச்சிராப்பள்ளி ஜில்லாவுக்குத் தெற்கே இருக்கிறது. சாண்டூர் ராஜ்யமும், பங்கனபள்ளி ராஜ்யமும் தக்காணத்தில் விடப்பட்ட ஜில்லாக்களில் இருக்கின்றன. முதல் நான்கு ராஜ்யங்களையும் இந்திய அரசர்கள் ஆண்டு வருகிறார்கள்; ஐந்தாவதான பங்கனபள்ளியை ஒரு நவாபு ஆளுகிறார். இந்தச் சுதேச அரசர்கள் தங்கள் நாட்டுக்கு வேண்டிய சட்டங்களைத் தாங்களே செய்து கொள்ளலாம். ஆனால், அந்தச் சட்டங்களைச் சென்னைக் கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கவேண்டும்.

## 9. கர்நாடக ஜில்லாக்கள்: செங்கற்பட்டு, தென்னாற்காடு, நெல்லூர்.

1. **செங்கற்பட்டு.**—சென்னை நகரிலிருந்து புறப்பட்டு, அதனைச் சுற்றிலுமுள்ள ஜில்லாக்களை முதலில் போய்ப்பார்ப்போம். இந்த ஜில்லாக்கள் எல்லாம் கடலோரமாக இருக்கின்றன; கிழக்குக் கரைச் சமவெளியில் இவை இருக்கின்றன என்பது தேசபடத்தைப் பார்த்தால் தெரியும்.

நாம் புறப்பட்டவுடன் முதல் முதலில் செங்கற்பட்டு என்னும் பட்டணத்திற்குப் போய்ச் சேருவோம். அது பாலாற்றங்கரையில் இருக்கிறது. சென்னையில் மெயில் வண்டியில் ஏறினால் இரண்டு மணிநேரத்தில் அந்த ஊருக்குப் போய் விடலாம். போகும் வழியில் சைதாப்பேட்டை, பறங்கிமலை, பல்லாவரம் என்னும் ஊர்களைக் கடக்கிறோம். வழியில் பல சிறிய குன்றுகளும் இருக்கின்றன. மழைக்காலத்தில் குளங்களிலும் குட்டைகளிலும் தண்ணீர் நிரம்பியிருக்கும்.

செங்கற்பட்டு நகரம் ஒரு பெரிய ஏரியின் கரையில் இருக்கிறது. அந்த ஏரி ஜலம் நெல் வயல்களுக்குப் பாய்கிறது. ஏரியைச் சுற்றிலும் சிறிய குன்றுகள் உண்டு. அந்தப் பட்டணத்திலிருந்து சாலையின் வழியாக மகாபலிபுரம் என்னும் இடத்திற்குப் போகலாம். மகாபலிபுரத்தில் கருங்கற்பாறையிற் குடைந்து செதுக்கிய பிரசித்தி பெற்ற கோவில்கள் இருக்கின்றன. அந்தக் கோவில்கள் மணல் நிறைந்த கடற்கரையில் கட்டப்பட்டவை. அதற்குப் போகும் வழியில் திருக்கழுக்குன்றம் என்னும் ஒரு சிவ ஸ்தலம் இருக்கின்றது. அவ்வூரில் மலையின்மீது ஒரு கோவிலும், கீழே அழகான ஆலயமொன்றும் இருக்கின்றன.

செங்கற்பட்டிலிருந்து சாலைவழியாக மகாபலிபுரத்திற்குப் போகாமல் இருப்புப்பாதை வழியாகப் போனால், காஞ்சீபுரம் போய்ச் சேரலாம். காஞ்சிபுரத்திற்குப் போவது ஒரு கிளைப்பாதை.

காஞ்சிபுரம் மிகவும் புராதனமான பட்டணம். அதில் நூற்றுக்கணக்கான தேவாலயங்கள் இருக்கின்றன. பல தேசங்களிலிருந்தும் ஜனங்கள் அந்தத் தேவாலயங்களைத் தரிசிக்கக் கூட்டங் கூட்டமாக வருவார்கள்.

சென்னை நகரத்திலிருந்து புறப்படுகிற சென்னை தென்மகாராஷ்டிர வண்டியானது உள்நாட்டு வழியாக மற்றொரு திவ்விய க்ஷேத்திரம் போய்ச் சேருகின்றது. அது (திருவள்ளூர்) திரு எவ்வுளூர் எனப்படும். நமது மாகாணத்தில் சென்னபட்டணத்திற்குத் தெற்கேயுள்ள பட்டணங்களிலும் கிராமங்களிலும் அழகான தேவாலயங்கள் நூற்றுக்கணக்காக உண்டு.

2. **தென்னாற்காடு.**—செங்கற்பட்டுக்குத் தெற்கே பாலாற்றைக் கடந்து முன்னே செல்வோமானால், தென்னாற்காடு ஜில்லாவுக்குள் பிரவேசிப்போம். விழுப்புரம் என்னும் ஊரில் ரயில்வே ஜங்ஷன் ஒன்று இருக்கிறது. விழுப்புரம் தென்னாற்காடு ஜில்லாவின் மத்தியில் உள்ள இடம். அங்கிருந்து கிழக்குமுகமாகச் செல்லும் கிளைப்பாதை வழியாகத் திரும்பினால் புதுச்சேரிக்குப் போகலாம். புதுச்சேரி பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான துறைமுக நகரம்.

விழுப்புரத்திலிருந்தே உள்நாட்டில் வடமேற்கு முகமாகத்திரும்பினால் தக்காணத்துக்குப் போய்ச் சேரலாம். அந்த இரண்டு வழியாகவும் போகாமல் நேர் தெற்கே போனால், கூடலூரை அடையலாம். அது தென்னாற்காடு ஜில்லாவுக்குத் தலைநகரம். அது தென்பெண்ணையாற்றின் முகத்துவாரத்திற்கும் செண்டு டேவிட் கோட்டைக்கும் அருகில் இருக்கிறது. செண்டு டேவிட் கோட்டை மிகவும் பழமையானது. இப்பொழுது அது பாழடைந்து கடலோரத்தில் உள்ளது. கடற்கரை வழியாகவே தெற்கே போனால், பறங்கிப்பேட்டை (Portonovo) என்னும் துறைமுகம் வருகிறது. அங்கிருந்து பார்த்தால் சிதம்பரத்தின் அழகான கோபுரங்கள் கண்ணுக்குத் தெரியும். சிதம்பரம் கொள்ளிடம் என்னும் ஆற்றுக்கு அருகிலுள்ள பட்டணம். கொள்ளிடம் காவேரியாற்றின் கிளை நதியாகும். காவேரியாறு தென்னாற்காடு ஜில்லாவுக்கும் தஞ்சாவூர் ஜில்லாவுக்கும் நடு எல்லையில் ஓடுகிறது.

3. **நெல்லூர் ஜில்லா.** காவேரிக் கரையிலிருந்து போனவழியே மறுபடி திரும்பினால் சென்ன

பட்டணம் வந்து சேரலாம். சென்னபட்டணத்தி லிருந்து வடக்கு முகமாக நெல்லூர் ஜில்லாவுக்குப் போவோம். பாலாறு செங்கற்பட்டு ஜில்லாவுக்கு நடுவில் ஓடுகிறதல்லவா? தென் பெண்ணையாறு தென்னாற்காடு ஜில்லாவுக்கு நடுவில் ஓடுகிறதல்லவா? அப்படியே வட பெண்ணையாறு நெல்லூர் ஜில்லாவுக்கு நடுவில் ஓடுகிறது. நெல்லூர் என்னும் பட்டணம் வட பெண்ணையாற்றின் கரையில் இருக்கின்றது. நெல்லூரைச் சுற்றி நெல் வயல்கள் அதிகமாக உண்டு. அதனருகில் ஒரு கல்லணை கட்டப்பட்டிருக்கிறது. அதிலிருந்து வடபெண்ணையாற்றின் ஜலம் விஸ்தாரமான நிலங்களுக்குப் பாய்கின்றது. வயல்களில் விளைகிற நெல்லையெல்லாம் ஊரிலுள்ள ஆலையில் குத்தி அரிசியாக்குகிறார்கள்.

சென்னபட்டணத்திலிருந்து நெல்லூருக்குச் சாலைவழியாகவும் போகலாம்; கால்வாய் வழியே படகுகளில் ஏறியும் போகலாம்; இருப்புப்பாதை வழியாகவும் போகலாம். சென்னபட்டணத்திலிருந்து நெல்லூருக்குப் போகும் கால்வாய்க்கு பக்கிங்காம் கால்வாய் என்று பெயர். அதன் வழியாகப் படகிற் போகும் போது பழவேற்காட்டு ஏரி காணப்படுகிறது. அந்த ஏரி ஒரு நீண்ட கடற்கழி. அதற்கும் கடலுக்கும் இடையில் நீளமான திட்டு ஒன்று உண்டு. அந்தத் திட்டு அதிக உயரமானதல்ல; ஆனாலும், காடுகள் அடர்ந்த இடம். கால்வாய் வழியே போகாமல் இருப்புப்பாதை வழியே போனால் கூடூர் என்னும் ஜங்ஷனைக் கடக்க வேண்டும். அங்கிருந்து கிளைப்பாதையின் வழியாக வேங்கடகிரி என்னும் நகரத்திற்குப் போகலாம். வேங்கடகிரியானது நெல்லூர் ஜில்லாவின் மேற்கே கிழக்குத்தொடர்ச்சி மலைக்கு அருகில் உள்ளது.

வடசர்க்கார்: நெல்லூரிலிருந்து கிளம்பி வடக்கேயுள்ள வடசர்க்கார் ஜில்லாக்களுக்குப் போவோம். வடசர்க்காரில் குண்டூர், கிருஷ்ணா, கோதாவரி, விசாகபட்டணம், கஞ்சம் என்னும் ஜில்லாக்கள் அடங்கி இருக்கின்றன. இந்த ஜில்லாக்கள் எல்லாம் கிழக்குத்தொடர்ச்சி மலைக்கும் வங்காளக் குடாக்கடலுக்கும் இடையில் இருப்பவையென்று தேச படத்தினால் தெரியும். அந்த மலையில் உற்பத்தியாகிற நதிகள் இந்த ஜில்லாக்களில் பாய்ந்து வங்காளக் குடாக்கடலில் விழுகின்றன. சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போகும் இருப்புப்பாதையும், கரைமார்க்கமும் இந்த ஜில்லாக்களின் வழியே கடலோரமாகச் செல்லுகின்றன. இவ்விதமாக நாம் ஒவ்வொரு இடத்துக்கும் இருப்புப்பாதை வழியாகவும் தரை மார்க்கமாகவும் போகலாம். வழியிலுள்ள முக்கியமான பட்டணங்களில் இருப்புப் பாதையும் கரைமார்க்கமும் சந்திக்கின்றன.

1. குண்டூர் ஜில்லா. இருப்புப்பாதையின் வழியாக இந்த ஜில்லாவுக்குப் போகும்போது முதல் முதலில் நமக்கு எதிரில் இருப்பது ஓங்கோல் என்னும் பட்டணம். இந்த ஜில்லாவின் தலைநகரமான குண்டூருக்குப் போகவேண்டுமானால் ஒரு ஜங்ஷனில் இறங்கி மேற்கே திரும்பவேண்டும். குண்டூருக்கும் கிழக்குத் தொடர்ச்சிமலைக்கும் அதிக தூரமில்லை. இந்தப் பட்டணம் பருத்தி விளையக்கூடிய பூமியில் இருக்கிறது. ஆகையால், இது பஞ்சு வியாபாரத்திற்கு முதன்மையான இடமாகும். சுற்றிலுமுள்ள வயல்களில் விளையும் பருத்தியிலிருந்து கொட்டையைப் பிரித்தெடுப்பதற்கும், பஞ்சை அமுக்கிப் பொதிகளாகக் கட்டுவதற்கும் யந்திரசாலைகள் இவ்வூரில் இருக்கின்றன. குண்டக்கல் ஜங்ஷனிலிருந்து நமது த்வீபகற்பத்தின் குறுக்கே ஓடும் இருப்புப்பாதையில் குண்டூர் நகரம் இருக்கிறது. தேச படத்தைப் பார்த்தால் இது தெரியும்.

2. கிருஷ்ணா ஜில்லா. குண்டூரிலிருந்து மேற் சொல்லிய வழியாகப் போவோம். கிருஷ்ணா நதியைக் கடந்தவுடனே கிருஷ்ணா ஜில்லாவில் கால் வைக்கிறோம். கிருஷ்ணா நதிக்கும் கோதாவரி நதிக்கும் இடையிலுள்ள பிரதேசமே கிருஷ்ணா ஜில்லா. ஆகையால், இந்த ஜில்லா முழுவதும் டெல்டாவாகவே இருக்கிறது. இந்த நிலம் விசாலமாகவும் சம்வெளியாகவும் மிகவும் செழிப்பாகவும் இருக்கிறது; ஆகையால், இங்கே கிராமங்கள் அதிகமாக இருக்கின்றன. நாம் முதல் முதல் பேஸ்வாடா என்னும் பட்டணத்திற்குப் போய்ச் சேருகிறோம். அது கிருஷ்ணா நதியின் வடகரையில் இருக்கிறது. அந்த நதியைக் கடந்து ஊருக்குள் போவதற்கு ரெயில்வே அதிகாரிகள் வாராவதியொன்று கட்டியிருக்கிறார்கள். அது மிகவும் அழகானது. தேச படத்தில் பெஸ்வாடாவைப் பார்த்தால் அது மிகவும் முக்கியமான இடம் என்பது தெரியும்.

அது மிகவும் முக்கியமான ரெயில்வே ஜங்ஷன். அங்கிருந்து ஐந்து பக்கங்களில் இருப்புப் பாதைகள் செல்லுகின்றது. அந்தக் கிளைகளாவன:—1. கடலோரமாக வடக்கே கல்கத்தாவுக்குப் போகும் பாதை, 2. தெற்கே சென்னபட்டணத்திற்குப் போகும்பாதை, 3. தக்காணத்துப் பீடபூமியில் விடப்பட்ட ஜில்லாக்களின் வழியாகப் போகும்பாதை, 4. ஹைதரா

பாத் சம்ஸ்தானத்துக்குப்போகும் பாதை, 5. டெல்டாவின் வழியாக மசூலிபட்டணம் வரையில் போகும் பாதை. அல்லாமலும், அந்த நகரம் கிருஷ்ணு நதியின் முகத்துவாரத்தில் இருக்கிறது. இந்த நதியில் படகுகளின் போக்கு வரவு உண்டு. ரெயில்வே பாலத்திற் கருகில் பெரிய அணை கட்டப்பட்டிருக்கிறது. அதிலிருந்து கால்வாய்கள் புறப்படுகின்றன. ஆகையால் கிருஷ்ணு டெல்டாவுக்குப்பாயும் கால்வாய்களெல்லாம் பெஸ்வாடாவிலிருந்தே புறப்படுகின்றன. அந்தக் கால்வாய்கள் சிலவற்றில் கப்பல்கள் செல்லும். பெஸ்வாடாவிலிருந்து ஒரு கால்வாய் நீளமாக ஓடிச் சென்னபட்டணத்திற்குப் போகிறது. மற்ருெரு கால்வாய் புறப்பட்டுக் கோதாவரியாற்றில் வந்து கலக்கிறது. இந்த டெல்டாவின் வழியாக நாம் பிரயாணம் செய்கையில் கால்வாய்களில் முன்னும் பின்னும் ஓடிக்கொண்டிருக்கும்படகுகளின் பாய்மரங்கள் நமது கண்ணுக்குத் தெரிகின்றன. அந்தப் பாய்மரங்கள் மிகவும் பெரியவை.

**மசூலிபட்டணத்**திற்குக் கிளைப்பாதையின் வழியாகவாவது, கால்வாயின் வழியாகவாவது போய்ச் சேரலாம். மசூலிபட்டணம் கிருஷ்ணு ஜில்லாவுக்குத் தலை நகரம். அது கிருஷ்ணு டெல்டாவிலுள்ள துறைமுக நகரம்.

இந்த ஜில்லாவுக்கு மத்தியில், கிருஷ்ணு கோதாவரி என்னும் இரண்டு பெரிய நதிகளுக்கிடையில் பெரிய இருப்புப்பாதை **எல்லூர்** என்னும் பட்டணத்தை அடுத்துப் போகின்றது. கிருஷ்ணுவிலிருந்து புறப்படும் கால்வாயொன்று கோதாவரியிற் போய்க் கலக்கிறதல்லவா? அந்தக் கால்வாயின் வழியாகவும் எல்லூருக்குப் போகலாம். அது செழிப்பான நிலங்களின் மத்தியில் இருக்கிறது. எல்லூருக்கும் **கோலேரி** என்னும் பெரிய ஏரிக்கும் அதிக தூரமில்லை. ஆகையால், எல்லூரில் நெல் வியாபாரம் அதிகம். அங்கே நெல்லைக்குத்தி அரிசியாக்கும் யந்திரசாலை ஒன்று இருக்கிறது.

கிருஷ்ணுவைப்போன்ற செழிப்பான ஜில்லாவில் பிரயாணஞ்செய்கையில் ரெயில்வே ஸ்டேஷன்கள் அதிகமாக இருப்பதை நாம் காண்கிரேம். அநேக கிராமங்களும், சிறிய பட்டணங்களும் வழியில் இருக்கின்றன. அப்படிப்பட்ட பட்டணங்களுள் **நூஸ்விட்** என்பது மிகவும் பெரியது. அது இருப்புப்பாதைக்குச் சிறிதுதூரம் விலகிக் கிழக்குத்தொடர்ச்சி மலைக்கு அருகில் இருக்கிறது.

3. **கோதாவரி ஜில்லா:** கோதாவரி நதியைக் கடந்து கோதாவரி ஜில்லாவுக்குள் பிரவேசிப்போம். கோதாவரி நதியைக் கடப்பதற்கு ரெயில்வே அதிகாரிகள் அழகான பெரிய பாலம் ஒன்றுகட்டி இருக்கிருர்கள். அந்தப் பாலத்தின் வடகோடியிலிருப்பது **ராஜமகேந்திரம்** என்னும் பட்டணம். நமது மாகாணத்தில் கிழக்குப் பிரதேசத்தில் உண்மையான ஆற்றுத்துறைப் பட்டணமென்பது ராஜமகேந்திரம் ஒன்றே. கோதாவரி நதி அகலமாகவும் ஆழமாகவும் இருக்கின்றது. அதன் கரைகளில் படகுகள் கணக்கில்லாமல் நிற்பதைக் காணலாம். அவற்றில் உப்பு மூட்டைகளையும், நெல் மூட்டைகளையும் ஏற்றி அயல் நாட்டுக்குக் கொண்டுபோவார்கள்; வேறு சரக்குகளை டெல்டாவின் வழியாகக் கடற்கரைக்குக் கொண்டுபோவார்கள். கிழக்குத் தொடர்ச்சிமலையில் வெட்டிய மரத்துண்டுகளும் மூங்கில்களும் அங்கிருந்து கோதாவரியாற்றில் மிதந்து ராஜமகேந்திரத்திற்கு வந்து சேருகின்றன. கோடைமழையில் தண்ணீர் நிரம்பியிருக்கையில் படகுகள் ஆற்றின் மேற்குப் பக்கமாக நூறுமைல் தூரம் தக்காணத்தில் செல்லக்கூடும். ராஜமகேந்திரத்திலிருந்து 4 மைல் கிழக்கே **தவளேசுவரம்** என்னும் இடத்தில் கோதாவரியாற்றுக்குப் பெரிய அணை கட்டப்பட்டிருக்கிறது. அங்கிருந்து பல கால்வாய்கள் புறப்பட்டுச் சமநிலமான டெல்டாவுக்குப் பாய்கின்றன.

ராஜமகேந்திரத்திலிருந்து இருப்புப்பாதை மூலமாகவாவது, கரைமார்க்கமாகவாவது, கால்வாய் வழியாகவாவது டெல்டாவில் முன்னே செல்வோமானல், **சாமல்கோட்டை**க்குப்போய்ச் சேரலாம். இந்தச் செழிப்பான பிரதேசத்தில் பயிராகிற கருப்பங் கழிகளை ஆலையிலிட்டுச்சாறு பிழிந்து வெல்லமும், சர்க்கரையும், சாராயமும் செய்கிருர்கள். பனஞ்சாற்றையும் காய்ச்சி வெல்லம் முதலியன விசேஷமாகச் செய்வதுண்டு. சாமல்கோட்டையிலிருந்து கிளைப்பாதையொன்று **காக்கிநாடா**வுக்குப் போகிறது.

காக்கிநாடா முக்கியமான ஒரு துறைமுகம். அதுவே கோதாவரி ஜில்லாவுக்குத் தலைநகரம். கிருஷ்ணு டெல்டாவுக்கு மசூலிபட்டணம் துறைமுகமல்லவா? அதுபோலவே காக்கிநாடா கோதாவரி ஜில்லாவுக்குத் துறைமுகம். காக்கிநாடாவிலிருந்து அரிசி மிகுதியாக ஏற்றுமதியாகின்றது. **பித்தாபுரம்** என்னும் பட்டணத்தோடு டெல்டா முடிவாகின்றது. அதற்குப் பிறகு கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒருபாகம் கடற்கரை வரையில் நீண்டிருக்கிறது.

4. இனி **விசாகபட்டணம் ஜில்லா**வுக்குப் போவோம். சென்னை ராஜதானியிலுள்ள ஜில்லாக்களுள் அது பெரியது. கடலோரமாக உள்ள

பாகமெல்லாம் சமதரையாக இருக்கிறது; அந்த ஜில்லாவின் உள்நாடு முழுவதும் குன்றுகள் நிறைந்தது. அங்கே பெரிய நதி ஒன்றும் இல்லை.

**அனகபள்ளி** என்னும் ஊரில் கரும்புத்தோட்டங்கள் அதிகம். அந்த ஊரைத் தாண்டிப்போனால், **விசாகபட்டணம்** சேருகிறோம். விசாகபட்டணம் முக்கியமான துறைமுகம். அதுவே ஜில்லாவின் முக்கிய பட்டணம். அதற்குக் கொஞ்சதூரம் வடக்கே **பிமிலிபட்டணம்** என்னும் மற்றொரு துறைமுகம் உள்ளது. இருப்புப்பாதை வழியாக மறுபடி சென்றால், வழியில் **விஜயநகரம்** இருக்கின்றது. அது கிழக்குத்தொடர்ச்சி மலைக்கும் கடற்கரைக்கும் மத்தியில் உள்ளது. விஜயநகரத்திலிருந்து வடக்கே மத்திய மாகாணங்களுக்குப் போவதற்கு இருப்புப்பாதையொன்று போடுகிறார்கள். அந்த இருப்புப்பாதை மலைத்தொடரைக் கடந்து போகவேண்டும். அது **போப்பிலி** என்னும் பட்டணத்தின் வழியாகப் போகும். பொப்பிலி ஒரு ஜமீன்தாரைச் சேர்ந்த புராதன பட்டணம்.

**5. கஞ்சம் ஜில்லா.** லங்குல்யா நதியைக் கடந்துபோனால் கஞ்சம் ஜில்லா வருகிறது. வடசர்க்கார் ஜில்லாக்களில் வடக்கேயுள்ளது இந்த ஜில்லா. இருப்புப்பாதை இந்த ஜில்லாவில் கடலோரமாகப் போகின்றது. ஜில்லாவின் உள்நாடு முழுவதிலும் மலை அதிகம். அந்த மலைகளுள் அதிக உயரமான கொடுமுடிக்கு **மகேந்திரகிரி** என்று பெயர். தூரத்திலிருந்தே அதனை நாம் காணலாம். கிழக்குத்தொடர்ச்சி மலையைச் சார்ந்த மலைப்பிரதேசங்களில் காட்டு ஜனங்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்குக் **காண்டவர்கள்** என்று பெயர்.

நௌபாடா ஜங்ஷனிலிருந்து **பரலாகிமிடி** என்னும் பட்டணத்திற்கு ஒரு கிளைப்பாதை போகின்றது. பரலாகிமிடி என்பது குன்றுகளின் இடையிலுள்ள பள்ளத்தாக்கில் இருக்கும் சிறிய பட்டணம். கிளைவழியே போகாமல் பெரிய இருப்புப்பாதை வழியே போனால் **பரஹாம்பூர்** போய்ச் சேருகிறோம். அது ஜில்லாவுக்குத் தலைநகரம். கொஞ்சதூரத்துக்கு அப்பால் **சத்திரபுரம்** என்னும் பட்டணம் இருக்கிறது. பரஹாம்பூரிலிருந்து தரைவழியாக ரிஷிகுல்யாநதி பாயும்செழிப்பான இடத்திற்குப் போனால், **ஆஸ்கா** என்னும் பட்டணம் இருக்கிறது. ஆஸ்காவில் ஒரு பெரிய சர்க்கரையாலை உண்டு. அங்கிருந்து முன்னே சென்றால், **ரசல்கோண்டா** என்னும் பட்டணம் இருக்கிறது. கஞ்சம் ஜில்லாவின் கடற்கரையில் **கலிங்கபட்டணம்** என்னும் ஒரு சிறிய துறைமுகமும், **கோபாலபுரம்** என்னும் வேறொரு சிறிய துறைமுகமும் இருக்கின்றன. இவைகளைத் தேச படத்திற் காணலாம். சத்திரபுரத்தைக் கடந்துபோன உடனே நமக்கு வலதுபக்கத்தில் அழகிய **சில்கா ஏரி** இருக்கிறது. அங்கிருந்து நமது மாகாணத்து எல்லையைத் தாண்டி ஒரிஸ்ஸாவுக்குப் போகலாம்.

## 10. மத்திய ஜில்லாக்கள்.

இனி, மத்திய ஜில்லாக்களுக்குப் போவோம். மத்திய ஜில்லாக்களாவன.—**வடஆற்காடு, சித்தூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி.** இவை நமது மாகாணத்தின் மத்தியில் உள்ளனவென்பது தேச படத்தைப் பார்த்தால் தெரியும். இந்த ஜில்லாக்களுள் எதுவும் கடலுக்குச் சமீபமாக இல்லை. கடலோரமாக உள்ள சமநிலத்தில் ஒரு பாகம் இந்த ஜில்லாக்களில் அடங்கி இருக்கிறது. மேற்கே மட்டும் கிழக்குத்தொடர்ச்சி மலையில் சில பாகம் இந்த ஜில்லாக்களில் சேர்ந்திருக்கிறது. பாலாற்றின் போக்கையும் காவேரியாற்றின் போக்கையும் படத்தில் கவனித்துப் பார். இந்த ஜில்லாக்கள் மேற்சொல்லிய படி அமைந்திருக்கின்றனவென்பது தெரியவரும். தெற்கே வடஆற்காடு ஜில்லாவுக்கும் வடக்கே சித்தூர் ஜில்லாவுக்கும் நடுவில் பாலாறு ஓடுகின்றது. காவேரியாறு சேலம் ஜில்லாவுக்கும் கோயம்புத்தூர் ஜில்லாவுக்கும் நடுவில் ஓடித் திருச்சிராப்பள்ளி ஜில்லாவை இரண்டு பிரிவாக்கிப் பாய்கின்றது.

1. **வடஆற்காடு.** சென்னபட்டணத்திலிருந்து தென்மேற்கு இருப்புப்பாதை வழியாகப் போவோம். முன்னொரு முறை இந்த வழியாகப் போயிருக்கிறோம். பாலாற்றுப் பாய்ச்சலுள்ள செழிப்பான பூமியின் வழியாகப் போகையில், **ஆற்காடு, ராயவேலூர், ஆம்பூர், வாணியம்பாடி** என்னும் ஊர்கள் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன. ஆற்காடு என்பது பழையகாலத்துப் பட்டணம். ஆற்காட்டிலுள்ள கோட்டை மிகவும் பெயர் பெற்றது. இப்போது அது பாழடைந்திருக்கிறது. இந்த ஜில்லாவுக்குத் தலைநகரம் ராயவேலூர். இதில் கோட்டை உண்டு. அதற்குள் நல்ல கோவில்கள் உள்ளன. **ஆம்பூர்** என்னும் பட்டணம் ஒரு மலைக் கணவாயில் இருக்கிறது. அந்தக் கணவாயின் வழியாக மலையிலிருந்து சமநிலங்களுக்குப் போகலாம். இந்த இடங்களில் பழைய நாளில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஹைதர் ஆலிக்கும் யுத்தங்கள் நடந்தன. ஆகையால், இவை இந்திய சரித்திரத்தில் பெயர் பெற்ற பட்டணங்களாகும்.

2. **சித்தூர் ஜில்லா:** இந்த ஜில்லாவில் வட ஆர்காட்டைக் காட்டிலும் குன்றுகள் அதிகம். இந்த ஜில்லாவின் ஒரு பாகம் தக்காணத்துப் பீட பூமியைச் சேர்ந்திருக்கிறது. ஜில்லாவின் முக்கிய பட்டணம் **சித்தூர்.** அது சென்னபட்டணத்திலிருந்து 100 மைல் தூரத்தில் இருக்கிறது; சமுத்திர மட்டத்துக்குமேல் 1,000 அடி உயர்ந்திருக்கிறது. ஆகையால், அந்த ஊர் குளிர்ச்சியாக இருக்கும்; கோடையிலும் வெப்பம் அதிகமாகத் தெரியாது. கிழக்குத்தொடர்ச்சி மலைக்கு அருகில் **திருப்பதி** மலை இருக்கிறது. அந்த மலையிலுள்ள கோவில்களுக்கு யாத்திரிகர்கள் விசேஷமாக வருவார்கள். திருப்பதியில் பித்தளைப்பாத்திரங்களும் மர சாமான்களும் மரப்பாவை (பொம்மை)களும் விசேஷம்.

3. **சேலம் ஜில்லா:** இந்த ஜில்லாவில் மலைத் தொடர்கள் அதிகம். அவைகள் படிக்கட்டுகளைப்போல் அடுக்கடுக்காக உள்ளன. தக்காணத்துப் பீடபூமியைச் சேர்ந்த மைசூரிலிருந்து இறங்கிவரும் படிகளைப்போல இந்த வரிசையின் அப்படியே சேலத்துச் சமவெளியாகும். அந்த மலைத்தொடர்களுக்கு இடையில் செழிப்பான பள்ளத்தாக்குகள் உண்டு. பொன்னையாறும், வெள்ளாறும் இந்த ஜில்லாவின் கிழக்குப் பக்கங்களில் பாய்கின்றன மேற்கில் விழும் நீரெல்லாம் காவேரியாற்றில் சேர்கின்றது. ஜில்லாவின் முக்கிய பட்டணம் **சேலம்.** அது செழிப்பான பள்ளத்தாக்கில் சேர்வாராய மலைக்கு அருகில் உள்ளது. பெரிய இருப்புப்பாதையில் அது ஒரு ஸ்டேஷன். சேர்வராய மலையில் **ஏற்காடு** என்பது குளிர்ச்சியான இடம்.

4. காவேரியைத் தாண்டினபிறகு **கோயம்புத்தூர் ஜில்லாவிற்குள்** பிரவேசிக்கிறோம். இந்த ஜில்லாவின் வடமேற்குப் பாகத்திலும், வடக்கிலும், தெற்கிலும் மலைகள் அடர்ந்திருக்கின்றன. உன்னதமான நீலகிரி வடமேற்கில் உள்ளது; ஆனை மலைகள் தெற்கே இருக்கின்றன. இந்த இரண்டு மலைகளுக்கும் இடையில் இருப்பது பாலைக்காட்டுத் திறப்பு. இந்த ஜில்லாவின் மற்றப்பாகம் முழுவதிலும் சரிவான ஒரு நிலம் உள்ளது; அந்தப் பாகத்தில் காவேரி நதியும் அதன் உபநதிகளும் பாய்கின்றன.

இருப்புப்பாதையில் காவேரியைக் கடந்து போனவுடனே **ஈரோடு ஜங்ஷன்** வருகிறது. அந்த ஜங்ஷனிலிருந்து சென்றால் **திருப்பூர்** ஸ்டேஷன் வருகிறது. திருப்பூர் பஞ்சு வியாபாரம் பெருத்த இடம். அங்கிருந்து புறப்பட்டுப் **போத்தனூர்** ஜங்ஷன் சேருகிறோம். போத்தனூர் ஜங்ஷனிலிருந்து கிளைப்பாதையொன்று வடக்கே நீலகிரியின் அடிவாரத்துக்குப் போகிறது. கோயம்புத்தூர் ஜில்லாவுக்கு முக்கிய பட்டணம் **கோயம்புத்தூரே.** இது பெரிய இருப்புப்பாதையிலே இருக்கிறது. குன்றுகளின் அடிவாரத்தில ஓடும் காவேரியின் உபநதி யொன்றன் கரையில் அமைந்திருக்கிறது. கோயம்புத்தூரைச்சுற்றியுள்ள நிலங்களில்பருத்தி விசேஷமாகப் பயிராகின்றது. பஞ்சுப் பொதிகளைக் கட்டும் யந்திரங்களும் நெசவு ஆலைகளும் கோயம்புத்தூரில் உண்டு. அடுத்த மலைகளில் விளையும் காபிக்கொட்டையைப் பதனிடுவதற்குச் சில தொழிற்சாலைகளும் உண்டு. கோயம்புத்தூர் நகரத்துக்கு அருகே மலையடிவாரத்தில் விவசாய கலாசாலையின் உப்பரிகைகளும், காட்டிலாகா கலாசாலையின் மண்டபங்களும் காணப்படும்.

5. **திருச்சிராப்பள்ளி ஜில்லா.** இந்த ஜில்லாவைக் காவேரியாறு இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கின்றது. ஜில்லாவில் பச்சைமலை என்னும் மலைத்தொடர் ஒன்று வடமேற்கு மூலையில் இருக்கின்றது. மற்றப் பாகமெல்லாம் மேடாக இராமல் பெரும்பாலும் சமமாகவே உள்ளது. இந்த ராஜதானியிலுள்ள பெரிய பட்டணங்களுள் **திருச்சிராப்பள்ளி** மூன்றுவது. அதுவே ஜில்லாவுக்குத் தலைநகரம். அது காவேரியாற்றின் தென் கரையில் உள்ள மிகவும் புராதன பட்டணம். ராபர்ட் கிளைவ்துரை காலத்தில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் யுத்தங்கள் நடந்த போது இந்த நகரம் பிரசித்தமாக இருந்தது. அது ஒரு பெரிய ரெயில்வேஜங்ஷன்; தென்னிந்தியா ரெயில்வேயின் மூலஸ்தானம். ஊர் நடுவில் சற்பாறையொன்று ஏறக்குறைய 300 அடி உயரம் வரை வளர்ந்திருக்கிறது. அதன் உச்சியில் ஒரு கோவில் உண்டு. பாறையின்மீது மரஞ்செடிகள் இல்லை. பாறையின்மேல் ஏறிப்பார்த்தால் சுற்றியுள்ள பிரதேசங்களின் காட்சி மிகவும் விநோதமாக இருக்கும். அநேகமைல் தூரமளவும் நெல் வயல்கள் நிரம்பியிருக்கின்றன. இந்த வயல்களுக்கெல்லாம் காவேரியிலிருந்து கால்வாய்கள் பாய்கின்றன.

காவேரியாற்றிற்கும்கொள்ளிடத்துக்கும்மத்தியில் திவ்விய க்ஷேத்திரமாகிய ஸ்ரீரங்கம் என்னும் தீவு இருக்கின்றது. அந்த க்ஷேத்திரத்தில் பிரசித்திபெற்ற கோவில்கள் பல இருக்கின்றன. அந்தக் கோவில்களில் ஒன்றாகிய ஸ்ரீரங்கநாதருடைய ஆலயம் தென்னிந்தியாவிலுள்ள கோவில்களுள் பெரியது. திருச்சிராப்பள்ளியிலுள்ள மலையின் மேல் ஏறிக் கீழேபார்த்தால் ஊரில் ஜனங்கள் திரள் திரளாக நடந்து செல்லும் வீதிகளும் கலாசாலைகளும் தெரியும். மேற்கே சிறிது தூரத்தில் மலைக் குன்றுகள் இருக்கின்றன. அந்தக் குன்றுகளி

விருந்து காவேரி நதி ஓடி வருகிறது. கிழக்கே பார்த்தால் 30 மைல் தூரத்துக்கப்பால் தஞ்சாவூரிலுள்ள பெரிய கோவில் தெரியும். ஈரோடுக்குப் போகும் இருப்புப்பாதையில் கருவூர் என்னும் பட்டணம் இருக்கிறது. அமராவதியாறு காவேரியோடு கலக்கு மிடத்திற்குச் சமீபத்தில் அது இருக்கின்றது அது புராதனமான க்ஷேத்திரம்.

## 11. தென்ஜில்லாக்கள்: தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி.

இந்த ஜில்லாக்கள் கடற்கரைக்குச் சமீபமாக இருக்கின்றன. கடற்கரைப் பிரதேசமானது உள் நாட்டில் பாக் ஜலசந்தியிலிருந்தும் மன்னார் குடாவிலிருந்தும் கொள்ளிடத்திலிருந்தும் கன்னியாகுமரிவரையில் வியாபித்திருக்கிறது.

1. தஞ்சாவூர் ஜில்லாவென்பது காவேரியாற்றின் டெல்டா நிலம். ஆகையால் அது மிகவும் தட்டையாக இருக்கிறது. அந்த ஆற்றின் ஜலமும், அதன் உபநதிகளின் ஜலமும், கால்வாய்களின் ஜலமும் பாய்வதால் ஜில்லா மிகவும் செழிப்பாக இருக்கிறது. ஜில்லாவில் நெல் வயல்கள் அதிகம். ஆகையால் இதனை, "தென்னிந்தியாவின் தோட்டம்" என்று சொல்லுவார்கள். இவ்வளவு செழிப்பாக இருப்பதால், இங்கே பல பட்டணங்களும், ஆயிரக்கணக்கான கிராமங்களும் உண்டாகியி ருக்கின்றன.

நமது ராஜதானியில் குடிஜனம் பெருத்தது தஞ்சாவூர் ஜில்லா. **தஞ்சாவூர், கும்பகோணம், மன்னார்குடி, மயூரம்** என்னும் நான்கும் இந்த ஜில்லாவிலுள்ள உள்நாட்டுப் பெரிய பட்டணங்கள். இவை புராதனமானவை. இவைகளில் அழகான பெரிய கோவில்கள் உண்டு. இந்தக் கோவில்கள் தென்னிந்தியாவில் மிகவும் பிரசித்தி பெற்றவை.

ஜில்லாவின் பிரதான நகரம் **தஞ்சாவூர்.** தஞ்சாவூரில் அழகான கோவில்களும், பழைய கோட்டையும், அரண்மனையும் இருக்கின்றன. **கும்பகோணம்** காவேரியாற்றின் கரையில் இருக்கின்றது. இது மிகவும் புராதனமான நகரம். இது படிப்பு விஷயத்தில் மிகவும் பெயர்பெற்ற இடம். பிரசித்தமான பெரியோர்களில் அநேகர் இங்கே படித்துத் தேர்ந்தவர்கள். காவேரிக்கரையிலுள்ள **மாயூரம்** என்னும்பட்டணமும்பெரிய க்ஷேத்திரம். **மன்னார்குடியும்** அப்படிப்பட்டதே. இந்தப்பட்டணங்களில்பித்தளையிலும், தாமிரத்திலும் வேலைசெய்யும் கன்னார்களும், வெள்ளிவேலை செய்யும் தட்டார்களும் விசேஷமாக உண்டு; பருத்தி நூல் நெய்பவர்களும் பட்டு நூற்காரர்களும் அநேகர் இருக்கிறார்கள். இந்த ஜில்லாவில விளையும் நெல் முதலிய விளைபொருள்கள இந்தப் பட்டணங்களில் விசேஷமாக விற்கப்படுகின்றன. **நாகபட்டணம்** வியாபாரம் பெருத்த துறைமுக நகரம். உள்நாட்டுச் செழிப்பு நிலங்களில் விளையும் அரிசி இந்தத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியாகின்றது. இலங்கைத்தீவுக்கு இந்த அரிசி அதிகமாகப் போகிறது. தென்னிந்தியா ரெயில்வேயின் தொழிற்சாலை நாக பட்டணத்தில இருக்கிறது.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி என்னும் மூன்று ஜில்லாக்களும் த்வீபகற்பத்தின் தென் முனையில் இருக்கின்றன. இது தேசபடத்திலுல் தெரியும். வைகையாறு மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த பழனிமலையில் உற்பத்தியாகி, பாக்ஜலசந்தியிற் போய் விழுகின்றது. அது வந்து விழும் இடம் ராம்பன் தீவுக்கு நேர் எதிரேயுள்ளது. தாமிரபர்ணியாறு மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, திருநெல்வேலியில் பாய்ந்து மன்னார் குடாக்கடலில் விழுகிறது.

2. **மதுரை ஜில்லா** ஜில்லாவின் பிரதான பட்டணம் **மதுரை.** அது வைகையாற்றங்கரையில் உள்ளது; பாண்டிய அரசர்கள் காலத்தில் ராஜதானியாக இருந்தது. அந்தப் பட்டணத்திலுள்ள பெரிய சிவாலயத்தின பெரிய கோபுரங்கள் வெகுதூரம் வரையில் தெரியும். மதுரைக்குப் போகிறவர்களெல்லாரும் அந்தச் சிவாலயத்து ஆயிரக்கால் மண்டபத்தையும் ஊரிலுள்ள திருமலை நாயகரது அரண்மனையையும் பார்ப்பார்கள். மதுரை வரவர விருத்தியாகிக்கொண்டு வருகிறது. அது நல்ல வியாபார ஸ்தலம். இந்த ராஜதானியிலுள்ள பெரிய பட்டணங்களுள் அது இரண்டாவது. அந்த நகரத்தில் ஒன்றரை லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்களிற் பெரும்பாலார் துணி நெய்வதிலும் சாயம்தோய்ப்பதிலும் ஜீவனஞ் செய்பவர்கள். பருத்திநூலினாலும் பட்டு நூலினாலும் பலவகைத் துணிகள் நெய்கிறார்கள். செப்புப் பாத்திரங்களும், பித்தளைப் பாத்திரங்களும் இங்கே விசேஷமாகச் செய்யப்படுகின்றன. நீராவி யந்திரத்தினால் வேலைசெய்யும் பெரிய பஞ்சாலைகளும் இருக்கின்றன. சுற்றுப் பக்கங்களில் விளைகிற பருத்தியை இந்த ஆலைகளில் நூல்களாக நூற்கிறார்கள்; துணிகளாகவும் நெய்வதுண்டு. இந்நகரத்தில் பெரிய ரெயில்வேஜங்ஷன் ஒன்று இருக்கிறது.

பழனிமலைக்கு அருகில் **திண்டுக்கல்** என்றொரு பட்டணம் உள்ளது. அதுவும் விய

பாரம் பெருத்த ஊர். அந்த ஊரில் முக்கியமான வியாபாரம் புகையிலைச் சுருட்டு. **பழனி** சிறந்த சுப்பிரமணிய ஸ்தலம். பழனிமலையின் மேல் ஏறினால் **கோடைக்கானல்** என்றொரு நகரத்தைக் காணலாம். அது சமுத்திரமட்டத்திற்கு மேல் 7,000 அடி உயரத்தில் உள்ளது.

3. **இராமநாதபுரம் ஜில்லா**. இது கிழக்குக் கரைச் சமவெளியில் உள்ளது. இந்த ஜில்லாவின் நிலம் கடற்பக்கத்தில் வாட்டமாக இருக்கிறது. இது செழிப்பான பூமியல்ல; மரஞ்செடிகள் அபூர்வம்; கடலின்பக்கமாக உள்ள மணற்பாங்கான பிரதேசத்தில் பனைமரம் வளர்கிறது; வைகையாற்றங்கரையில் தென்னந் தோப்புகள் உண்டு. இந்த ஆற்றுக்குக் கொஞ்சதூரத்தில **இராமநாதபுரம்** இருக்கின்றது. இதில் இராமநாதபுரம் ராஜாவின் அரண்மனை உண்டு. இந்த ஜில்லாவில் பெரிய பட்டணம் **ஸ்ரீவில்லிபுத்தூர்**. ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரிய விஷ்ணுவாலயம் ஒன்று இருக்கின்றது. **பாம்பன்** தீவு இந்த ஜில்லாவைச் சேர்ந்தது. இந்தத் தீவின் கடலோரத்தில் **இராமேசுவரம்** இருக்கிறது. இது இந்தியாவிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களுள் முக்கியமானது. இந்தியாவிலுள்ள ஜனங்களெல்லாரும் எத்தனையோ காலமாக இந்த க்ஷேத்திரத்துக்கு யாத்திரைபோய் வருகிறார்கள். பாம்பன் தீவுக்கும் நமது கரைக்கும் இருப்புப் பாதை போட்டிருக்கிறார்கள். மதுரையிலிருந்து போகும் புகைவண்டி இந்த இருப்புப்பாதையின் வழியாக ஓடுகிறது. அந்த வண்டி **தனுஷ்கோடி வரையில்** போய் நின்றுவிடும். தனுஷ்கோடி என்பது பெரிய தோணித்துறை. அங்கிருந்து நீராவிக்கப்பல்கள் ஜனங்களையும் சரக்குகளையும் ஏற்றிக்கொண்டு இரண்டுமணி நேரத்தில் இலங்கைக்குப் போகின்றன. அந்தக் கப்பல்களின் அடிப்பக்கம் தட்டையாக இருக்கும்.

4. **திருநெல்வேலி ஜில்லா**. மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து கடற்பக்கம் வாட்டமாக இருக்கிறது. **திருநெல்வேலியும் பாளையங்கோட்டையும்** ஒன்றுக்கொன்று சமீபமாகவுள்ள பட்டணங்கள். தாமிரபர்ணி நதியின் ஒரு கரையில் திருநெல்வேலியும் மற்றொரு கரையில் பாளையங்கோட்டையும் இருக்கின்றன. ஜில்லாவில் ஜனத்தொகை அதிகம். ஆதலால், இருபது பட்டணங்கள் வரையில் ஏற்பட்டிருக்கின்றன.

ஜில்லாவிலுள்ள பட்டணங்களுள் முக்கியமானது **தூத்துக்குடி**. அது ஒரு மணற்காட்டில் இருக்கின்றது. ஆனாலும், ஜனக்கூட்டமும் வியாபாரமும் அங்கே அதிகம். இந்த ராஜதானியில் சென்னபட்டணத்திற்கு அடுத்தபடி முக்கியமான துறைமுகம் அதுவே. தூத்துக்குடியிலிருந்து இலங்கைத்தீவுக்கு வியாபாரம் விசேஷமாக நடக்கின்றது. இங்கிருந்து போகும் சரக்குகளெல்லாம் இலங்கைத்தீவிலுள்ள **கொழும்பு** என்னும் துறைமுகநகரத்தில் இறக்குமதியாகின்றன; இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வரும் சரக்குகளும் அந்தத் துறையிலிருந்தே ஏற்றுமதியாகின்றன. **தூத்துக்குடித்** துறைமுகததிற்கு ஒரு தீவானது அணைசுவர்போல ஆதரவாக இருக்கின்றது. ஆனால், அந்தத் துறையில் ஆழம் அதிகமாக இல்லை. ஆதலால், பெரிய கப்பல்கள் அங்கே வந்து தங்க முடியாது. கப்பல்கள் கரைக்கு 5 மைல் தூரத்திலேயே நிற்கவேண்டும்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இந்த மூன்று ஜில்லாக்களிலும் கறுப்பு மண்தரை உண்டு. அந்த நிலங்களில் பயிராகும் பருத்தியையெல்லாம் தூத்துக்குடியில் கொட்டை நீக்கிச் சுத்தப்படுத்திப் பொதிகளாகக் கட்டுகிறார்கள். அவ்வாறு சுத்தப்படுத்துவதற்கும் பொதிகள் கட்டுவதற்கும் தூத்துக்குடியில் தொழிற் சாலைகள் இருக்கின்றன. இந்தப் பருத்தியை நூலாக நூற்பதற்கும் துணிகளாக நெய்வதற்கும் பெரிய ஆலைகள் அங்கே உண்டு. பஞ்சுப் பொதிகளும் அரிசி மூட்டைகளும் விசேஷமாக இலங்கைக்கு ஏற்றுமதியாகின்றன. தனுஷ்கோடியிலிருந்து இலங்கைக்குப் போவதற்கு இருப்புப்பாதை ஏற்பட்டபிறகு தூத்துக்குடியிலிருந்து கப்பலிலேறி ஜனங்கள் இலங்கைக்குப் போவதில்லை. புதியபாதை மிகவும் சமீபமானது.

## 12. விடப்பட்ட ஜில்லாக்கள்.

இனி நாம் ‘விடப்பட்ட’ ஜில்லாக்களுக்குப் போவோம். **அனந்தபுரம், பல்லாரி, கர்நூல், கடப்பை** என்னும் நான்கு ஜில்லாக்களும் சேர்ந்து ‘விடப்பட்ட’ ஜில்லாக்கள் என்று பெயர்பெறும். தேசபடத்தைப் பார்த்தால், இந்த ஜில்லாக்களுக்குக் கிழக்கே கிழக்குத்தொடர்ச்சி மலை இருப்பது தெரியும்; வடக்கே துங்கபத்திராவும் கிருஷ்ணாநதியும் நீளமாக ஓடுகின்றன. அந்த நதிகளினால் பம்பாய் ராஜதானியிலிருந்தும் ஹைதராபாத் சம்ஸ்தானத்திலிருந்தும் நமது மாகாணம் பிரிக்கப்படுகின்றது; தென்மேற்குப் பிரதேசத்தில் மைசூர் சம்ஸ்தானம் இருக்கிறது. இந்த ஜில்லாக்கள் மலையடர்ந்த தக்காணத்துப் பீடபூமியின் ஒரு பகுதியாகும். கிழக்குக்கரைச் சமவெளியிலிருந்து இந்த ஜில்லாக்களுக்குப் போகவேண்டுமானால், மலைச் சரிவுகளின் வழியாகக் கிழக்குத் தொடர்ச்சி மலையின்மீது ஏறி இறங்கவேண்டும்.

'விடப்பட்ட' ஜில்லாக்களின் நிலம் வடபக்கத்தில் வாட்டமாக இருக்கிறது. இது தேச படத்தைப் பார்த்தால் தெரியும். இந்த ஜில்லாக்களில் ஓடும் சிற்ருறுகள் துங்கபத்திராவிலும், கிருஷ்ணுவிலும் வடபெண்ணையிலும் போய்க் கலக்கின்றன வடபெண்ணையாறு முதலில் வடக்குமுகமாக ஓடி, பிறகு கிழக்குத் தொடர்ச்சிமலையை நோக்கிக் கிழக்குமுகமாகத் திரும்பி நெல்லூர் ஜில்லாவில் பிரவேசிக்கிறது.

சென்னை மாகாணத்தில் இதுவரையில் நாம் போய்ப்பார்த்துவந்த பிரதேசங்களைப்போல் இந்த ஜில்லாக்கள் இல்லை. இந்தப் பிரதேசம் நீலகிரியைப்போல மலைநாடுமன்று; கடற்கரை நிலத்தைப்போல் சமதரையுமன்று. எங்கே பார்த்தாலும் சிறு குன்றுகள் குப்பல் குப்பலாக உள்ளன. அந்தக் குன்றுகளின் இடையில் விசாலமான பள்ளத்தாக்குகள் உண்டு. இங்கே பிரயாணஞ் செய்கையில் இரண்டு விஷயங்கள் நமக்குத் தெரிகின்றன. இங்கே கற்பாறைகள் அதிகம். நீர் வளமில்லாமல் நிலம் வறண்டிருக்கிறது. எந்தப் பக்கம் போனுலும் பாறைகளும் கற்களும் காணப்படுகின்றன. அநேகம் கிராமங்களில் வீடுகளும் கிராமங்களைச் சுற்றியுள்ள சுவர்களும் கருங்கல்லினுலேயே கட்டப்பட்டிருக்கின்றன. தரையைத் தோண்டினுல் பருக்கைக் கற்களும் பாறைகளுமே அகப்படும். இங்கேயுள்ள குன்றுகளெல்லாம் கெட்டியான கற்பாறைகள்; அவைகளின்மேல் மரஞ் செடிகள் இல்லை; பெரிய கற்குண்டுகள் அநேகம் இருக்கும். அந்தப் பெரிய குண்டுகளை அரக்கர்கள் கொண்டுபோய் அங்கே குவித்திருக்கவேண்டுமென்று தோன்றும். அது மனிதராலாகும் காரியமன்று. அப்படிப்பட்ட குன்றுகளுக்குத் துர்க்கங்கள் என்று பெயர். அநேகம் குன்றுகளின்மேல் கோட்டைகள் இருக்கின்றன. முற்காலத்தில் இருந்த சிற்றரசர்கள் விரோதிகளின் கொடுமைக்குப் பயந்து அந்த மலைகளில் கோட்டைகளைக் கட்டினுர்கள்.

குன்றுகள் அதிகமாக இருப்பதல்லாமல், இந்தப் பிரதேசம் தண்ணீர் இல்லாமல் அதிக வறட்சியாகவும் இருக்கிறது. நமது ராஜதானியிலுள்ள மற்ற இடங்களைக்காட்டிலும் இந்தப் பிரதேசத்தில் மழை குறைவு. ஆனுலும், குளிர்காலத்தில் இரவில் பனி மிகுதியாகப் பெய்வதுண்டு. ஏரிகள் இல்லை; கால்வாய்கள் மிகவும் அருமை. தேச படத்திற் காண்கிற ஆறுகளில் அநேகம் ஒவ்வொரு வருஷத்திலும் அநேகமாத காலம் நீர் வற்றியிருக்கும். ஜலம் வறண்ட பாறை நிலத்திற் கிணறுகள் வெட்டுவது மிகவும் கஷ்டம். வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவது அசாத்தியமான காரியம். கோடையில் சாலைகளிலும் தெருக்களிலும் தூசியும் மண் புழுதியும் கனமாகப் படிந்திருக்கும். தரையும் செழிப்பானதன்று; நீர் நிற்கத்தக்க பள்ளங்களும் நிலத்தில் இல்லை. பலவிடங்களில் தரையானது கப்பியும் கல்லும் நிறைந்து சிவப்பாக இருக்கும், செழிப்பாயுள்ள டெல்டாவிலும் சம நிலங்களிலும் விளையும் பயிர்கள் இங்கே விளையமாட்டா; நெற்பயிர் அருமையாக இருக்கும். சோளம், தினை, கம்பு, கேழ்வரகு ஆகிய இந்தத் தானியங்களே இந்தப் பிரதேசத்தில் முக்கியமான விளைபொருள்கள். களிமண்தரையில் பருத்தியைப் பயிரிடுகிருர்கள். பருத்திக்காடு எல்லா இடங்களிலும் காணப்படும்.

சென்னை ராஜதானியில் பருத்தி விசேஷமாக விளைவது இந்த ஜில்லாக்களிலேயே. பருத்தியை இந்த ஜில்லாக்களிலுள்ள பட்டணங்களுக்குக் கொண்டுபோய்ப் பொதிகளாகக் கட்டுகிருர்கள்; இதற்கு ஏற்ற தொழிற்சாலைகள் அந்தப் பட்டணங்களில் இருக்கின்றன. நூல் நூற்பதற்கு ஏற்ற ஆலைகளும், துணிகள் நெய்வதற்குத் தகுந்த ஆலைகளும் நகரங்களில் உண்டு.

வயல்களில் பருத்தி பொறுக்குங்காலத்தில் ரெயில்வே ஸ்டேஷன்களிலெல்லாம் பருத்திமூட்டைகள் மிகுதியாக அடுக்கப்பட்டிருக்கும். பட்டணங்களிலுள்ள தொழிற்சாலைகளுக்குக் கொண்டு போவதற்காக அந்த மூட்டைகளை ரெயில்வே ஸ்டேஷன்களில் கொண்டுவந்து சேர்ப்பார்கள். இந்த ஜில்லாக்களில் மரங்கள் அருமை. ஆற்றங்கரைகளில் மாத்திரம் சில மரங்கள் இருக்கும். குன்றுகளின்மீதும் மரங்கள் இல்லை. கோடைக்காலத்தில் பசும்புல்லையும் தழையையும் காண்பதரிது. இந்த ராஜதானியின் மற்றப் பாகங்களைப்போல இந்த ஜில்லாக்களின் பூமி செழிப்புள்ளதன்று. பூமி விஸ்தாரமாக இருந்தாலும், அதில் விளையக்கூடிய பயிர் சொற்பம். ஆகையால், இந்த ஜில்லாக்களில் கிராமங்களும் குறைவு. சில சமயங்களில் மழை மிகவும் கொஞ்சமாகப் பெய்யும். எந்தப் பயிருக்கும் அது போதாது. அதனுல், அந்த நாட்டில் பஞ்சம் நேரிடும்.

1. **அனந்தபுரம் ஜில்லா.** தேச படத்தைப் பார்த்தால், இந்த ஜில்லாக்களின் மத்தியில் குத்தக்கல் ஜங்ஷன் இருப்பது தெரியும். அது முக்கியமான ரெயில்வே ஜங்ஷன். இவ்விடத்திலிருந்து இருப்புப்பாதைகள் பற்பல திசைகளிலும் பிரிந்துபோகின்றன. ஆகையால், அந்த ஜங்ஷனிலிருந்தே நாமும் புறப்படுவோம். குந்தக்கல் என்பது அனந்தபுரம் ஜில்லாவைச் சேர்ந்த ஊ

அந்த ஜங்ஷனுக்குச் சுற்றுப்பக்கத்து வயல்களில் பயிராகும் பருத்தி முழுவதும் அங்கிருந்து வெளியூர்களுக்கு ரெயில்மார்க்கமாகப் போகின்றது. முதல் முதலில் தெற்கே பங்களூருக்கும் மைசூர் சம்ஸ்தானத்திற்கும் போகும் இருப்புப் பாதையில் பிரயாணம்செய்வோம். அந்த வழியில் பெண்ணையாற்றைக் கடந்து போகிறோம், **அனந்தபுரம்**, **தர்மாவரம்** என்னும் ஊர்களைக் கடந்து **இந்துபுரம்** போகிறோம். இந்த ஜில்லாவுக்குத் தலைநகரம் அனந்தபுரம். தர்மாவரம் என்பது ஒரு ரெயில்வே ஜங்ஷன். அங்கிருந்து பிரிகிற கிளைப்பாதை வழியாகப் போனால் தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள விழுப்புரம் சேரலாம். இந்துபுரம் என்னும் ஊர் தெற்கே மைசூர் சம்ஸ்தானத்தின் எல்லைக்கு அருகில் இருக்கிறது. அந்த ஊருக்கும் பெண்ணையாறு உற்பத்தியாகும் இடத்திற்கும் அதிக தூரமில்லை. இந்துபுரம் அனந்தபுரம்ஜில்லாவில் பெரிய பட்டணம். இங்கே பஞ்சு வியாபாரம் அதிகம். குந்தக்கல்லிலிருந்து சென்னபட்டணத்திற்குப் போகும் இருப்புப்பாதையில் பிரயாணஞ்செய்தால், **குத்தி** என்னும் ஊரைத் தாண்டிப் போகலாம். அந்த ஊரில் அழகிய மலைக்கோட்டை ஒன்று இருக்கிறது.

2. **பல்லாரி ஜில்லா**. குந்தக்கல்லிலிருந்து புறப்பட்டு மேற்கே போகும் இருப்புப்பாதையிற் சென்றால் பல்லாரி ஜில்லாவுக்குப் போவோம். போகும் வழியில் **ஹகரி** என்றொரு நதி இருக்கிறது. அதில் ஆழம் அதிகமாக இராது. அது துங்கபத்திரா நதிக்கு வடக்கே ஓடுகின்றது. அந்த நதியைக் கடந்து பல்லாரி என்னும் பட்டணத்துக்குப் போகிறோம். ஜில்லாவுக்குத் தலைநகரம் பல்லாரி. இவ்விடத்தில் அநேகம் சோல்ஜர்களும் சிபாய்களும் இருக்கிறார்கள். இது ஒரு ராணுவ ஸ்தலம். இந்த ஊரையடுத்து இரண்டு கற்குன்றுகள் வளர்ந்து நிற்கின்றன. இவைகளுள் ஒன்றன்மேல் ஒரு கோட்டையும் அதைச் சுற்றிக் கொத்தளங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. பல்லாரியைச் சுற்றிலுமுள்ள பிரதேசமெல்லாம் விஸ்தாரமான பருத்திக்காடு. அங்கேயுள்ள பருத்தியைப் பல்லாரிக்குக் கொண்டுவந்து கொட்டையெடுத்து யந்திரங்களினால் அமுக்கிப் பொதிகளாகக் கட்டி வெளியூர்களுக்கு அனுப்புவார்கள். அல்லாமல், அந்த ஊரிலேயேயுள்ள பஞ்சாலையில் நூல் நூற்றுத் துணிகள் நெய்வதுமுண்டு. இந்த ராஜதானியிலுள்ள முக்கியமான பஞ்சு வியாபார ஸ்தலங்களில் பல்லாரி ஒன்று.

ஹோசப்பேட்டை என்பது மிகவும் பெரிய பட்டணமன்று. அவ்விடத்திலிருந்து தரை வழியாகத் துங்கபத்திரை யாற்றங்கரைக்குப் போகலாம். துங்கபத்திரை யாற்றங்கரையில் பழைய விஜயநகர சம்ஸ்தானத்துத் தலைநகரம் இருந்தது. அது இப்பொழுது பாழடைந்திருக்கின்றது. பாழ் அடைந்த கட்டிடங்கள் முதலியவைகளைச் சுற்றிப் பார்ப்பதற்கு இரண்டொருநாள் போதாது; எத்தனையோநாள் வேண்டும். விசித்திரமான சிற்பவேலைகள் பொருந்திய பெரிய கோவில்களும், பெரிய சிலா விக்கிரகங்களும், உன்னதமான கோட்டை மதில்களும், கொலுமண்டபங்களும், யானைக்கூடங்களும் அங்கே இருக்கின்றன. மகம்மதியர்கள் இந்த நகரத்தை அழித்ததற்குமுன், இந்த இடமானது ஒரு காலத்தில் இந்தியாவிலுள்ள நகரங்களுள் சிறந்து விளங்கிற்று என்று மேலே சொல்லிய அடையாளங்களினால் தெரிகிறது.

குந்தக்கல்லுக்கு மறுபடி வந்து ரெயிலிலேறி வடக்கே செல்லுவோம். அது பம்பாய்க்குப் போகும் பெரிய சாலை. துங்கபத்திராவுக்குப் போகும் வழியிலே **ஆதோனி** என்னும் பட்டணம் வருகின்றது. பல்லாரியைப் போலவே அந்த ஊரும்பருத்திக்காட்டின் நடுவில் உள்ளது. அங்கே விளையும் பருத்தியை நூற்று நெய்வதற்கு நீராவி யந்திரசாலைகள் இருக்கின்றன. ஆதோனியில் நெய்யும் ஜமக்காளங்கள் பிரசித்தமானவை. அதனருகில்கருங்கற் குன்றுகள் உள்ளன. அவைகளில் அழகான கோட்டை ஒன்று உண்டு.

3. **கர்நூல் ஜில்லா**. இப்பொழுது குந்தக்கல்லிலிருந்து கிழக்கே போகிற ரெயில்வண்டியில் ஏறுவோம். அது பெஸ்வாடாவுக்குப் போகும் வழி. அந்த வழியில் கர்நூல் ஜில்லாவைச் சேர்ந்த குன்றுகளையும் பள்ளத்தாக்குகளையும் கடக்கவேண்டும். குன்றுகளில் புல் பூண்டுகள் இல்லை. பள்ளத்தாக்குகள் எல்லாம் பருத்தி விளையும் விஸ்தாரமான களிமண் தரை. **கர்நூல்** பட்டணம் துங்கபத்திரையின் கரையில் இருக்கிறது. அந்த ஊருக்குக் கிளை இருப்புப்பாதையொன்று போகிறது. சுற்றுப்பக்கத்தில் விளையும் பஞ்சுமுழுவதும் அந்த ஊரில் விற்பனையாகிறது.

4. **கடப்பை ஜில்லா**. மற்றொருமுறை குந்தக்கல்லிலிருந்து சென்னபட்டணத்துக்குப் போகும் பெரிய இருப்புப்பாதையில் போவோம். அது கடப்பை ஜில்லாவின் வழியாகப் போகின்றது. ஜில்லாவின் பெரும்பாகம் தக்காணத்துப் பீடபூமியைச் சேர்ந்தது; இதன் தென்கிழக்குப் பாகம் மாத்திரம் சமதரை. வட பெண்ணையாறும் அதன் உபநதிகளும் கடப்பைஜில்லா முழுவதிலும் வியாபித்திருக்கின்றன. இது தேச படத்தில் நன்றாகத் தெரியும். கடப்பை நகரம்

இந்த ஜில்லாவின் மத்தியில் வட பெண்ணையாற்றின் கிழக்குக்கரையில் இருக்கின்றது. அந்த ஊரின் வழியாக இருப்புப்பாதை போகிறது. வட பெண்ணையாற்றுப்போக்கில் அங்கிருந்து சிறிது தூரத்திற்கப்பால் மேல்கரையில் ஜம்மல் மடுகு என்னும் ஊர் இருக்கின்றது. அதுவும் பருத்தி பெருத்த ஊர்.

## 13. நீலகிரி ஜில்லா.

கிழக்குத்தொடர்ச்சி மலையும் மேற்குத்தொடர்ச்சி மலையும் கூடும் இடத்தில் பெரிய பீடபூமியொன்று அமைந்திருக்கிறது. அது சமதரையிலிருந்து செங்குத்தாகக் கிளம்பியுள்ளது. இந்தப் பீடபூமியே நீலகிரி என்னும் ஜில்லாவாகும். இது இந்த மாகாணத்திலுள்ள மற்ற ஜில்லாக்களைப்போல் இல்லை. சென்னை மாகாணத்துக்கு இதனை ஒரு முகடு என்று சொல்லலாம். இந்த ஜில்லாவின் பெரும்பாகம் சமுத்திர மட்டத்துக்குமேல் ஒரு மைலுக்கு அதிகமாக உயர்ந்திருக்கிறது. இதில் உன்னதமான சிகரங்கள் பல உண்டு. அவைகளில் பல 8000 அடி உயரம் உள்ளவை; ஒன்றரை மைல் உயரமுள்ள கொடுமுடிகளும் உண்டு. அவைகளின்மேல் நின்று பார்த்தால், கீழே வெகுதூரத்தில் மேகங்கள் தவழ்ந்துகொண்டிருப்பதுபோல் நமக்குத் தெரியும். எங்கே பார்த்தாலும் குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் காணப்படும். ஒரு மைல் சதுரத்திற்கு ஒரு சமதரையையாவது காணமுடியாது.

தோட்டபெட்டா என்பது நீலகிரியிலுள்ள மிகவும் உயரமான சிகரம். அது 8,760 அடி உயரமுள்ளது; அதாவது, சமுத்திரமட்டத்திற்கு மேல் ஒன்றரை மைல் உயரமானது. அந்தச் சிகரத்திலிருந்து பார்த்தால், ஜில்லாவின் பெரும்பாகம் நன்முகத் தெரியும். அது தென் னிந்தியாவில் உள்ள காட்சிகளுள் சிறந்தது. நான்கு பக்கங்களிலும் மலைகள் தோன்றுகின்றன. அந்த மலைகளுக்கிடையில் ஆழமான பள்ளத்தாக்குகள் உண்டு. அவைகளில் சில அகலமாகவும் சில குறுகலாகவும் இருக்கின்றன. உன்னதமான சிகரங்களின்மேல் மரங்களே இருக்கமாட்டா. அவை பாறையாக இருக்கின்றன. ஆனால், அவைகளின் பக்கங்களிலும் பள்ளத்தாக்குகளிலும் புல் அதிகமாக முளைத்திருக்கிறது.

குன்றுகளில் அங்கங்கே பொங்குகள் உண்டு. அந்தப் பொங்குகளில் காட்டுமரங்கள் வளர்ந்திருக்கின்றன. அவைகளுக்குச் சோலைகள் என்று பெயர். உயரமில்லாத குன்றுகளின்மேல் காடுகள் வளர்ந்து அவைகளை மூடிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பள்ளத்தாக்கிலும் ஒவ்வொரு ஓடை உண்டு. குன்றுகளில் உள்ள ஊற்றுநீர் முழுவதும் ஓடைகளில் போகின்றது. ஓடைகள் சேர்ந்து நதியாகும். இந்த ஆறுகள் காவேரியின் உபநதிகள் இரண்டிற் போய் விழுகின்றன. இந்த இரண்டு உபநதிகளையும் தேசபடத்திற் பார்க்கலாம். அவைகளில் வடக்கே ஓடுவது மோயாறு; தெற்கே ஓடுவது பவானி. இந்த உபநதிகள் இரண்டும் நீலகிரி ஜில்லாவை வட்டமாகச்சூழ்ந்து ஓடிப் பிறகு சேர்ந்துகொள்கின்றன. அதனால், இந்த ஜில்லாவுக்கு இந்த உபநதிகள் வடிகால் ஆகும்.

தொட்ட பெட்டாவின் மேலே ஏறி வடக்கு முகமாக நோக்கினால், மோயாற்றுப் பாதை தெரியும். அது குறுகலாகவும் ஆழமாகவும் அகழியைப்போல் இருக்கிறது. இந்தப் பள்ளத்தின் வழியாகக் கீழேபார்த்தால், மைசூர் பீடபூமி தெரியும். அந்தப் பீடபூமியில் அங்கங்கே ஏரிகளும் துர்க்கங்களும் நிறைந்திருக்கின்றன. தெற்கே பார்த்தால், கீழே வெகுதூரத்தில், பவானியாற்றுக்கு அப்பால், கோயம்புத்தூர் சமவெளி தெரிகிறது. அதற்கு அப்பால் ஆனைமலைகள் தெரிகின்றன. மேற்கே பார்த்தால், காடுகள் அடர்ந்த குன்றுகள் நிற்கின்றன. அவைகளிலிருந்து இறங்கி மலையாளத்திற்குப் போகலாம். அந்தக் குன்றுகள் குறுக்கே நிற்பதால், அரபிக்கடல் நமக்குத் தெரியவில்லை.

இருப்புப்பாதை போடுவதற்கு முன்னால், சமநிலத்திலிருந்து நீலகிரிக்குப் போவது மிகவும் கஷ்டம். தெற்கேயுள்ள கோயம்புத்தூர் சமதரையிலிருந்து செங்குத்தான மலைக்கணவாய்ப் பாதைகளின் வழியாக மேலே ஏறவேண்டும்; அல்லது, வடக்கே மைசூர் பீடபூமியிலிருந்து போகவேண்டும்; இல்லாவிட்டால், மேற்கே மலையாள தேசத்திலிருந்து ஏறவேண்டும். இப்போது நீலகிரிக்கு வெகு சுலபமாகப் போகலாம். பாலைக்காட்டுத் திறப்புக்கு அருகில் போத்தனூர் ரெயில்வே ஜங்ஷன் இருக்கிறதல்லவா? அங்கிருந்து கிளைப் பாதையொன்று புறப்பட்டுக் கோயம்புத்தூர் சமதரையின் வழியாக மேட்டுப்பாளையம் போகின்றது. மேட்டுப்பாளையம் என்பது மலையடிவாரத்தில் உள்ள ஊர். அங்கிருந்து மலையின்மேல் இருப்புப்பாதையொன்று புறப்படுகின்றது. அது குறுகலாக இருக்கும். அது பவானியாற்றைக் கடந்து ஒடுக்கமான மலைச்சந்துகளில் ஏறுகின்றது; கூனூர், வெல்லிங்டன் என்னும் ஊர்களைக் கடந்து உதகமண்டலம்

என்னும் பட்டணத்திற்குப் போய்ச் சேருகின்றது. அந்தப் பட்டணம் 7,000 அடி உயரத்தில் இருக்கிறது. அந்த மலைப்பாதையின் நீளம் 30 மைலை; அதில் ஓடும் புகைவண்டித் தொடரில் 3 அல்லது 4 வண்டிகளே சேர்த்திருப்பார்கள். போகும்வழி மிகவும் செங்குத்தானது; அதில் வளைவுகளும் அதிகம். ஆகையால், தூரம் கொஞ்சமாக இருந்தாலும், புகைவண்டி மேலே போய்ச் சேருவதற்கு நான்கு மணி நேரத்திற்கு மேல் பிடிக்கிறது. ஒரு சிறு பையன்கூட அங்கே புகைவண்டிக்குச் சமமாக ஓடுவான். மலைப் பாதை மிகவும் செங்குத்தாக இருப்பதால், அதில் புகைவண்டி சருக்கிவழாமற் போவதற்கு வெகு ஜாக்கிரதையாக ஓட்டவேண்டும். இருப்புப் பாதைகளில் வண்டிகள் ஓடுவதற்கு இரண்டு கம்பிகள் தரையில் போடப்பட்டிருக்குமல்லவா? இந்த மலைப்பாதையிலோ மூன்று கம்பிகள் இருக்கின்றன. ஓரத்துக் கம்பிகள் இரண்டும் மற்ற இருப்புப் பாதைகளைப்போலவே இருக்கும்; நடுவிலுள்ள கம்பிமாத்திரம் பல்பல்லாக வெட்டப்பட்டிருக்கும். ரெயில் எஞ்சின் ஓடும்பொழுது அந்தப் பற்களில் அழுந்தி, வழுக்கிப்போகாமற் கம்பியைப் பலமாகப் பிடித்துக்கொண்டிருக்கும். வண்டியை நிறுத்தும் கருவிகள் பலமாக இருக்கவேண்டும்; சாதாரணமானவை உதவமாட்டா. அநேக இடங்களில் அந்த மலைப்பாதையானது சுரங்கங்களின் வழியாகப் போகிறது; மலைகளின் பக்கங்களிற் பாறைகளைப் பிளந்து குடைந்து இடுக்கு வழிகளை உண்டாக்கி யிருக்கிறார்கள். வழி முழுவதிலும் ரெயில் எஞ்சினைச் செலுத்துவது மிகவும் கஷ்டமாக இருக்கும். செங்குத்தான குன்றுகளின்மேல் வண்டித் தொடரை இழுத்துச் செல்வது அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. இப்படி நாம் இந்த வண்டியில் இருந்து மேலே ஏறுகையில், நாம் தாண்டிவந்த இருப்புப் பாதை நமக்குக் கீழே வெகு ஆழத்தில் நமது கண்ணுக்குத் தெரியும்; மேலே நிமிர்ந்து பார்த்தால் செங்குத்தான கற்பாறைகள் காணப்படும்.

இவ்வாறு போகும்போது ஒரு புதிய பிரதேசத்திற்கு நாம் வருவதுபோல் தோற்றும். புளிய மரங்கள், ஆலமரங்கள், மூங்கிற்கொத்துகள், வாழைமரங்கள், தென்னமரங்கள் முதலிய நாட்டு மரங்களெல்லாம் கீழே சமதரைகளில் உள்ளவை. அவைகளைவிட்டு நாம் மேலே ஏறுகிறோம். இந்த மேட்டிற் காணும் மரங்களெல்லாம், நமக்குப் புதியவைகள்; அப்படியே, செடிகளும் மலர்களும் புதியவைகள். மேலே போகப் போக, காபித்தோட்டங்களையும் தேயிலைத் தோட்டங்களையும் பார்க்கிறோம். மலைச் சரிவுகளில் காட்டை யழித்து அங்கே தோட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். செங்குத்தான மலைச்சாரல்களில் வயல்கள் இருப்பதற்கு இடமில்லை. போகப்போக வாயுமண்டலம் மிகவும் குளிர்ந்திருக்கிறது. முடிவில் உதகமண்டலம் போய்ச் சேருகிறோம்; அங்கே கூழுத்தமான கம்பளிச் சட்டைகள் நமக்கு வேண்டி இருக்கும். இரவில் குளிர் மிகுதி. சமதரையில் காணும் மிருகங்களிற் சில அந்த மலைநாட்டில் ஜீவிக்கமாட்டா. அணில், பல்லி, பாம்பு முதலியன உதகமண்டலத்தில் அருமை.

இந்த உன்னதமான மலைப் பிரதேசத்திற் சிறிதுகாலம் வசித்துப் பார்த்தால், நாட்டில் வசிப்பதற்கும் அதற்கும் உள்ள வித்தியாசம் தெரியும். எங்கே போகவேண்டுமானாலும், மேலேயாவது ஏறுகிறோம்; கீழேயாவது இறங்குகிறோம். சுவர்களோ குன்றுகளின் செங்குத்தான பக்கங்களில் செதுக்கப்பட்டிருக்கின்றன. குன்றுகளும் மலைச் சந்துகளும் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன; பயிரிடுவதற்கான சமதரை அருமையாக இருக்கிறது. நீரோடைகள் வேகமாக ஓடுகின்றன; சமவெளியில் உள்ள ஓடைகளைப் போல் அவை மந்தமாக ஓடுவதில்லை. அநேகம் ஓடைகள் செங்குத்தான கற்பாறைகளிலிருந்து விழுகின்றன. அவை விழும்காட்சி மிகவும் அழகானது. மழைபெய்தால், அந்த ஓடைகளில் ஜலம் நிறைந்து அதிகவேகமாக மலைச்சாரல்களில் பாய்ந்தோடும்.

அவ்விடத்துச் சீதோஷ்ண ஸ்திதியும் வேறுமாதிரியானது. நடுப்பகலிலும் குளிர் இருக்கும்; இரவில் கனப்பு வைத்துக்கொள்ளாவிட்டால் உடம்பில் உஷ்ணம் இராது. சமவெளியில் இரவில் உள்ள குளிர்ச்சி அங்கே பகல்வேளையில் இருக்கும். குளிர்காலத்தில் குளிர் மிகுதி; இரவில் தண்ணீர் உறைந்துபோம்; பனியினால் செடிகள் பட்டுப்போம். பகற்பொழுதில், வெயில் எரித்தாலும், நாம் கம்பளிச் சட்டைகளுடன் இருக்கவேண்டும். வருஷத்தில் பலநாள் அங்கே மழைபெய்யும். முதல் நான்கு மாதங்களில் மழை இராது; மற்ற எட்டுமாத காலமும் மழை பெய்யும். சமநிலங்களில் உள்ள ஓடைகளைப் போல அவ்விடத்து ஓடைகள் ஒருபொழுதும் வறண்டுபோகமாட்டா. ஊற்றுகளிலிருந்தும் மலைகளிலுள்ள சதுப்புகளிலிருந்தும் அவைகளுக்கு ஜலம் எப்பொழுதும் வரும்.

அவ்விடத்துச் செடிவகைகளும் புதுமாதிரியானவை. மாமரம், புளியமரம், ஆலமரம், தென்னமரம், பனைமரம் முதலியன அங்கே இல்லை. காடுகளிலுள்ள மரங்களெல்லாம் நமக்குப் புதி

யன. அந்தப் பீடபூமியின் உன்னதமான பிரதேசங்களில் நீலப்பிசின் மரம் முதலிய ஆஸ்திரேலிய மரங்கள் நிறைந்த தோப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த மரங்களை விறகுக்காகத் துரைத்தனத்தார் பயிரிட்டிருக்கிறார்கள். அவைகளுக்கு வேண்டிய அளவு குளிர்ச்சி அங்கே இருக்கிறது. ஐரோப்பாவிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் தேவதாரு மரங்களைக் கொண்டுவந்து உயரம் மிகுந்த குன்றுகள் சிலவற்றில் பயிரிட்டிருக்கிறார்கள். கீழேயுள்ள குன்றுகளின் சரிவுகளில் காபித் தோட்டங்களும், தேயிலைத் தோட்டங்களும் பல இருக்கின்றன; சிங்கோனு மரத் தோப்புகளும் சில உண்டு; அந்த மரத்துப் பட்டையிலிருந்து குவைனு என்னும் ஜ்வரமருந்து செய்கிறார்கள். அங்கே உணவுக்கு வேண்டிய பயிர்கள் அபூர்வம். மிகவும் தாழ்ந்து வெப்பமுள்ள பள்ளத் தாக்குகளில் சிறிதளவு நெல் பயிராகின்றது. கேழ்வரகு, சாமை, வாற்கோதுமை முதலியனவும் பயிரிடுகிறார்கள்; சிறிது கோதுமையும் விளைகிறது. ஆனாலும், மற்ற ஜில்லாக்களிலிருந்துதான் உணவுப் பொருள்கள் அதிகமாக வர வேண்டும். உருளைக்கிழங்கு, கரோட்கிழங்கு, டர்னிப்கிழங்கு, பட்டாணி முதலியவற்றை ஒவ்வொரு தோட்டத்திலும் பயிரிடுகிறார்கள். இவை உஷ்ணமான பிரதேசங்களில் உண்டாகமாட்டா. எங்கும் புல் செழிப்பாக வளர்கிறது. மலைச் சரிவுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் பல ஆடு மாடுகள் மேய்கின்றன. உயரம்மிகுந்த மலைப் பிரதேசத்தில் தோடர்கள் என்னும் ஒரு ஜாதியார் வசிக்கிறார்கள் அவர்கள் நாகரிகமற்றவர்கள்; ஒருவகையான இடையர்கள்; அவர்கள் குடிசைகளில் வசிக்கிறார்கள். நிலத்தை உழுது பயிரிடுவதற்குக்கூட அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் தங்களுடைய மாடுகளின் பாலைக்குடித்து ஜீவிக்கிறார்கள்.

பட்டணங்கள். வயல்களும் பயிர்களும் அருமையாக இருக்கிற இப்படிப்பட்ட பிரதேசத்தில் கிராமங்கள் அதிகமாக இருக்கமாட்டா. மதுரையிலாவது திருச்சிராப்பள்ளியிலாவது இருக்கும் அவ்வளவு ஜனங்கள்கூட இந்த ஜில்லா முழுவதிலும் இல்லை. மூன்று நான்கு சிறிய பட்டணங்கள்மாத்திரமே இருக்கின்றன. சமதரையிலிருந்து புகைவண்டியில் ஏறினால் மிகவும் செங்குத்தான இடத்தில் உள்ள கூனூருக்கும் வெல்லிங்டனுக்கும் போய்ச் சேருகிறோம். வெல்லிங்டனுக்குச் சமீபத்தில் பெரிய யந்திர சாலையின் புகைக்கூடுகள் தெரிகின்றன. அங்கே இந்தியாவிலுள்ள சேனைகளின் உபயோகத்திற்கு வேண்டிய 'கார்ட்டைட்' என்னும் பீரங்கி மருந்து செய்யப்படுகிறது. அது குளிர்ச்சியான பிரதேசத்திலேதான் செய்யக்கூடியது. செய்வதற்கு ஏற்ற யந்திரங்கள் மின்சாரத்தினால் ஓடுகின்றன. மின்சாரத்தை அங்குள்ள ஒரு மலையாற்றின் நீர் வீழ்ச்சியிலிருந்து உற்பத்தி செய்கிறார்கள். அங்கிருந்து புகைவண்டி பின்னும் உயரமான இடத்துக்கு மேலே செல்லுகிறது. அதில் ஏறினால் ஒரு மணிநேரத்தில் உதகமண்டலம் என்னும் பட்டணம் சேரலாம். அதுவே இந்த ஜில்லாவின் முக்கியபட்டணம். அதில் சிறிதுபாகம் பள்ளத்தாக்காகவும், சிறிதுபாகம் மலைச்சரிவாகவும் இருக்கும். அதுபோலவே கூனூரும் வெல்லிங்டனும் இருக்கின்றன. உதகமண்டலத்திற்கருகில் தொட்டபெட்டா என்னும் மலைச்சிகரம் கிளம்புகிறது; அந்த மலைக்கு அப்பால் கோட்டகிரி இருக்கிறது.

இந்தப் பட்டணங்கள் எல்லாம் சமதரையில் உள்ள பட்டணங்களைப்போல் இல்லை. இவைகளில் ஒன்றும் பழமையானதன்று. இவை மலையில் உள்ள ஊர்கள். சமநிலத்திலுள்ள வெயிலுக்குப் பயந்து கோடையில் ஐரோப்பியர்களும் இந்தியர்களும் தங்கள் குடும்பங்களோடு இந்த ஊர்களுக்கு வருவார்கள். ஆரோக்கியத்தின் பொருட்டும், ஓய்வுநாட்களைக் கழிக்கும்பொருட்டும் அவர்கள் இங்கே வருவதுண்டு. குளிர்காலத்தில் இப்பட்டணங்களில் உள்ள வீடுகளில் அநேகமாக ஒருவரும் இருப்பதில்லை.

சென்னைக் கவர்ன்மெண்டின் முக்கிய அதிகாரிகள் வருஷத்தில் ஆறுமாதகாலம் உதகமண்டலத்தில் வசிக்கிறார்கள். அவர்கள் குடும்பங்களோடு வசிப்பதற்கு வேண்டிய வீடுகளும் உத்தியோக சாலைகளும் அங்கே கட்டப்பட்டிருக்கின்றன. ஹைதராபாத்து நைஸாம், மைசூர் மஹாராஜா முதலான இந்திய அரசர்களுக்கும் சில பெரிய பிரபுக்களுக்கும் அங்கே மாளிகைகள் உண்டு.

உதகமண்டலம். இந்தியாவிலுள்ள மலைநகரங்களில் சிறந்தது; ஓய்வுநாட்களைக் கழிப்பதற்கு எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஜனங்கள் அவ்விடத்திற்குப் போகிறார்கள். அவ்விடத்துக் காற்றானது, குளிர்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கிறது. புல் நிறைந்த குன்றுகள் நான்கு பக்கங்களிலும் வெகுதூரம் வரையில் பரவியிருக்கின்றன. அழகிய மலைகளின் விநோதமான காட்சிகளை அங்கே காணலாம். குன்றுகளின்மீது குதிரைச்சவாரி செய்யலாம்; ஓடைகளில் மீன் பிடிக்கலாம்; காடுகளில் வேட்டையாடலாம்.

வெல்லிங்டன் பட்டணத்தில் ஐரோப்பிய யுத்த வீரர்களும், புண்பட்ட சோல்ஜர்களும் இருப்பதற்குக் கட்டிடங்கள் உண்டு.

இந்த ஜில்லாவின் மேற்குப்பாகமும் தென் மேற்குப்பாகமும் தொட்டபெட்டாவைச் சுற்றியுள்ள பிரதேசத்தைக் காட்டிலும் பள்ளமாக இருக்கின்றன. இங்கே பல காபித் தோட்டங்களும் தேயிலைத் தோட்டங்களும் உண்டு. தோட்டங்களின் முதலாளிகள் பெரும்பாலும் ஐரோப்பியர்களே.

## 14 மேலைச் சமுத்திரதீர வெளி.

சென்னை ராஜதானியில் மேலைச் சமுத்திரதீர வெளிக்கும் மற்றப் பாகங்களுக்கும் அதிக வித்தியாசம் உண்டு. இந்தியாவின் மேற்கோரமாக உயரமான மேற்குத்தொடர்ச்சி மலைகள் தெற்கே கன்னியாகுமரிவரையில் வியாபித்திருக்கின்றன. இவைகள் கடலோரமாக உள்ள தாழ்வான ஒரு பிரதேசத்துக்கு அணைபோல் இருக்கின்றன. இந்தப் பிரதேசத்துக்குத்தான் **மேலைச் சமுத்திரதீர வெளி**யென்று பெயர். தெற்கு வடக்கில் இது மிகவும் நீளமாகவும் கிழக்கு மேற்கில் குறுகலாகவும் இருக்கிறது. இங்கே வசிக்கும் ஜனங்கள் மலையுச்சியில் சூரியன் உதயமாவதையும் அரபிக் கடலில் அஸ்தமிப்பதையும் பார்க்கிறார்கள்.

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து தாழ்வான சிறு குன்றுகள் கடற்கரைவரையில் போயிருக்கின்றன. இந்தச் சிறு குன்றுகளின் மத்தியில் பள்ளத்தாக்குகள் உண்டு. ஒவ்வொரு பள்ளத்தாக்கிலும் ஒவ்வொரு நதி ஓடுகிறது. உற்பத்தி ஸ்தானத்திலிருந்து இந்த நதிகள் மலைச்சரிவைக் கடந்து சமநிலத்துக்கு வரும்வரையில் மிகவும் வேகமாகவும் சமநிலத்தில் மெதுவாகவும் ஓடுகின்றன. சமநிலத்தில் ஓடும்போது படகுகளைச் செலுத்தலாம். கிழக்குத்தீரத்திலிருக்கும் நதிகளுக்கும் இவைகளுக்கும்வித்தியாசம்உண்டு. இவைகளால் டெல்டாக்கள் உண்டாகவில்லை. இவைகள் நேரே கடலில் போய் விழவுமில்லை.

கடற்கரைக்குச்சமீபமாகமேற்குத்தீரத்தில்நீளமான உப்பங்கழிகள் உள்ளன. இவைகள் பார்வைக்கு நீளமான குளங்கள்போல் இருக்கும். இந்த உப்பங் கழிகளுக்கு நல்ல ஜலத்தை மேற்குத்தீரத்திலுள்ள நதிகள் கொண்டுவருகின்றன. கடலோரத்தில் உள்ள இடைவெளிகளால் சமுத்திர ஜலமும் இங்கேவந்து கலக்கிறது. அதனால் இங்கே உள்ள ஜலம் உப்பாயிருக்கிறது.

சென்னை ராஜதானியிலுள்ள இந்த இடத்திலே தான் உப்பங்கழிகள் அதிகம். அவற்றுள் சில 100 மைல்வரையில் நீளமானவை. அவைகள் வடக்கே மங்களூரிலிருந்து தெற்கே திருவனந்தபுரம் வரையில் பரவியுள்ளன. சில இடங்களில் சிறு கால்வாய்களினால் அவை ஒன்றோடொன்று சேர்ந்திருக்கின்றன. அந்த நீளமான உப்பங்கழிகள் நதிகளின் முகத்துவாரங்களோடு கலப்பதால் ஆயிரக் கணக்கான தோணிகளும் கட்டுமரங்களும் அவைகளில் ஓடுகின்றன. சென்னை ராஜதானியில் வேறு எந்தப்பக்கத்திலும் ஜலத்தின் வழியே சாமான்களின் போக்கு வரவு இவ்வளவு அதிகமாக இல்லை. இந்த இடத்தில் வண்டியைக் காட்டிலும் தோணியே அதிக உபயோகமானது.

*சீதோஷ்ணஸ்திதி.* இந்தப் பிரதேசத்தின் சீதோஷ்ணஸ்திதி சென்னை ராஜதானியின் மற்றப் பாகங்களில் இருப்பதுபோல் இல்லை. மற்ற இடங்களைக்காட்டிலும் கடலோரத்திலும் மேற்குத்தொடர்ச்சி மலைக்குச் சமீபமான இடங்களிலும் அதிகமான மழை பெய்கிறது. இந்தப் பிரதேசத்தில் பெய்யும் மழையானது கிழக்குத் தீர வெளியில் பெய்யும் மழைக்கு 2 பங்கு அதிகமாகவும் மத்திய ஜில்லாக்களில் பெய்யும் மழைக்கு 3 பங்கு அதிகமாகவும் தக்காணத்தில் பெய்யும் மழைக்கு 4 பங்கு அதிகமாகவும் இருக்கிறதென்று சொல்லலாம்.

மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தென்மேற்குப் பருவக்காற்றானது மேகங்களை மேற்குத்தொடர்ச்சி மலைகளின்மேல் கொண்டு வந்து தாக்குகிறது. அதனால் கொஞ்சநேரமும் விடாமல் இரவும் பகலும் கனத்த மழை பெய்கிறது. காற்றில் ஈரம் நிறைந்திருக்கிறது. பள்ளத்தாக்குகளை மூடுபனி சூழ்ந்துகொள்ளுகிறது. ஒவ்வொரு இடத்திலும் நிலத்தில் அதிக ஆழம்வரையில் நல்ல மண் அதிகமாக இருக்கிறது. குளங்களில் ஜலம் கரைவரையில் நிரம்பி இருக்கிறது. நதிகளெல்லாம் பிரவாகத்தோடு கடலில் போய் விழுகின்றன. அந்த நதிகள் ஓடும்போது சிறந்த வண்டலை வாரிக்கொண்டு போய்க் கடலோரமாக உள்ள சமநிலத்தில் பரப்பி அந்த இடத்தை மிகவும் செழிப்பாக்கி விடுகின்றன.

பருவக்காற்று அடிக்கும் காலங்களில் கிழக்கிலிருந்து மேற்குத்தொடர்ச்சி மலையைக் கடந்து அப்பால் சென்று பார்ப்போமானால் நாம் ஒரு நூதனமான பிரதேசத்துக்கு வந்திருப்பதுபோலவே தோற்றும். எங்கே பார்த்தாலும் ஒரே பசுமையாக இருக்கும். செடி இல்லாத இடமே இராது. பெரிய மலைகளின்மேலும் சிறு குன்றுகளின்மேலும் காடுகள் நிறைந்திருக்கும். பள்ளத்தாக்குகளில் நெல் வயல்களையும் தோட்டங்களையும் விசேஷமாகக் காணலாம். தரிசான நிலம் ஒன்றுகூட நமது கண்ணில் படாது. தானியங்கள் பயிரிடப்படாத இடங்களில் புல் அதிகமாக வளர்ந்திருக்கும். அல்லது மூங்கில்

கள் வளர்ந்திருக்கும். சூரியனுடைய வெப்பமே தெரியாமல் மரங்கள் சாலைகளிலும் கிராமங்களிலும் அடர்த்தியாக வளர்ந்து நிழலைக் கொடுக்கும். கடலோரமாக உள்ள மணல்வெளிகளில் நூற்றுக்கணக்கான மைல்வரையிலும் உப்பங்கழிகளின் கரைகளிலும் தென்னஞ் சோலைகளும் கமுகுத் தோட்டங்களும் பனந் தோப்புக்களும் நிறைந்திருக்கின்றன. மேற்குத்தீரமே தென்னமரங்களுக்கு இருப்பிடம் கடலோரமாக நின்று நிலத்தைத் திரும்பிப் பார்ப்போமானல் அங்கிருந்து மேற்குத்தொடர்ச்சி மலைவரையில் ஒரு பெரிய காடு பரவியிருப்பதாகத் தோற்றும். வயல்களும் மேடுகளும் தோட்டங்களும் சாலைகளும் கண்ணில் படமாட்டா. அவைகளை மரங்கள் மறைத்துவிடுகின்றன. சென்னை ராஜதானியில் வேறு எந்தப்பக்கமும் இவ்வளவு பசுமையாகவும் செழிப்பாகவும் இராது.

சென்னை ராஜதானியின் இந்தப் பாகமானது மற்றப் பாகங்களிலிருந்து செங்குத்தாயுள்ள மேற்குத்தொடர்ச்சி மலையினல் தடுக்கப்பட்டிருக்கிறது. பல நூற்ருண்டுகளாக ஜனங்கள் இந்த மலைகளின்மேல் ஏறியும் மாட்டுவண்டிகளில் மிகவும் கஷ்டபட்டுப் பிரயாணம் செய்தும் இந்த மலைத்தொடரைக் கடந்து வந்தார்கள். ஆனல் இப்போது மலையைக் குடைந்து இரண்டு இடங்களில் இருப்புப்பாதைகளை அமைத்திருக்கிருர்கள். அவற்றுள் ஒன்று பாலைக்காட்டுத்திறப்பு வழியாகவும் மற்ருென்று திருநெல்வேலியிலிருந்து கொல்லத்துக்கும் போகின்றன.

மேற்குத் தீரவெளியிலிருக்கும் ஜனங்களுக்கும் மற்ற ஜனங்களுக்கும் அதிகமான சம்பந்தம் இல்லை. ஆதலால் அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கும் மற்றவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கும் அதிகமான வித்தியாசம் உண்டு. அவர்கள் மலையாளம் என்னும் தனியான ஒரு பாஷையைப் பேசுகிருர்கள். அவர்களுடைய நடை உடைகளும் அனுஷ்டானங்களும் வேறுவிதமானவை. சீதோஷ்ண நிலைமையும் அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கு ஒரு காரணமாகும். மழை அந்தப் பக்கத்தில் மிகவும் அதிகமாகப் பெய்தால் ஜலத்தினிடத்தில் அவர்களுக்கு ஒருவிதமான பிரியம் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சிறுவனும் நன்ருக நீந்துவான். அநேகமாக ஒவ்வொரு மனிதனும் தோணியை விடுவான்.

கடலோரத்தில் செம்படவர்களுடைய கிராமங்கள் நூற்றுக்கணக்காக உண்டு. சென்னை ராஜதானியிலுள்ள மற்றப் பாகங்களில் கிராமவாசி ஒவ்வொருவனும் வண்டியும் மாடும் வைத்திருப்பதுபோல் உப்பங்கழிக் கரையிலுள்ள கிராமவாசி ஒவ்வொருவனும் தோணியை வைத்திருக்கிருன். அவ்வளவு மழை பெய்யும் பிரதேசத்தில் மண் வீடுகள் உபயோகப்படுமோ? படாது. ஆகையால் அங்கேயுள்ள ஜனங்கள் ஒருவகையான பாறையால் வீடுகளைக் கட்டியிருக்கிருர்கள். மழைபெய்யுங் காலத்தில் மழை ஜலம் வீட்டுக்குள் விழாதபடி வீட்டின் கூரைகள் சரிவாகக் கட்டப்பட்டிருக்கின்றன. தட்டை இல்லாமல் மழை பெய்வதால் அணைக்கட்டுகளும் குளங்களும் அங்கே அவசியமில்லை. அநேக இடங்களில் வருஷந்தோறும் இரண்டு தடவை அல்லது மூன்று தடவை சாகுபடி நடக்கும். ஆதலால் மற்ற இடங்களைப்போல் அங்கே பஞ்சம் நேரிடும் என்ற பயமே கிடையாது.

விவசாயம். இந்தப் பிரதேசத்தின் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு விதமான மரம் உண்டாகிறது. மலைகளில் மிகவும் பெரிய காடுகள் இருக்கின்றன. அங்கே தேக்கு, கருங்காலி முதலிய நல்ல மரங்கள் பயிராகின்றன. அந்த மரங்களை வெட்டி அறுகளின் வழியாகக் கடற்கரைக்குக் கொண்டுபோகிருர்கள். அவ்விடத்தில் அவைகள் பெரிய துண்டுகளாகவும் பலகைகளாகவும் அறுக்கப்பட்டு வெளியூர்களுக்குப் போகின்றன. எங்கே பார்த்தாலும் மூங்கில் செவ்வையாகப் பயிராகிறது.

மலைச்சரிவுகளில் காபித் தோட்டங்களும் தேயிலைத் தோட்டங்களும் அதிகமாக உண்டு. காபிக்கொட்டையையும் தேயிலையையும் துறைமுகங்களுக்குக் கொண்டுபோய் அங்கிருந்து கப்பல்களில் ஏற்றி ஐரோப்பாவுக்கு அனுப்புகிருர்கள். மலைகளில் ஏலக்காய்களும் கிடைக்கின்றன.

பள்ளத்தாக்குகளிலும் நிலங்களிலும் நெல்லைத்தான் முக்கியமாகப் பயிரிடுகிருர்கள். ஒவ்வொரு தோட்டத்திலும் பாக்கு மரங்களையும் மிளகு கொடிகளையும், பலாமரங்களையும் மாமரங்களையும் பார்க்கலாம். கடலோரத்தில் வெகுதூரம்வரையில் ஆற்றங்கரைகளிலும் உப்பங்கழிகளின் கரைகளிலும் தென்னந் தோப்புகள் இருக்கின்றன. அந்தப் பக்கத்தில் மரங்களுக்கெல்லாம் தென்னையையே ராஜாவென்று சொல்லுவார்கள். சென்னையிலுள்ள மற்ற இடங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் மேற்கு வெளியிலேதான் அதிகமான தென்னமரங்கள் உண்டு.

தொழில்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் தேங்காய் பிடுங்குவதிலும் அவற்றின் மட்டைகளை உரித்து நார் எடுப்பதிலும் நாரைக் கயிருகத் திரிப்பதிலும் கயிற்றினல் பாய்கள் பின்னுவதிலும் தேங்காய்ப் பருப்பை உலர்த்தி எண்ணெய்

எடுப்பதிலும் மரங்களிலிருந்து கள் இறக்குவதிலும் தங்கள் காலத்தைச் செலவிடுகிறார்கள். நூற்றுக்கணக்கான ஜனங்கள் கயிற்றையும், கொப்பரையையும், எண்ணெயையும் படகுகளில் ஏற்றிக்கொண்டு உப்பங்கழிகளின் வழியாகத் துறைமுகங்களுக்குக் கொண்டுபோய்க் கூலி பெற்று ஜீவனம் செய்கிறார்கள்.

கடலோரத்திலுள்ள செம்படவர்கள் மீன் பிடித்து ஜீவிக்கிறார்கள். அங்கே கிடைக்கும் மீன்களுக்கும் கிழக்குக் கடலோரமாகக் கிடைக்கும் மீன்களுக்கும் வித்தியாசம் உண்டு. அநேக இடங்களில் ஒருவிதமான களிமண்ணினால் செங்கல்லும் ஓடுகளும் செய்கிறார்கள். ஓடுகள் தென் இந்தியாவில் உள்ள பல இடங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. அவைகளுக்கு மங்களூர் ஓடுகள் என்று பெயர். அங்கே நிலம் மிகவும் செழிப்பாக இருப்பதால் ஜனங்களுக்கு ஓயாமல் ஏதாவது ஒருவேலை இருக்கும்.

**போக்குவரவுக்குரிய சாதனங்கள்.** பாலக்காட்டுத்திறப்பு வழியாக ஓர் இருப்புப்பாதை பொன்னாணிப் பள்ளத்தாக்குவரையில் செல்லுகிறது. பிறகு வடக்கே திரும்பி அது கடலோரமாகச் சென்று கள்ளிக்கோட்டையைத் தாண்டி மங்களூர்வரையில் போகிறது.

உப்பங்கழி வழியாகவும் கால்வாய்களின் வழியாகவும் கடலோரத்தில் பிரயாணம் செய்யலாம். தெற்கேயுள்ள பாகத்துக்குப் போகவேண்டுமானால் பாலக்காட்டுக் கணவாய் வழியாக, சோரனூர்வரையில் போகவேண்டும். அங்கிருந்து ஒரு கிளைப்பாதை பொன்னாணி நதியைக் கடந்து தெற்கே திரும்பி எர்ணாகுளத்துக்குப் போகிறது. எர்ணாகுளத்திலிருந்து நீளமான உப்பங்கழியொன்று கடலோரமாக ஆலப்புழி, கொல்லம் இவைகளைத் தாண்டித்தெற்கேவெகுதூரம்செல்லுகிறது. பிறகு அங்கிருந்து கால்வாயின் மூலமாகத் திருவனந்தபுரத்துக்குப் போய்ச் சேரலாம். திருவனந்தபுரத்திலிருந்து ஒரு சாலை கடலோரமாகக் கன்னியாகுமரிவரையில் போகிறது. மேற்குத் தீரவெளிக்குப் போவதற்கு வேறொரு வழியும் உண்டு. திருநெல்வேலியில் புகைவண்டியிலேறினால் மலையைக் கடந்து கொல்லத்துக்குப் போகலாம். அங்கிருந்து தெற்கே கால்வாயின் வழியாகவும் வடக்கே உப்பங்கழியின் வழியாகவும் பிரயாணம் செய்யலாம். சமீபத்தில், கொல்லத்திலிருந்து திருவனந்தபுரத்துக்கும், இருப்புப்பாதை போட்டிருக்கிறார்கள்.

**பிரிவுகள்.** படத்தைப் பார்த்தால் மேற்குத் தீரவெளியின் பிரிவுகள் நன்றாகத் தெரியும். சென்னை ராஜதானியைச் சேர்ந்த இரண்டு ஜில்லாக்கள் வடக்கே இருக்கின்றன. அவைகளுக்கு மலையாளமென்றும் தென் கன்னடம் என்றும் பெயர். சுதேச ராஜ்யங்களாகிய கொச்சியும் திருவாங்கூரும் தெற்கே இருக்கின்றன. ஜனங்கள் எல்லாரும் பெரும்பாலும் செழிப்பான சமவெளிப் பிரதேசத்திலேயே வசிக்கிறார்கள். கிராமங்களும் பட்டணங்களும் அநேகமாக அங்கே தான் இருக்கின்றன. மலைகளில் சில கிராமங்களே உண்டு.

**மலையாளம் ஜில்லா.** பாலக்காட்டுத்திறப்பின் தொடக்கமே மலையாளம் ஜில்லாவில் இருக்கிறது. பாலக்காடு என்னும் பட்டணமும் அந்தத் திறப்பிலேதான் இருக்கிறது. மலைகளின் வழியாகக் கடற்கரைக்குச் செல்லும் முக்கியமான வழியில் அது இருப்பதால் கிழக்கே இருப்பவர்களுக்கும் மேற்கே இருப்பவர்களுக்கும் அது ஒரு பிரதான இடமாகும். பாலக்காட்டில் ஒரு பழைய கோட்டை உண்டு; அது திறப்பைக் காத்துவருகிறது.

மலையாளத்திலுள்ள மற்ற நகரங்களெல்லாம் கடலோரத்தில் இருக்கின்றன. பொன்னாணி என்னும் கிராமம் பொன்னாணி நதியின் முகத்துவாரத்தில் இருக்கிறது. வடக்கே போனால் பேப்பூர் நதியின் முகத்துவாரத்தில் பேப்பூர் நகரமும் அதற்கப்பால் துறைமுக நகரங்களாகிய கள்ளிக்கோட்டையும், பககாராவும், தலைச்சேரியும், கண்ணனூரும் இருக்கின்றன.

பொன்னாணி நதியின் முகத்துவாரத்திலிருந்து தெற்கே திரும்பினால் கொச்சி நகரத்துக்குப் போய்ச் சேரலாம். கோச்சி, கள்ளிக்கோட்டை, கண்ணனூர். இந்த மூன்றுமே மலையாளம் ஜில்லாவில் முக்கியமான துறைமுக நகரங்கள். அந்த இடங்களிலிருந்து காபிக்கொட்டை, தேயிலை, எலக்காய் மரம், மிளகு, ரப்பர், எண்ணெய், கொப்பரை, தேங்காய்நார்க் கயிறு, மீன். மங்களூர் ஓடுகள் முதலியன ஏற்றுமதியாகின்றன. ஆனால் இந்த மூன்று இடங்களுள் ஒன்றிலாவது கப்பல்கள் வந்து தங்குவதற்குச் சௌகரியமான துறைமுகம் இல்லை. ஆகையால் இந்த இடங்களுக்கு வரும்பெரிய புகைக்கப்பல்கள் கடலோரத்திலிருந்து ஒருமைல் அல்லது இரண்டுமைல் தூரத்திற்கு அப்பாலே நின்றுவிடுகின்றன. புயல்காற்று அடிக்கும்போது அந்தப் பக்கத்தில் கடல்வழியாக வியாபாரமே நடப்பதில்லை. அப்போது அலைகள் மிகவும் பலமாக வீசுவதால் தோணிகளைக் கப்பல்களுக்குச் சமீபமாகக் கொண்டுபோவதற்கு அங்கேயுள்ளவர்கள் பயப்படுவார்கள்.

கொச்சி ஒரு நீளமான உப்பங்கழியின் முகத்துவாரத்தில் இருக்கிறது. அந்த முகத்துவாரத்

தைப் பின்னும் ஆழமாகத் தோண்டினால் கப்பல்கள் வந்து தங்குவதற்கு அது மிகவும் சிறந்த இடமாகிவிடும். ஆனால் ஒருதரம் புயலகாற்று அடித்தால் மணல் அதிகமாக அங்கே வந்து விழுந்து அந்த இடத்தை மேடாகச் செய்துவிடும்.

ஜில்லாவின் பிரதான நகரம் காளிக்கோட்டை. கடல் வழியாக அங்கே வியாபாரம் அதிகமாக நடக்கிறது.

**தென் கன்னடம்.** இந்த ஜில்லா மலையாளத்தைப்போல் அவ்வளவு செழிப்பானதன்று. பெரும்பாலும் இங்கே காடுகள் நிறைந்திருக்கின்றன. சிறிது பாகத்திலேதான் விவசாயம் நடக்கிறது. இதன் முக்கிய நகரமாகிய மங்களூர் இரண்டு நதிகளின் முகத்துவாரத்துக்குச் சமீபமாக ஒரு உப்பங்கழியின் கரையில் இருக்கிறது. இது ஒரு துறைமுகம். ஜில்லாவின் வியாபாரம் முழுவதும் அநேகமாக இதன்வழியாகத்தான் நடக்கிறது. மேற்குத்தீர வெளியில் செல்லும் இருப்புப்பாதையின் ஒரு கோடியில் இது இருக்கிறது. மைசூரிலிருந்தும் குடகிலிருந்தும் காபிக்கொட்டையும் சந்தனமரமும் சமுத்திரதீர வெளியில் கிடைக்கும் அரிசியும் பாக்கும் கயிறும் சுற்றியுள்ள இடங்களில் செய்யப்படும் செங்கலும் ஓடும் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. மங்களூரிலிருந்து எவ்வளவு காபிக்கொட்டை ஏற்றுமதியாகிறதோ அவ்வளவு இந்தியாவில் வேறு எந்த இடத்திலிருந்தும் ஏற்றுமதியாகவில்லை. ஜில்லாவில் வேறொரு முக்கியபட்டணம் உடுப்பி. அது மங்களூருக்கும் பம்பாய் ராஜதானியின் எல்லைக்கும் மத்தியில் கடலோரத்துக்கு அருகில் இருக்கிறது.

**சுதேச ராஜ்யங்களாகிய கோச்சியும் திருவாங்கூரும்.** கொச்சி ராஜ்யத்தில் முக்கியமான பட்டணம் எர்ணாகுளம். உப்பங்கழியின்மேல் அது கொச்சிக்கு எதிர்த்த கரையில் இருக்கிறது. அந்த உப்பங்கழியின் வழியாக இங்கிருந்து பலதோணிகளில் மரத்துண்டுகளையும் தேங்காய்களையும் ஏற்றிக்கொண்டு போவார்கள். இங்கிருந்து ஒரு கிளைப்பாதை சோரனூர்வரையில் சென்று அங்கே முக்கிய இருப்புப்பாதையோடு சேருகிறது. திருச்சூர் என்னும் பட்டணம் இந்தக் கிளைப்பாதையில் ஒரு நீள்மான உப்பங்கழியின் கோடியில் இருக்கிறது. கொச்சி ராஜ்யத்தில் ரப்பர் அதிகமாக உண்டாகிறது. மழை விசேஷமாக உள்ள இடத்திலேதான் ரப்பர் மரம் பயிராகும்.

**திருவாங்கூர் ராஜ்யம்.** மேலேவெளியின் தென்பாகம் முழுவதும் திருவாங்கூர் ராஜ்யந்தான். திருவனந்தபுரம், கோல்லம், ஆலப்புழி இந்த மூன்றும் ராஜ்யத்தின் முக்கியமான பட்டணங்கள். இவைகள் ஒன்றோடொன்று கால்வாய்களாலும் உப்பங்கழியினாலும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ராஜ்யத்தின் தலைநகரமாகிய திருவனந்தபுரம் மிகவும் பெரிய பட்டணம். மகாராஜாவின் அரண்மனையும், அவருடைய கலாசாலையும், கோட்டையும், கோவிலும் அங்கேயுள்ள முக்கியமான கட்டிடங்கள்.

கோல்லத்திலிருந்து காபிக்கொட்டை, தேயிலை, மரம், மிளகு, தேங்காய்நார், தேங்காயெண்ணெய் முதலியன ஏற்றுமதியாகின்றன.

ஆலப்புழி ஒரு முக்கியமான துறைமுகம். அங்கிருந்து தேங்காய்நாரும், தேங்காய்நாரினால் செய்த பாய்களும் ஏற்றுமதியாகின்றன. இந்தியாவின் தெற்குக்கோடியில் கன்னியாகுமரி என்னும் ஸ்தலம் இருக்கிறது. அங்கேயுள்ள ஆலயத்துக்கு வருஷந்தோறும் அநேகம் யாத்திரிகர்கள் தரிசனத்துக்காகச் செல்லுவார்கள்.

## 15. சென்னபட்டணம்.

நம்முடைய மாகாணத்திலுள்ள ஜில்லாக்களைப்பற்றியும் அங்கங்கேயுள்ள பட்டணங்களைப் பற்றியும், நகரங்களைப்பற்றியும் அநேகம் விஷயங்கள் தெரிந்துகொண்டோம். லக்ஷம்ஜனங்களுக்கு மேல் வசிக்கும் ஒரு பெரிய பட்டணமே நகரமாகும். நம்முடைய மாகாணத்தில் எல்லா நகரங்களைக்காட்டிலும் பெரிய நகரமாகிய சென்னையை நாம் பார்ப்பது அவசியமல்லவா? அதில் 5 லக்ஷம்ஜனங்களுக்குமேல் வசிக்கிறார்கள். மாகாணத்தில் வேறு 4 பெரிய பட்டணங்களில் வசிக்கும் ஜனங்களைக்காட்டிலும் அதிகமான ஜனங்கள் சென்னையில் வசிக்கிறார்கள். அதுவே இந்தியாவில் மூன்றாவது பெரிய பட்டணமாகும். மாகாணத்தின் பிரதான நகரம் அதுதான். கவர்னரும் அவருடைய முக்கிய உத்தியோகஸ்தர்களும் அங்கே வசிக்கிறார்கள்.

மாகாணத்தின் சட்ட திட்டங்களை ஏற்படுத்தும் சபையார்கள் அடிக்கடி ஸெண்டு ஜார்ஜ் கோட்டையில் கூடுவார்கள். ஹைகோர்ட், ஜனரல் போஸ்டாபீஸ், ரெவினியூ போர்டாபீஸ், ஸீகஸ்டம்ஸ் ஆபீஸ் முதலிய பெரிய உத்தியோகசாலைகள் சென்னையில் இருக்கின்றன. நியாயாதிகாரிகளில் மிகவும் பெரியவர்களான ஹைகோர்ட் ஜட்ஜுகள் பெரிய பெரிய வழக்குகளையெல்லாம் விசாரித்து முடிவு செய்வார்கள். ஹைகோர்ட் மிகவும் அழகான கட்டிடம். சர்வகலா சங்கத்தின் உத்தியோகசாலையாகிய ஸெனெட் ஹௌஸும், சில பெரிய காலேஜ்

களும், பல பள்ளிக்கூடங்களும், பொருட்காட்சிச் சாலையும், பலவிதமான வைத்தியசாலைகளும் சென்னை நகரத்திலுள்ள வேறு முக்கியமான கட்டிடங்கள்.

சென்னையிலிருந்து பல இடங்களுக்கு இருப்புப்பாதைகள் செல்லுகின்றன. அங்கிருந்து கிழக்கே பெஸ்வாடாவரையில் பக்கிங்ஹாம் கால்வாய் வழியாகத் தோணிகள் செல்லுகின்றன. உப்பு, சவுக்குக்கட்டை, சுண்ணும்புக்கிளிஞ்சல் முதலியன தோணிகளில் பல இடங்களிலிருந்தும் சென்னைக்கு வருகின்றன. இந்தக் கால்வாய் தெற்கிலும் கொஞ்சதூரம் வரையில் போகிறது. அதனுல் சிறிதளவு வியாபாரத்துக்கும் அனுகூலம் உண்டு. சென்னபட்டணமானது மாகாணத்தில் முக்கியமான துறைமுகமாகவும் இருக்கிறது. சென்னை மாகாணத்தில் இந்த ஒரு நகரத்திலேதான் பெரிய கப்பல்கள் வந்து தங்குவதற்கு அனுகூலம் இருக்கிறது. இந்தக் காரணத்தினுல் கடல்மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் சென்னையில் வர்த்தகம் மிகுதியாக நடக்கிறது.

நகரத்தின் முக்கியமான இடங்களில் பெருத்த முதலாளிகளுடைய உத்தியோகசாலைகளும், பாங்கிகளும், கடைகளும், கிடங்குகளும் இருக்கின்றன. இரண்டு பஞ்சு யந்திரசாலைகளும், இரும்பில் வேலை செய்யும் சில தொழிற்சாலைகளும், ரெயில்வேயைச் சேர்ந்த தொழிற்சாலைகளும், தோல் பதனிடும் வேலையைக் கவனித்துவரும் சில கைத்தொழிற் சாலைகளும் இருக்கின்றன. ஆகையால் சென்னபட்டணம் வியாபாரம் மிகுதியாக நடக்கும் இடமாகவும் இருக்கிறது. பட்டணத்தில் எந்தப் பக்கத்திலும் ஜனங்கள் ஏதேனும் ஒரு வேலை செய்துகொண்டே யிருப்பார்கள். ஆனுல் சென்னையானது வியாபாரத்திலும் மற்ற விஷயங்களிலும் பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் ஈடாகாது.

## 16. நம்முடைய மாகாணத்தின் கடலோரமாகச் சுற்றிவருதல்.

இதுவரையில் நிலத்தின் வழியாகப் பிரயாணம் செய்துவரக்கூடிய இடங்களைப்பற்றிச் சொன்னேம். இனி நமது மாகாணத்தில் கடலோரமாகப் பிரயாணம் செய்தால் பார்க்கக்கூடிய இடங்களைப்பற்றிச் சொல்லுவோம்.

ஆரம்பத்தில் கல்கத்தாவிலிருந்து புறப்படுவதாக வைத்துக்கொள்வோம். அங்கே அளவற்ற புகைக்கப்பல்கள் இருக்கின்றன. கல்கத்தாவானது வங்காள மாகாணத்தில் கங்கையின் முகத்துவாரங்களுள் ஒன்றுகிய ஹூக்ளி நதிக்கு 70 மைலுக்கு அப்பால் இருக்கிறது. நாம் சொல்லப்போகும் பிரயாணமானது கல்கத்தாவில் ஆரம்பித்து இந்தியாவாகிய த்வீபகல்பத்தைச் சுற்றிக்கொண்டு கராச்சிக்கு வந்து முடியும். படத்தைப் பார்த்தால் பிரயாணத்தின் முதல் பாதியில் வங்காளக் குடாக்கடல் ஓரமாகத் தெற்கே நோக்கிப் போகவேண்டுமென்றும் மற்றெரு பாதியில் அரபிக்கடல் ஓரமாக வடக்கே நோக்கிப் போகவேண்டுமென்றும் தெரியும்.

வழியில் கப்பல் தலைவன் முக்கியமான இடங்களிலெல்லாம் நிறுத்துவான். ஆதலால் சென்னை ராஜதானியில் முக்கியமான துறைமுகங்களையெல்லாம் நாம் பார்க்கலாம். நம்முடைய கப்பல் கல்கத்தாவிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் பெரிய நகரத்திலுள்ள பெரிய வீடுகளும் அழகான கட்டிடங்களும் மண்டபங்களும் உயரமான புகைபோக்கிகளும் சணல்நார் பின்னும் பல தொழிற் சாலைகளும் பின்னே திரும்பிப் பார்த்தால் நமது கண்ணுக்குத் தெரியும்.

கல்கத்தாவில் அளவற்ற கோணிகள் செய்யப்பட்டு அநேக இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. நம்முடைய கப்பலிலும் கோணிமூட்டைகளும் அதிகமாக இருக்கும். நதியின் இரண்டு பக்கங்களிலுமுள்ள பூமி பெரும்பாலும் சமமாகவே இருக்கிறது. கப்பலின் மேல்தட்டிலிருந்து பார்த்தால் நதியின் பள்ளத்தாக்குகள் கண்ணுக்குத் தெரியும்.

பிறகு கங்கையின் பெரிய டெல்டாவைக் கடந்து செல்லுவோம். இந்த டெல்டாவானது கோதாவரி, கிருஷ்ணு, காவேரி இந்த மூன்று நதிகளும் சேர்ந்தால் என்னவிஸ்தீரணம் இருக்குமோ அதைக்காட்டிலும் விசாலமானது. கடலைநோக்கிச் செல்லச்செல்ல நதி அகன்று கொண்டே போகிறது. நதியின் சுத்தஜலம் கடலின் உப்பு ஜலத்தோடு கலக்கிறது. கடைசியில் கடலுக்கே வந்து சேருவோம். டெல்டாவிலுள்ள தாழ்வான களிமண் பூமிகளும் கடலோரமாக உள்ள விளக்கு மண்டபங்களும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துபோகின்றன. ஆனுலும் நம்முடைய வலதுகைப்பக்கத்தில் உள்ள சமபூமியில் அநேகம் தென்னைமரங்களும் பனைமரங்களும் பாக்கு மரங்களும் இருப்பதைப் பார்க்கலாம்.

கப்பலில் முதல்தரமான திசைகாட்டிகள் மூன்று அல்லது நான்கு இருக்கின்றன. கப்பலைச் செலுத்துபவனும் ஒரு திசைகாட்டியை வைத்திருக்கிறுன். இன்னபக்கமாகக் கப்பலைச் செலுத்தவேண்டுமென்பதற்கு அதுதான் அவ

னுக்கு உதவுகிறது. கப்பல்தலைவன் தன்னிடம் ஒரு படத்தையும் வைத்திருக்கிறான். அதனால் கடலோரமாக இன்ன இன்ன இடங்கள் இருக்கின்றன என்பதும் விளக்கு மண்டபங்கள் இன்ன இன்ன இடங்களில் உள்ளன வென்பதும் ஒவ்வொரு இடத்தில் உள்ள ஜலத்தின் ஆழமும் வேறு முக்கியமான அடையாளங்களும் அவனுக்குத் தெரிகின்றன.

நம்மிடமும் ஒரு திசைகாட்டியும் படமும் இருக்கின்றன. அவற்றினால் கங்கை டெல்டாவைக் கடந்தபிறகு நாம் நேர் தெற்கே போகாமல் கொஞ்சம் மேற்குப் பக்கமாகப் போகிறோம் என்பது தெரியும். அப்போது கடலோரத்தில் உள்ள எல்லாவற்றையும் நாம் பார்ப்போம். கொஞ்ச தூரம் போனவுடன் நீளமான ஒரு மணல்வெளி கடலுக்குள் பிரவேசித்திருக்கும். அது மகாநதியின் டெல்டாவாகும்.

கப்பலைவிட்டு இறங்கிக் கடற்கரையிற் சென்று பார்ப்போமானால் எங்கே பார்த்தாலும் நெல்வயல்கள் நம் கண்ணில் படும். இந்தியாவில் நதிகளுடைய டெல்டாக்களெல்லாம் பார்வைக்கு ஒரேமாதிரியாகவே யுள்ளன. ஒவ்வொரு டெல்டாவிலும் தானிய வயல்களும் கரும்புத்தோட்டங்களும் தென்னஞ் சோலைகளும் சோலைகளின் இடையே கிராமங்களும் இருக்கின்றன.

வயல்களுக்குச் சிறு சிறு கால்வாய்கள் ஜலத்தைக்கொண்டு போய்விடுகின்றன. கஞ்சம் ஜில்லாவில் பெய்யும் மழையின் சிலபாகம் மகாநதியில் போய் விழுகிறது. மகாநதியை நாம் பார்த்தவுடனே நம்முடைய மாகாணத்தின் வடக்கு எல்லைக்குச் சமீபமாக வருகிறோம் என்ற எண்ணம் நமக்கு உண்டாகிறது. கொஞ்ச தூரம் போனவுடனே கடற்கரைக்குச் சமீபமாக ஒரு பெரிய ஆலயத்தின் கோபுரங்கள் தெரிகின்றன. அது பூரியில் உள்ள ஜகந்நாதஸ்வாமியின் ஆலயம். இந்தியாவில் எல்லாப் பாகங்களிலிருந்தும் தரிசனத்துக்காக ஜனங்கள் அந்த இடத்துக்கு வருவார்கள்.

பூரியிலிருந்து கொஞ்சதூரம் தெற்கே வந்தோமானால் அழகான சில்கா ஏரியைப் பார்ப்போம். அது கஞ்சம் ஜில்லாவுக்கு வடக்கெல்லையாகும். கப்பலின் மேல்தட்டிலிருந்து பார்ப்போமானால் சில மலைத்தொடர்கள் கடலோரத்திலிருந்து கொஞ்சதூரம் உள்ளடங்கி இருப்பது தெரியும். அவைகளே கிழக்குத்தொடர்ச்சி மலையாகும். தெற்கே வெகுதூரம்வரையில் அவை பரவியிருக்கின்றன என்பதை நாம் முன்னமே படித்திருக்கிறோம்.

கஞ்சம் ஜில்லாவில் கோபாலபுரமும், கலிங்கபட்டணமும் முக்கியமான துறைமுகங்கள். அவற்றுள் ஒன்றில் இறங்கி உள் நாட்டுக்குச் செல்வோமானால் கிழக்குத் தொடர்ச்சி மலையில் மிகவும் உன்னதமான சிகரமாகிய மகேந்திரகிரியைப் பார்க்கலாம். அதன் உச்சியில் நின்று சுற்றுப்பக்கங்களைப் பார்த்தால் மிகவும் அழகாக இருக்கும். கிழக்குப் பக்கத்தில் நீளமான சமவெளியும் கடற்கரையும் கடலும் வரிசையாக உள்ளன. மேற்கே காடுகள் நிறைந்த குன்றுகள் காணப்படும். அவற்றின் இடையிடையே குறுகலான பல பள்ளத்தாக்குகள் உண்டு. அவை பார்வைக்குப் பசுமையாயிருக்கும்.

கொஞ்சதூரம் போனால் பிமிலிபட்டணத்தையும் விசாகபட்டணத்தையும் பார்க்கலாம். விசாகபட்டணத்தில் கப்பல்கள் தங்குவதற்கு வசதி இல்லை. ஆகையால் விசாகபட்டணத்துக்குள்ளே போகவேண்டுமானால் கப்பலை வெகுதூரத்தில் நிறுத்திக்கொண்டு தோணிகளில் ஏறித்தான் போய்ப் பார்த்துவரவேண்டும். அங்கே சமுத்திரத்தை அதிக ஆழமாக வெட்டிக் கப்பல்கள் வந்து தங்குவதற்கு வேண்டிய அனுகூலம் செய்ய யோசித்து வருவதாகத் தெரிகிறது.

கப்பல்தலைவனிடம் படம் இருப்பதால் அதைக்கொண்டு அவன் கடலுக்குள் கீழே நீட்டிக்கொண்டிருக்கும் மிகவும் பெரிய ஒரு பாறையைக்காட்டுவான். புதிய துறைமுகம் ஏற்பட்டால் அந்தப் பாறை ஒரு பக்கத்துச் சுவராக உபயோகப்படும். அலைகள் துறைமுகத்துக்குள் மணலை அடித்துவந்து தள்ளாதபடி அது ஒரு தடையாக இருக்கும். இந்தப் புதிய துறைமுகம் ஏற்படுமானால் விசாகபட்டணத்தில் வியாபாரம் மிகவும் அதிகரிக்கும். அந்தப் பட்டணத்தின் கடலோரம்வரையில் புகைவண்டி ஓடுகிறது.

விசாகபட்டணத்தைத் தாண்டினபிறகு கடலுக்குள் பிரவேசித்திருக்கும் ஒரு பெரிய டெல்டாவை நாம் பார்க்கலாம். படத்தைப் பார்த்தால் அந்த இடத்தில் கோதாவரியும் கிருஷ்ணாவும் பல முகத்துவாரங்களின் வழியே கடலில் விழுவது தெரியும். ஆனாலும் அந்த இடத்தில் கடல் அதிக ஆழமாக இராமையால் கப்பல்தலைவன் கப்பலை அதன் அருகே செலுத்திக்கொண்டு போகமாட்டான். ஆயிரக்கணக்கான வருஷங்களாக இந்தப் பெரிய நதிகள் இரண்டும் ஜலத்தோடு மண்ணையும் மணலையும் வாரிக்கொண்டு வந்து கடலை மேடாகச்செய்துவிட்டன. கப்பல் வெகுதூரத்துக் கப்பால்தான் நிற்கும். அங்கிருந்து பார்த்தால் கடலோரமாக ஒரு விளக்கு மண்டபமும் சில கட்டிடங்களும் காணப்படும். அந்த

இடமே காக்கிநாடா என்னும் பட்டணமாகும். அது நம்முடைய மாகாணத்தில் முக்கியமான துறைமுகம்; அந்தப் பட்டணத்துக்குப் பின்னே ஒரு தாழ்வான சமவெளி பரவியிருக்கிறது. அங்கே தென்னைமரங்களையும் பனைமரங்களையும் விசேஷமாகக் காணலாம். வெகுதூரத்தில் சாமல் கோட்டையென்னும் நகரத்தில் சர்க்கரை செய்யும் தொழிற்சாலையில் மேலே புகை கிளம்பி வருவதைப் பார்க்கலாம்.

சாமல் கோட்டையிலிருந்து வெகுதூரத்துக்கு அப்பால் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் இருக்கின்றன. நம்முடைய கப்பலின் பக்கத்தில் வேறு சில கப்பல்களும் இருக்கும். அந்தக் கப்பல்களிலிருந்து காக்கிநாடா அரிசியை மூட்டை மூட்டையாகப் பல தோணிகள் ஏற்றிக் கொண்டு செல்லுகின்றன. கப்பலிலுள்ள சில மூட்டைகளில் சர்க்கரையும் இருக்கும். இந்தச் செழிப்பான பிரதேசத்துக்குக் காக்கிநாடாதான் முக்கியமான துறைமுகம். அங்கிருந்து அரிசியும், சர்க்கரையும் அயலிடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. பர்மாவிலிருந்து ஒரு கப்பல் மண்ணெண்ணெய்த் தகரங்களைக் கொண்டுவந்து நிற்கும். இந்தப் பெரிய டெல்டாவில் ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு முக்கியமான இடத்திலும் நம்முடைய கப்பல் கொஞ்சநேரம் நின்று கல்கத்தாவிலிருந்து கொண்டுவந்திருக்கும் கோணிப்பைகளை அங்கங்கே கொடுக்கும். அரிசியையும், சர்க்கரையையும்போட்டுக்கட்டுவதற்கு அந்தக்கோணிகள் மிகவும் உபயோகமானவை.

காக்கிநாடாவில் நாம் இறங்கினால் சாமல் கோட்டை வழியாக ஓடும் ஒரு கால்வாயின் மூலமாகவாவது ராஜமகேந்திரத்துக்குப் போகும் புகைவண்டி மூலமாகவாவது சென்று கோதாவரியைப் பார்க்கலாம். அவ்வாறு இறங்காமல் பிரயாணம் செய்வோமானால் கிருஷ்ணா டெல்டாவின் ஓரத்தில் கடலின்பக்கமாக, பந்தர் அல்லது மசூலிபட்டணம் என்னும் துறைமுகத்தைக் காணலாம். அங்கே கடற்கரை சமநிலமாகத் தெரிகிறது.

1864–ஆம் வருஷத்தில் ஒரு பெரிய புயல் அடித்தபோது கடல்நீர் பொங்கிப் பலமைல் தூரம் பட்டணத்துக்குள் புகுந்து அநேகம் வீடுகளை அழித்துவிட்டது. 30,000 ஜனங்கள்வரையில் முழுகிப்போனார்கள். மசூலிபட்டணத்திலிருந்து பிரயாணம் செய்வோமானால் நான்கு அல்லது ஐந்து மைல் தூரம்வரையில் சுற்றியுள்ள இடங்கள் பார்வைக்கு ஒரேமாதிரியாக இருக்கும்.

கடலோரத்துக்கு அப்பால் தாழ்வான சமவெளி இருக்கிறது. அங்கேயுள்ள கிராமங்களை அளவற்ற பனைமரங்களும் வேறு மரங்களும் மறைத்துவிடுகின்றன. அந்தச் சமவெளிக்கு அப்பால் நீளமான கிழக்குத் தொடர்ச்சி மலையைப் பார்க்கலாம். அந்த மலைகளில் காடுகள் விசேஷமாக உண்டு. நாம் பிரயாணம் செய்யும்போது நமக்கு எதிரே வேறு பல வியாபாரக் கப்பல்கள் கல்கத்தாவுக்கும் வேறு துறைமுகங்களுக்கும் வரும்.

கடற்கரையின் அருகே செம்படவர்கள் படகுகளில் பாய்மரத்தைக் கட்டிச் செலுத்திக்கொண்டு போவார்கள். அவர்கள் வலையை வீசி மீன்களைப் பிடிப்பதிலேயே நோக்கமுள்ளவர்கள். படத்தில் புலிக்கேட் ஏரியானது கப்பல்கள் வந்து தங்குவதற்குத் தகுந்த இடம்போல் தோற்றும். ஆனால் அந்தப் பக்கத்துக்கு நம்முடைய கப்பலைச் செலுத்திக்கொண்டு போகும்படி மாலுமியிடம் சொல்லுவோமானால் அவன் தன்னிடம் இருக்கும் படத்தைக் காட்டி நகைப்பான். அந்த இடம் கப்பல்கள் வந்து தங்கும்படி விசாலமாக இருந்தாலும் ஒரு சிறிய கப்பல் வந்து நிற்பதற்குக்கூட ஆழமாக இல்லை. படகுகள் மட்டுமே அதில் செல்லும்.

பிறகு கொஞ்சநேரத்தில் சென்னபட்டணத்தையும் அதிலுள்ள துறைமுகத்தையும் நாம் பார்ப்போம். துறைமுகத்தில் இரண்டு நீளமான சுவர்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தச் சுவர்களின் மத்தியில் கடல்நீர் அமைதியாகவும் ஆழமாகவும் இருப்பதால் பல இடங்களிலிருந்தும் வரும் கப்பல்கள் அங்கே தங்குகின்றன. நம்முடைய மாகாணத்தில் சென்னபட்டணத்தில் மட்டுமே கப்பல்கள் வந்து தங்குவதற்கு அதிக அனுகூலம் இருக்கிறது.

நம்முடைய கப்பலின் பக்கத்தில் அமெரிகாவிலிருந்து ஒரு புகைக்கப்பல் மண்ணெண்ணெயைக் கொண்டுவந்து நிற்கிறது. அந்த எண்ணெயைக் கடற்கரைக்கு எடுத்துக்கொண்டு போய் அங்கே கட்டியிருக்கும் பெரிய தொட்டிகளில் நிரப்புகிறார்கள். எம்டன் என்னும் போர்க் கப்பல் சென்னைக்கு வந்து சில குண்டுகள் போட்டபோது அவை சில எண்ணெய்த் தொட்டிகளில் விழுந்து அவற்றைக் கொளுத்திவிட்டன. இங்கிலாந்திலிருந்து பலவகைப் பொருள்களுடன் இரண்டு கப்பல்கள் வந்து நிற்கின்றன. மூட்டைமூட்டையாகத் துணிகளும், நூல்களும் கரையில் ஏற்றப்படுவதை நாம் பார்க்கலாம். அவற்றுள் சில சென்னையிலேயே வியாபாரமாகிவிடுகின்றன. மற்றவை அயலிடங்களுக்குப் போகின்றன.

புகைவண்டிகளின் யந்திரங்களையும், அரிசி யந்திரங்களையும், மோடார்வண்டிகளையும், த்விசக்கிர வண்டிகளையும், கம்பிச்சுருள்களையும், கத்தி முதலான ஆயுதங்களும், ஆணிகளும் அடங்கிய பெட்டிகளையும், தண்டவாளங்களையும், இரும்புத்தகடுகளையும், பித்தளை, தாமிரம் இவைகளாற் செய்யபபட்ட பாத்திரங்களையும், பளிங்கு சாமான்களையும், கடியாரங்கள், மெழுகுவர்த்திகள், ஜோடுகள், குடைகள் முதலிய அளவற்ற பொருள்களையும் கப்பல்களிலிருந்து மிகவும் ஜாக்கிரதையாக இறக்குவதை நாம் கவனிக்கலாம். முதலில் நாம் பார்க்கும்போது இத்தனை சாமான்களும் எப்படி வியாபாரமாகுமென்று ஆச்சரியமடைவோம். ஆனால் வாரந்தப்பாமல் சாமான்களைத் தூக்கிக்கொண்டு கப்பல்கள் வருகின்றன.

நாம் பிரயாணம் செய்வது கார்காலமாக இருக்குமானால் ஆஸ்திரேலியாவி விருந்து குதிரைகளை ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் வந்து நிற்கும். கப்பலுக்குள்ளேயே வெகுகாலம் அடைபட்டிருந்த அந்த மிருகங்கள் கரையைக் கண்டதும் மிக்க ஆனந்தத்தை யடையும். பிறகு அவைகளை ஓட்டிக்கொண்டு போய் யுத்தத்துக்காகப் பழக்குவார்கள். கல்கத்தாவிலிருந்து நம்முடைய கப்பலில் கொண்டுவந்திருக்கும் மூட்டைகளையும் இறக்கிப் பட்டணத்துக்குள்ளே கொண்டு போவார்கள். வேறு சில கப்பல்களில் இங்கிருந்து பல சாமான்களை ஏற்றிக்கொண்டு போவார்கள். ஒரு பெரிய கப்பல் தோலை ஏற்றிக்கொண்டு ஐரோப்பாவுக்காவது அமெரிகாவுக்காவது செல்லும். வேறொரு கப்பல் நிலக்கடலையை ஏற்றிக்கொண்டு பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் செல்லும்.

சென்னை. நாம் கப்பலைவிட்டு இறங்கிப் பட்டணத்துக்குள் போவதாக நினைத்துக்கொள்வோம். கடலோரமாகவுள்ளது ஜார்ஜ் டௌன். அங்கே வியாபாரம் மிகுதியாக நடக்கிறது. வியாபாரியின் பண்டசாலைகளும், பாங்கிகளும், காலேஜுகளும் வேறு பல கட்டிடங்களும் இருக்கின்றன. மிகவும் உயர்ந்த கட்டிடம் ஹைகோர்ட். அதன்மேல் ஏறிப் பார்த்தால் பட்டணம் முழுவதும் நன்றாகத் தெரியும். அதிலுள்ள உயரமான உப்பரிகையே விளக்கு மண்டபமாக (லைட்ஹௌஸ்) உபயோகப்படுகிறது. அந்த விளக்கின் வெளிச்சம் சமுத்திரத்தில் வெகுதூரம் வரையில் தெரியும்.

ஹைகோர்ட்டிலிருந்து கொஞ்சதூரம் தெற்கே ஸெண்ட்ஜார்ஜ் கோட்டை இருக்கிறது. வெகு காலத்துக்கு முன்னே ஆங்கிலேய வியாபாரிகள் ஓர் இந்திய அரசரிடமிருந்து கொஞ்சம் நிலம் வாங்கி அந்தக் கோட்டையைக் கட்டினார்கள். அங்கே மிகவும் உயரமான ஆறு கொடி மரங்கள் இருப்பதையும் அவற்றில் பல கம்பிகள் சேர்க்கப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். அங்கிருந்து கம்பியில்லாத் தந்தி மூலமாகச் சமாசாரங்களைப் பம்பாய்க்கும், கல்கததாவுக்கும், ரங்கூனுக்கும் அனுப்பலாம்.

சென்னையானது பல கிராமங்கள் அடங்கிய ஒரு நகரமாகும். ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்துக்குச் சாலைகளும் தெருக்களும் தொடர்ச்சியாகச் செல்லுகின்றன. சில தெருக்களில் குதிரைவண்டிகளும், மாட்டுவண்டிகளும், மோடார்வண்டிகளும் அடிக்கடி போகும். சில தெருக்களில் மின்சாரத்தின் பலத்தினால் டிராம் வண்டிகள் ஓடும். அவற்றில் ஏறிக்கொண்டு ஜனங்கள் அங்கு மிங்கும் போய்வருவார்கள். கல்கத்தாவிலிருப்பது போலவும், பம்பாயில் இருப்பதுபோலவும் சென்னையில் யந்திரசாலைகள் அதிகமாக இல்லை. ஆதலால் உயரமான சில புகைபோக்கிகள் மட்டுமே நம் கண்ணில் படும்.

சென்னையில் கடலோரமாகப் பலவகையான மீன்களை ஒரு கட்டிடத்தில் சேகரித்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் அந்தக் கட்டிடத்தை அவசியம் பார்க்கவேண்டும். பலவித நிறங்களிலும் மீன்கள் இருக்கின்றன. சில மீன்கள் பார்வைக்கு அழகாகவும், சில மீன்கள் விகாரமாகவும் உள்ளன. சில மீன்கள் துள்ளித் துள்ளி விளையாடும். வலையில் அவைகளை யெல்லாம் பிடித்துவந்து உயிரோடு அந்தக் கட்டிடத்தில் தண்ணீருக்குள் விட்டிருக்கிறார்கள். அதிலுள்ள மீன்களைப் பார்க்கும்போதே நமக்கு ஆச்சரியமாக இருக்குமானால், கடலிலுள்ள எல்லாவகையான மீன்களையும் பார்த்தால் எவ்வளவு ஆச்சரியமாக இராது! அந்தக் கட்டிடத்தை நாம் பார்த்தால் அரைமணி நேரத்துக்குள் பூகோள சாஸ்திரத்தைப்பற்றி அநேக விஷயங்கள் தெரிந்துகொள்ளுவோம். புஸ்தகங்களைப் படிப்பதால் இவ்வளவு சீக்கிரத்தில் அத்தனை விஷயங்கள் தெரியமாட்டா. பூகோள சாஸ்திரமென்பது நிலத்தைப்பற்றிச் சொல்வதோடு கடலைப்பற்றியும், அதிலுள்ள ஜந்துக்களைப் பற்றியும் கூறும் ஒரு சாஸ்திரமல்லவா?

## 17. பிரயாணம் (தோடர்ச்சி).

நம்முடைய கப்பல் சென்னையை விட்டுப் புறப்படும் நேரம் நெருங்கிவிட்டது. மணியடிக்கிறார்கள். ஆகையால் விரைவில் ஓடிப்போய்க் கப்பலில் ஏறிக்கொள்வோம். கப்பல் சென்னையை

விட்டுப் புறப்பட்டபிறகு கடலோரத்தை நாம் பார்த்துக்கொண்டே போவோமானால் கடலோரத்துக்குப் பக்கத்திலுள்ள பிரதேசம் தாழ்வான சமவெளியாகவே தோற்றும். இங்குமங்கும் சிறு சிறு குன்றுகள் காணப்படுமேயல்லாமல் பெரிய மலைத்தொடர்கள் காணப்படமாட்டா. சென்னைக்கு அப்பால் கிழக்குத்தொடர்ச்சிமலைகள் கடலோரமாகப் பரவியிருக்கவில்லை.

நாம் சாயங்காலம் சென்னையைவிட்டுப் புறப்படுவோமானால் இரவு மகா பலிபுரத்தில் உள்ள விளக்குமண்டபத்தின் வெளிச்சத்தைப் பார்க்கலாம். மறுநாள் புதுச்சேரிக்காவது கூடலூருக்காவது பறங்கிப்பேட்டைக்காவது போய்ச்சேரலாம். அந்த இடங்களிலெல்லாம் நிலக்கடலைகள் மூட்டை மூட்டையாகக் கப்பலில் ஏற்றப்படுகின்றன.

புதுச்சேரியில் நாம் இறங்குவோமானால் கடலோரத்தில் ஒருகொடி அசைந்தாடுவதைப் பார்க்கலாம். அந்தக் கொடியைக்கொண்டே அந்த இடம் ஆங்கிலேயர்களைச் சேர்ந்ததல்லவென்றும் பிரெஞ்சுக் காரர்களைச் சேர்ந்ததென்றும் தெரிந்து கொள்ளலாம். அங்கேயுள்ள தெருக்களுக்கு, பிரெஞ்சு பாஷையிலேயே பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்தியர்களில் அநேகர் பிரெஞ்சு பாஷையைப் பேசுவதற்குக் கற்றுக்கொள்ளுகிறார்கள். கடலோரத்தில் உள்ள டியூப்ளே துரையின் உருவச் சிலையைப் பார்க்கும்போது வெகு காலத்துக்குமுன் அவருக்கும் கிளைவுக்கும் நடந்த சண்டை நம்முடைய ஞாபகத்துக்கு வரும். புதுச்சேரியிலிருந்து கப்பல்களில் நிலக்கடலையை ஏற்றிப் பிரான்ஸுக்குக் கொண்டுபோய் எண்ணெய் எடுத்து அதனால் சவுக்காரமும் மெழுகு வத்தியும் செய்கிறார்கள்.

புதுச்சேரியை விட்டபிறகு நாம் வேறொரு டெல்டாவுக்கு வந்து சேருவோம். அதற்குக் காவேரி டெல்டாவென்று பெயர். மற்ற டெல்டாக்களைப் போலவே அதிலும் நெல் வயல்கள் மிகுதியாக உண்டு. மற்ற டெல்டாக்களில் விளையும் நெல்லைக் காக்கிநாடாவிலுள்ள துறைமுகத்திலிருந்து கப்பலில் கொண்டுபோவதுபோல் காவேரி டெல்டாவில் விளையும் நெல்லை நாகபட்டணத்திலிருந்து கப்பல்கள் ஏற்றிக்கொண்டு போகின்றன. அந்த நெல்லில் விசேஷமான பாகம் கொழும்புக்குப் போகிறது. அதற்குப் பதிலாக அங்கிருந்து கொட்டைப்பாக்கு வருகிறது.

ஒரு பெரிய கப்பல் ஜாவா தீவிலிருந்து சர்க்கரையை மூட்டை மூட்டையாக ஏற்றிக்கொண்டு வருகிறது. அந்த மூட்டைகளைச் சிறிய தோணிகள் கரைக்குக் கொண்டுவந்து சேர்க்கின்றன. வேறு சில தோணிகள் கரையில் அடுக்கி வைத்திருக்கும் கோணி மூட்டைகளைக் கப்பலுக்குக் கொண்டுபோகின்றன. நாகபட்டணத்தில் இறங்கிக் கொஞ்சதூரம் தரை மார்க்கமாகச் செல்லுவோமானால் தஞ்சாவூரையும் திருச்சிராப்பள்ளியையும் பார்க்கலாம். காவிரி டெல்டாவில் இவை இரண்டும் பெரிய பட்டணங்கள். காவேரி டெல்டாவின் தென் பக்கமானது கால்மீர் முனை (கோடிக்கரை)யில் முடிகிறது. நாம் பிரயாணம் செய்யும்போது அந்த முனையின்மேல் உள்ள விளக்கு மண்டபம் தெரியும். விளக்கு மண்டபங்களெல்லாம் பெரும்பாலும் முனைகளின்மேல் கட்டப்பட்டிருக்கின்றன என்பது உனக்குத் தெரியுமல்லவா?

கால்மீர் முனைக்கு எதிரே இலங்கைத்தீவு இருப்பது தெரியும். இந்தியாவுக்கும் அந்தத் தீவுக்கும் மத்தியில் பாக் ஜலசந்தி இருக்கிறது. அதன் வழியே கப்பல்கள் போவது அபாயத்துக்கிடமாகும். அங்கே பாறைகள் அதிகம்; அதோடு கப்பல்கள் போவதற்குத் தக்கபடி சமுத்திரம் ஆழமாக இல்லை. இக்கரையிலிருந்து அக்கரைவரையில் ஒரே வரிசையாகப் பாறைகள் இருக்கின்றன. அந்த வரிசைக்கு ஆடம் வாராவதி என்று பெயர். ஆகையால் நம்முடைய கப்பல் அந்த ஜலசந்தியின் வழியாகச் செல்லாமல் இலங்கைத் தீவைச் சுற்றிக் கொண்டு போகிறது. அந்தத் தீவு பார்வைக்கு ஒரு மாங்காயைப்போல் இருக்கும். அதன் விஸ்தீரணம் நம்முடைய சென்னை மாகாணத்தில் கால்பங்குக்குக் குறைந்தது.

நாம் போகும்போது அலைகள் கரையைநோக்கி வீசியடிப்பதைப் பார்க்கலாம். கடலோரத்துக்கு அருகில் உள்ள பள்ளத்தாக்குகளில் தென்னைமரங்கள் மிகுதியாக உள்ளன. தென்னந் தோப்புகளுக்குப் பின்னே நெல் வயல்களைக் காணலாம். அந்தத்தீவின் மத்தியில் உயரமான குன்றுகளும் மலைகளும் இருக்கின்றன. அவற்றின் சரிவுகளில் தேயிலைத் தோட்டங்கள் விசேஷமாக உண்டு.

நம்முடைய புகைக்கப்பல் இலங்கைத் தீவின் தென்கோடிக்குப் போய்ச் சேர்ந்ததும் மறுபடியும் மேற்குக்கரை வழியாக வடக்கு நோக்கி வருகிறது. காலை வேளையில் பார்த்தால் சூரியன் நம்முடைய வலதுகைப்பக்கத்தில் உதயமாவது தெரியும். நமது கப்பலுக்கு வேண்டிய நிலக்கரியைக் கல்கத்தாவிலிருந்து கொண்டுவந்தோம். அந்த நிலக்கரி முழுவதும் இங்கே வருவதற்குள் செலவாகிவிடும். ஆதலால் மறுபடியும் வேண்டிய நிலக்கரியை எடுத்துக்கொள்ளும் பொருட்டுக் கொழும்பிலுள்ள துறைமுகத்தை

நோக்கி நம்முடைய கப்பல் போகும். அவ்விடத்தில் உலகத்தின் பல இடங்களிலிருந்தும் கப்பல்கள் வந்து சந்திப்பதைப் பார்க்கலாம்.

படத்தைப் பார்த்தால் கொழும்பு நகரமானது பல கடல்வழிகள் சந்திக்கும் இடத்தில் அமைந்திருப்பது தெரியும். நம்முடைய கப்பலுக்குப் பக்கத்தில் ஆஸ்திரேலியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் போகும் தபால் கப்பல்வந்து நிற்கிறது. அது புறப்பட்ட இடத்திலிருந்து கொழும்புக்கு வர மூன்று வாரங்கள் பிடிக்கும். அது போக வேண்டிய வழி இன்னும் பாதிக்குமேல் இருக்கிறது. ஆஸ்திரேலியாவில் ஆடுகள் அதிகமாக இருப்பதால் அந்தக் கப்பல் விசேஷமான ஆட்டு ரோமத்தை இங்கிலாந்துக்கு ஏற்றிக்கொண்டு போகும். இங்கிலாந்தில் அதைக்கொண்டு பல வகையான துணிகள் நெய்கிறார்கள். வேறொரு கப்பல் அரிசியை ஏற்றிக்கொண்டு ரங்கூனிலிருந்து வருகிறது. அது இலங்கைத் தீவிலிருந்து தேயிலையையாவது ரப்பரையாவது ஏற்றிக்கொண்டு இங்கிலாந்துக்குச் செல்லும். தீவின் மத்தியில் உள்ள குன்றுகளில் தேயிலைத் தோட்டங்கள் விசேஷமாக உண்டு. வேறு பல கப்பல்கள் இங்கிலாந்திலிருந்து நிலக்கரியை ஏற்றிக்கொண்டு வந்திருக்கின்றன. அவற்றிலுள்ள நிலக்கரியைப் பல தோணிகள் மூலமாகக் கரையில் ஏற்றிப் போர் போராகக் குவித்து அங்கே வரும் கப்பல்களுக்கு விற்றுவருகிறார்கள். நம்முடைய கப்பலைச் சுற்றிலும் பல தோணிகள் நிலக்கரியுடன் வந்துநிற்கின்றன. அநேகம் கூலிக்காரர்கள் தோணிகளிலிருந்து நிலக்கரியை நம்முடைய கப்பலுக்குள் ஏற்றுகிறார்கள்.

இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கான கூலிக்காரர்களை ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் துறைமுகத்தில் வந்து நிற்கிறது. அவர்கள் இலங்கையிலுள்ள தேயிலைத் தோட்டங்களிலும் ரப்பர்த் தோட்டங்களிலும் வேலைசெய்ய வந்திருக்கிறார்கள். ஜப்பான், சைனா, இங்கிலாந்து, பிரான்ஸு, ரஷ்யா, அமெரிகா முதலான இடங்களிலிருந்து விதம் விதமான சாமான்களை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் வந்து நிற்கின்றன. சில வியாபாரிகள் இலங்கைத் தீவிலிருந்து நம்முடைய கப்பலுக்குள் வந்து விலைபெற்ற ரத்தினங்களை விற்கிறார்கள்; அவர்கள் இந்தியர்கள் அல்ல என்பது பார்த்தவுடனே தெரியும். நம்முடைய உடைக்கும் அவர்களுடைய உடைக்கும் வித்தியாசம் உண்டு. தலைப்பாகைக்குப் பதிலாக அவர்கள் ஆமையோட்டினால் செய்த வளைவான சீப்பை அணிந்துகொள்ளுகிறார்கள். அவர்கள் பேசும் பாஷையோ இந்தியாவில் நாம் கேட்டிராத பாஷை. அவர்களுக்குச் சிங்களர்கள் என்று பெயர். அவர்கள் பௌத்தமதத்தைத் தழுவியவர்கள்.

மறுநாள் சாயங்காலம் கொழும்பு நகரத்தை விட்டு வேறு இடங்களுக்குப் புறப்படுவதாக நினைத்துக்கொள்வோம். துறைமுகத்தைத் தாண்டுவதற்குமுன் நம்முடைய மார்க்கத்தின் இரண்டு புறத்திலும் மிகவும் பெரிய இரண்டு கல்ஸ்தம்பங்கள் உள்ளன. தென்மேற்கே செல்லும்போது மன்னார் விரிகுடாவைக் கடந்து செல்லவேண்டும். விடியற்காலம் நாம் கவனிப்போமானால் தென்ன மரங்கள் நிறைந்த தாழ்வான சமவெளியும் நீல நிறமான மலைகளும் வெகுதூரத்துக்கு அப்பால் தெரியும். அந்த மலைகளுக்கு மேற்குத்தொடர்ச்சி மலையென்று பெயர். நமக்கு எதிரேயுள்ளது **தூத்துக்குடி**யிலுள்ள துறைமுகம். ராஜதானியில் சென்னைக்கு அடுத்தபடியான பெரிய துறைமுகம் அதுவே. கொழும்புக்கும் அதற்கும் விசேஷமான வியாபாரம் நடக்கிறது.

தூத்துக்குடியில் அரிசி மூட்டைகளையும் பருத்தி மூட்டைகளையும் ஏற்றிக்கொண்டு போவதற்காக அநேகம் கப்பல்கள் நிற்கின்றன. நம்முடைய கப்பலிலிருந்து அநேகம் கோணி மூட்டைகளைக் கரைக்குப் படகுகளில் அனுப்புவோம். தென்மேற்காக நம்முடைய கப்பலைச் செலுத்திக்கொண்டு போனால் கன்னியாகுமரிக்குப் போய்ச் சேரலாம். பிறகு அதனைச் சுற்றிக்கொண்டு வடக்கே திரும்புவோமானால் மலையாள தீரத்தைப் பார்க்கலாம்.

**மேலைச்சமுத்திரதீர வெளி வழியாகச் செய்யும் பிரயாணம்.** இதுவரையில் கிழக்குக் கடலோரமாகப் பிரயாணம் செய்தோம். இனி நாம் பிரயாணம் செய்யும் இடத்திற்கும் கிழக்குத் தீர வெளிக்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. கடற்கரைகள் அநேக இடங்களில் பாறை நில தூரத்தில் உன்னதமான மலைகள் காணப்படுகின்றன. அவைகளே மேற்குத்தொடர்ச்சி மலையாகும்; அந்த மலைகள் மேலைசமுத்திரதீர வெளி முழுவதிலும் பரவியுள்ளன. அவை கிழக்குத் தொடர்ச்சி மலையைக்காட்டிலும் உயரமானவை.

கடல் பக்கமாக உள்ள மலைச் சரிவுகளில் காடுகள் நெருக்கமாக உண்டு. இதற்குள்ள காரணத்தை நாம் முன்னமே படித்திருக்கிறோம். மழைக் காலத்தில் அந்தப்பக்கம் முழுவதும் ஒரே வெள்ளமாக இருக்கும். பருவக்காற்று அடிக்கும்போது நாம் நம்முடைய பிரயாணத்தை வைத்துக்கொள்வோமானால் தென்மேற்கிலிருந்து ஒரு பலமான காற்று நம்மை நோக்கி வீசியடிப்பதோடு கரிய மேகங்களையெல்லாம் நிலத்தில் கொண்டு சேர்க்கும். அந்தக் காற்றினால் கடல் மிகவும்

கொந்தளிக்கும். அலைகள் மிக்க பலத்தோடு கரையை மோதும். அதனால் பருவக்காற்று அடிக்கும் காலங்களில் கப்பல்களும் செம்படவர்கள் ஏறிச் செல்லும் தோணிகளும் அந்தப் பக்கத்தில் குறைவாக இருக்கும். பருவக்காற்று அடிக்காவிட்டால் நாம்கொல்லம், ஆலப்புழி, கொச்சி, கள்ளிக்கோட்டை, தலைச்சேரி, கண்ணனூர், மங்களூர் முதலான இடங்களில் தங்கிவிட்டுப் போகலாம்.

ஒவ்வொரு துறைமுகத்திலும் கப்பல்களுக்குத் தோணிகள் அளவற்ற சாமான்களைக் கொண்டு வந்து சேர்க்கின்றன. சந்தனமரம், தேக்கு, தேயிலை, காபிக்கொட்டை, ஏலம், மிளகு, சுக்கு, ரப்பர் முதலானவை இவைகளுள் முக்கியமானவை. அந்தப் பக்கத்தில் தேங்காய் விசேஷமாகக் கிடைப்பதால் ஒவ்வொரு கப்பலிலும் தேங்காயும், கொப்பரையும், தேங்காயெண்ணெயும் தேங்காய்நார்க் கயிறுகளும், தேங்காய்நார் மெத்தைகளும் நிறைந்திருக்கும். இவைகளெல்லாம் இங்கிலாந்துக்கும், மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும், வேறு பல தேசங்களுக்கும் போகின்றன.

மேற்குத்தீர வெளியிலிருந்து 100 மைலுக்கப்பால் **லக்ஷத்தீவு** என்று ஒரு தீவு இருக்கிறது. மேற்கு வெளியிலுள்ள எந்தத் துறைமுகத்திலிருந்தும் அதற்கு நாம் போகலாம். அதில் அநேகம் சிறு தீவுகள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் தென்னந் தோப்புகள் விசேஷம். அங்கேயுள்ள ஜனங்கள் தேங்காய்நார் எடுத்தும், மீன் பிடித்தும் ஜீவனம் செய்கிறார்கள். அவர்கள் தேங்காய்களையும், கயிற்றையும், கொப்பரையையும், ஆமையோட்டையும் ஏற்றுமதி செய்து அவற்றிற்குப் பதிலாக அரிசியை வருவித்துக்கொள்ளுகிறார்கள். அவர்களில் சொற்ப ஜனங்களுக்கே எழுதவும் படிக்கவும் தெரியும்.

மேலைத்தீரத்தில் நாம் கடைசியாக இறங்கி நிற்கக்கூடிய துறைமுகம் மங்களூர். அதுவரையில் தான் நமது மாகாணம் பரவியிருக்கிறது. அதற்கு அப்பால் உள்ள இடம் பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்தது. கொஞ்சதூரம் மங்களூரிலிருந்து நாம் பிரயாணம் செய்வோமானால் பம்பாய் நகரத்தை அடையலாம். கடற்கரையின் அருகே உன்னதமான மலைகள் பரவியிருப்பதை நாம் பிரயாணம் செய்கையில் பார்க்கலாம். பம்பாயில் உள்ள துறைமுகமானது சென்னையிலும், கொழும்பிலும் உள்ள துறைமுகங்களைக் காட்டிலும் மிகவும் பெரியது. இந்தியாவில் அது மிகவும் அழகான இடம். இயற்கையிலேயே கப்பல்கள் வந்து தங்குவதற்கு அது மிகவும் அனுகூலமானது. அலைகளின் பலத்தை அணைகள் தடுக்கின்றன. அணைக்குள் அடங்கிய சமுத்திரம் அமைதியாகவும், ஆழமாகவும் இருக்கிறது. அதனால் கரைக்கு மிகவும் சமீபத்தில் கப்பல்கள் சிறிதும் பயமின்றித் தங்கலாம்.

ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வரும் கப்பல்கள் எல்லாம் பம்பாய்க்குத்தான் முதல் முதலில் வரவேண்டும். படத்தைப் பார்த்தால் இவ்விஷயம் நன்றாகத்தெரியும். அதனால் பம்பாய் நகரத்தை இந்தியாவின் சமுத்திரவாசல் என்று சொல்லுவதுண்டு.

பம்பாயிலிருந்து இரண்டு மூன்றுநாள் பிரயாணம் செய்து வட மேற்கே போனால் **கராச்சி** என்னும் பட்டணத்தை அடையலாம். அங்கிருந்து பார்க்கும்போது பெலுசிஸ்தானத்திலிருந்து இந்தியாவைப் பிரிக்கும் பெரிய மலைகள் வெகு தூரத்துக்கப்பால் கண்ணுக்குத் தெரியும். இதனோடு இந்தியாவின் கடலோரமாகச் செய்யும் பிரயாணம் முடிவாகும். படத்தைப் பார்த்தால், கடலோரமாக உள்ள இடங்களில் அநேகம் சென்னை ராஜதானியில் அடங்கியவை என்பது தெரியும்.

## 18. பிறதேச யாத்திரை.

இதுவரையில் இந்தியாவின் கடலோரமாகச் செய்துவந்த பிரயாணத்தைப்பற்றிச் சொல்லி வந்தோம். இதேமாதிரி உலகத்திலுள்ள மற்ற இடங்களுக்கும் போய்வரலாம். கள்ளிக்கோட்டை அல்லது மங்களூரில் கப்பலில் ஏறினால் இந்து மகாசமுத்திரத்தின் வழியாக நேரே ஆபிரிகா என்னும் பெரிய கண்டத்தின் ஓரத்துக்குப் போய்ச் சேரலாம். கப்பல் வேகமாகச் சென்றால் ஒரு வாரத்தில் ஆபிரிகாவுக்குப் போகலாம். ஆபிரிகா கண்டத்தில் பெரும்பாலும் விரிகுடாக்களே இல்லை யென்பது படத்தினால் தெரியும். கண்டத்தின் மத்தியபாகம் மிகவும் உஷ்ணமான பிரதேசம். அங்கே மழையும் விசேஷமாகப் பெய்வதால் காடுகள் நிறைந்திருக்கின்றன.

இந்தியாவில் உள்ள நதிகளைக் காட்டிலும் சில பெரிய நதிகள் ஆபிரிகாவில் உள்ளன. அவற்றிற்கு வேண்டிய ஜலம் மழையினால் கிடைக்கிறது. வடபாகத்தில் மழை பெய்வதில்லை. காடுகளுக்குப் பதிலாக அங்கே விசாலமான பாலைவனம் ஒன்றுண்டு. அதற்கு, 'சகாரா' என்று பெயர். அது பாறையும் மணலும் நிறைந்த இடம். அவ்வளவு பெரிய பாலைவனம் உலகத்தில் வேறே இல்லை. இந்தியாவைக்காட்டிலும் அது விஸ்தீரணத்தில் பெரியது. ஆபிரிகாவில் வசிப்பவர்களில் அநேகர் நீகிரோ ஜாதியார்கள்.

இந்தியர்களுக்கும் அவர்களுக்கும் அதிக வித்தியாசம் உண்டு.

மேற்கே இந்துமகா சமுத்திரத்தின் வழியாகப் போகாமல் ஆசியாவிலிருந்து ஆபிரிகாவைப் பிரிக்கும் குறுகலான **செங்கடல்** வழியாகவும் நாம் பிரயாணம் செய்யலாம். செங்கடலின் வட கோடியில் **சூயஸ்** கால்வய் என்ற ஒரு கால்வாயை நாம் கடந்து செல்லவேண்டும். ஆபிரிகாவை ஆசியாவோடு சேர்க்கிற ஒரு பூசந்தி இருக்கிறது. அந்த இடத்தை ஆழமாகத் தோண்டிக் கப்பல்கள் போகும்படியாகச் செய்திருக்கிறார்கள். அவ்வாறு தோண்டப்பட்ட இடத்துக்குத்தான் சூயஸ் கால்வாய் என்று பெயர். அது எகிப்து தேசத்தில் இருக்கிறது. அந்த நாட்டில் நைல்நதி ஓடுகிறது. அந்தக் கால்வாயைத் தாண்டினால் நாம் மத்திய தரைக்கடலுக்குப் போய்ச் சேருவோம். அந்தக் கடல் ஐரோப்பாவிலிருந்து ஆபிரிகாவைப் பிரிக்கிறது. அதன் ஓரமாக மேற்கே சென்றால் ஐரோப்பிய நாடுகளாகிய கிரீஸ், இதாலி, பிரான்ஸு, ஸ்பெய்ன் என்பவற்றை நாம் பார்க்கலாம்.

ஸ்பெயினுக்கு அப்பால் குறுகலான ஒரு ஜலசந்தி இருக்கும். அதன் வழியாகச் சென்றால் அட்லாண்டிக் மகாசமுத்திரத்துக்குப் போகலாம். அங்கிருந்து வடக்குநோக்கிப் போனால் பிரிட்டிஷ் தீவுகளைப் பார்க்கலாம். அவைகள் பிரான்ஸிலிருந்து குறுகலான ஒரு ஜலசந்தியால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் தீவுகளிலிருந்து வடகடலைத் தாண்டிக் கிழக்குமுகமாகச் சென்றால் பால்டிக் கடலை அடையலாம். அந்தக் கடலின் ஓரமாக ஜர்மனியும், ரஷியாவும், ஸ்வீடனும் இருக்கின்றன.

பூமியின் படத்தில் அட்லாண்டிக் மகாசமுத்திரத்தைக் கவனித்துப்பார். ஆபிரிகாவும் ஐரோப்பாவும் அதன் கிழக்குக் கரைகளாக இருக்கின்றன. புதிய உலகம் மேற்குக் கரையாக இருக்கிறது. நல்ல கப்பலில் ஏறிச் செல்வோமானால் ஐரோப்பாவிலிருந்து அட்லாண்டிக் மகாசமுத்திரத்தின் வழியாகப் புதிய உலகத்துக்குப் பத்து நாளில் போய்விடலாம். புதிய உலகத்தில் **வட அமெரிகா, தென் அமெரிகா** என்னும் இரண்டு கண்டங்கள் அடங்கியுள்ளன. அவை மிகவும் பெரியவை. **பனமா** என்னும் பூசந்தி அவற்றை ஒன்று சேர்க்கின்றது. அந்த இடத்தில் அட்லாண்டிக் மகாசமுத்திரத்திலிருந்து பசிபிக் மகாசமுத்திரத்துக்கு ஒரு கால்வாய் ஆழமாக வெட்டப்பட்டிருக்கிறது.

புதிய உலகத்தில் வசிப்பவர்கள் ஐரோப்பாவிலிருந்தும் ஆபிரிகாவிலிருந்தும் அட்லாண்டிக் மகாசமுத்திரத்தின் வழியாக வந்தவர்கள். வட அமெரிகாவில், **கன்னடா, ஐக்கிய மாகாணங்கள், மெக்ஸிகோ** என்னும் மூன்று தேசங்கள் இருக்கின்றன. கன்னடா ஒரு செழிப்பான பிரதேசம். இந்தியாவைப்போலவே அதுவும் ஆங்கிலேய ராஜ்யத்தைச் சேர்ந்தது. ஐக்கிய மாகாணங்கள் என்று சொல்லப்படும் பிரதேசம் உலகத்திலுள்ள தேசங்களுள் மிகவும் பெரியது. மற்ற நாடுகளைக் காட்டிலும் அதிகமான செல்வமும் உடையது.

தென் அமெரிகாவில் சிறியவைகளும் பெரியவைகளுமான பல தேசங்கள் உண்டு. அவற்றுள் மிகவும் பெரியது **பிரேஸில்** நாடு. இந்தியாவைக்காட்டிலும் அது மிகவும் பெரியது. உலகத்தில் மிகவும் பெரிய நதியாகிய **அமேஸான்** என்பது அந்த நாட்டின் வழியாகத்தான் போகிறது. இந்தியாவிலுள்ள நதிகள் எல்லாம் சேர்ந்து கடலுக்குள் எவ்வளவு ஜலத்தைக்கொண்டு சேர்க்குமோ அவ்வளவு ஜலத்தை அந்த ஒரே நதி சேர்த்துவிடுகிறது. இதனால் அந்தப் பக்கத்தில் மழை அதிகமாகப் பெய்கிறதென்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

புதிய உலகத்தில் மேற்குத் தீர் வெளியில் மலைகள் மிகவும் உயரமாகவும் அடர்ந்தும் இருக்கின்றன. மேற்குத் தீரத்தில் உள்ள மலைகளுக்கு **ஆண்டிஸ்** என்று பெயர். இமயமலைகளைக் காட்டிலும் அவைகள் நீளமாக இருந்தாலும் இமய மலைகளைப்போல் அவ்வளவு உயரமாக இல்லை. புதிய உலகத்தின் மேற்கே மிகவும் விசாலமான பசிபிக் மகாசமுத்திரம் இருக்கிறது. சமுத்திரங்களிலெல்லாம் மிகவும் பெரியது அதுவே. அதில் பல சிறு தீவுகள் உண்டு. அந்தச் சமுத்திரத்தைத் தாண்டிச் சென்றால் ஆசியா கண்டத்தின் கிழக்குப் பக்கத்தை நாம் பார்க்கலாம்.

இந்தியாவிலிருந்து பசிபிக் மகாசமுத்திரத்துக்கு நாம் வேறொரு குறுக்குப்பாதை வழியாகவும் போகலாம். சென்னையிலிருந்து வங்காளக் குடாக்கடலைத் தாண்டிக் கிழக்கே செல்வோமானால் **மலாகா** என்னும் குறுகலான ஜலசந்தியைக் கடப்போம். ஆசியாவின் கிழக்குத் தீரத்தின் ஓரமாகச் சென்றால் மிகவும் விநோதமான நாடாகிய **சைனாவைப்** பார்க்கலாம். சைனாவில் இருப்பவர்கள் இப்போது மிக்க நாகரிகத்தை அடைந்துவிட்டார்கள்; அவர்கள் செவ்வையாக உழைப்பவர்கள். மறுபடியும் கிழக்கே போவோமானால் ஜப்பான் தீவுகள் அடங்கிய பிரதேசத்தைப் பார்க்கலாம். இந்தியாவிலிருந்து மேற்கு முகமாகச் சென்றாலும் கிழக்கு முகமாகச் சென்றாலும் ஐரோப்பாவுக்குப் போக நாம் பூமியைச்

சுற்றியே பிரயாணம் செய்யவேண்டும் என்று இதனால் தெரிந்துகொள்ளலாம்.

இந்தியாவிலிருந்து கப்பலில் ஏறிச்செல்லாமல் தரை மார்க்கமாகவும் போய் ஆசியாவிலுள்ள மற்ற இடங்களை நாம் பார்க்கலாம். இமயமலையைக் கடந்தால் திபேத் என்னும் உயரமான பீடபூமிக்குப்போய்ச் சேரலாம். அது தக்காண பீடபூமியைக்காட்டிலும் மிகவும் உயரமானது. அதற்கு அப்பால் சைபீரியா என்னும் பெரிய தேசம் இருக்கிறது. ஆசியாவின் வடபாகம் முழுவதிலும் அது பரவியிருக்கிறது. அது ரஷியாவைச் சேர்ந்தது. சைபீரியாவின் வடகோடியில் உத்தர மகாசமுத்திரம் உள்ளது. அதில் பனிக்கட்டிகள் நிறைந்திருக்கும். சைபீரியாவின் வழியாக மேற்கிலிருந்து கிழக்கே ஒரு நீளமான இருப்புப் பாதை செல்லுகிறது. அதன் வழியாகக் கிழக்கே சென்றால் சைனாவுக்கும் மேற்கே சென்றால் ரஷியாவுக்கும் போகலாம்.

சென்னையிலிருந்து வங்காளக்கடலைக் கடந்து மூன்று தினங்கள் பிரயாணம் செய்தால் பர்மா தேசத்தின் பிரதான நகரமான ரங்கூனைப் பார்க்கலாம். நம்முடைய மாகாணத்தைப்போலவே பர்மாவும் இந்தியாவில் அடங்கியது. அது கவர்னர் ஜனரலுடைய ஆட்சிக்கு உட்பட்டது. ரங்கூனிலிருந்து ஐராவதி என்னும் நதியின் வழியாகப் பர்மாவின் மத்திய பாகத்துக்குப் போகலாம்.

இந்தியாவிலிருந்து சுலேமான் மலைகளைக் கடந்து அதிகநாள் பிரயாணம் செய்தால் ஆப்கானிஸ்தானம், பலூசிஸ்தானம், பாரசீகம், அரேபியா என்னும் தேசங்களைப் பார்க்கலாம். அவைகள் வளமான தேசங்களல்ல. அந்த மார்க்கத்தில் நல்ல சாலையாவது இருப்புப்பாதையாவது இல்லை; அதனால் ஒட்டகங்களின்மேல் ஏறித் தான் பிரயாணம் செய்யவேண்டும்.

உலகத்தில் இதுவரையில் பாராத பிரதேசம் வேறொன்று இருக்கிறது. அதற்கு ஆஸ்திரலேஷ்யா என்று பெயர். இந்தியாவிலிருந்து வெகுதூரம் தென்கிழக்கே பிரயாணம் செய்தால் அவ்விடத்துக்குப் போய்ச் சேரலாமென்று படத்தினால் தெரிகிறது. அது மிகவும் சிறிய கண்டமாக இருந்தாலும் எல்லாத் தீவுகளைக்காட்டிலும் பெரியது. அதன் மத்தியபாகம் ஒரு பாலைவனம்; கடலோரமாக உள்ள இடங்கள் செழிப்பானவை. அது ஆங்கிலேய ராஜ்யத்தைச் சேர்ந்தது. அதற்குத் தென்கிழக்கே பசிபிக் மகாசமுத்திரத்தில் உள்ள நியூஸிலாந்தும் ஆங்கிலேய ராஜ்யத்தைச் சேர்ந்தது.

எல்லாப் பிரதேசங்களையும் இப்போது பார்த்தாயிற்று. அவைகளைப்பற்றி இந்தப் புஸ்தகத்தில் விசேஷமாக ஒன்றும் எழுதவில்லை. மேல் வகுப்பில் எல்லாவற்றையும் விவரமாகப் படிக்கலாம். ஆனால் ஒரு விஷயம்மட்டும் நமக்குத் தெரியும். மற்ற இடங்களின பூகோளசாஸ்திரத்தை நாம் படித்தாலும் இந்தப் புஸ்தகத்தில் நாம் என்ன என்ன விஷயங்கள் படிக்கிறோமோ அதேமாதிரியான விஷயங்களே மற்ற இடங்களைப்பற்றியும் இருக்குமென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். கண்டங்களைப்பற்றியும், ஒவ்வொரு கண்டத்திலுள்ள தேசங்களைப்பற்றியும், அங்கங்கே உள்ள ஜனங்களைப்பற்றியும் அவர்களுடைய ஜீவனோபாயங்களைப்பற்றியும். சமவெளிகள், பள்ளத்தாக்குகள், மலைகள், ஆறுகள் ஆகிய இவற்றின் உபயோகங்களைப்பற்றியும், அங்கங்கே விளையும் பொருள்களைப் பற்றியும், கைத்தொழில்களைப் பற்றியும், நகரங்கள், துறைமுகங்கள், இருப்புப் பாதைகள் முதலியவற்றைப் பற்றியும், ஒரு தேசத்துக்கும் மற்றொரு தேசத்துக்கும் நடந்துவரும் வியாபாரத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ளலாம்.

இந்த விஷயங்களையெல்லாம் நாம் தெரிந்துகொண்டாலும் பூகோளசாஸ்திரம் முழுவதையும் நாம் தெரிந்துகொண்டதாக ஏற்படாது. நம்முடைய மாகாணம் இந்தியாவின் ஒரு பாகம். இந்தியா ஆசியாவின் ஒரு பாகம். ஆசியாவோ பூமியிலுள்ள கண்டங்களுள் ஒன்று. கடவுளால் படைக்கப்பட்ட அண்டகோளத்தில் பூமி ஒரு பாகமாகும். நம்முடைய உலகத்திலிருந்து வேறு இடங்களுக்குப் போக முடியாது. ஆனால் நமக்கு வெகு தூரத்துக்கு அப்பாலுள்ள சூரிய மண்டலத்தையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் கண்ணால் பார்க்கலாம்.

## படத்தைப்பற்றிய விஷயங்கள்.

உபாத்தியாயர்களுக்குக் குறிப்பு: மாணுக்கர்கள் தங்கள் ஞானத்தை விருத்தி செய்து கொள்ளும்பொருட்டும் பலவிதமான படங்களையும் நன்ருகத் தெரிந்து கொள்ளும் பொருட்டும் இங்கே பல கேள்விகள் குறிக்கப்பட்டுள்ளன. இங்கே உள்ள படங்கள் எட்டும் ஒரே ஸ்கேலில் (அளவில்) எழுதப்பட்டவை. இங்கே யுள்ள கேள்விகளையல்லாமல் உபாத்தியாயர்கள் தங்களுக்குத் தெரிந்த வேறுபுதிய கேள்விகளையும் மாணுக்கர்களைக் கேட்கலாம்.

திசைகள் என்ருல் என்ன என்னும் விஷயத்தை மாணுக்கர்கள் முதலில் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். திசையறி கருவியை (Compass) இதற்காக உபயோகிக்கவேண்டும். ஒரு படத்தின்மேல் அதை வைத்துப் பார்த்தால் திசைகளையெல்லாம் சுலபமாக அறிந்துகொள்ள லாம். முதலில் அந்தக் கருவியிற் குறித்திருக்கும் முக்கியமான எட்டுத் திசைகளையும் மாணுக்கர் கள் தெரிந்துகொண்டால் பிறகு பள்ளிக்கூடத்திலுள்ள பொருள்கள், விளையாடும் நிலத்திலுள்ள பொருள்கள், சுற்றியுள்ள பொருள்கள் ஆகிய இவைகள் இருக்கும் திசைகளை அறிந்துகொள்ள லாம். நாளடைவில் இந்தப் பழக்கத்திஞல் அவர்கள் படத்தைப் பார்த்து மலைகள் ஆறுகள் கடற் கரை முதலிய இடங்கள் பள்ளிக்கூடத்துக்கு இன்னபக்கத்தில் உள்ளன என்பதைச் சொல்லக் கூடும். மாணுக்கர்கள் தாங்கள் நிற்குமிடத்தில் இருந்தே கையை நீட்டி ஒவ்வொன்றும் உள்ள திக்கைக் காட்டிஞல் பழக்கம் செவ்வையாக ஏற்படும். அப்போதுதான் படங்களின் உபயோகம் அவர்களுக்கு நன்ருக விளங்கும். படத்தைப் பார்த்தமாத்திரத்தில் ஓர் இடத்தின் முக்கியமான விஷயங்களெல்லாம் அவர்களுடைய மனத்தில் பதிந்துவிடும்.


வ
மே
கி
தெ
№ 1.
மழையின் அளவைத் தெரிவிக்கும் படம்
அதிக கறுப்பான இடத்தில் அதிக மழை
மைல் காட்டும் அளவு
100 50 0 100

224541


ருஷிகுல்யா
வம்சதாரா
லங்குலியா
கோதாவ
கிருஷ்ணா
துங்கபத்திரா
பெண்ணாறு
பாலாறு
பொண்ணையாறு
காவேரி
வைகை
தாமிரபரணி
வ
மே
கி
தெ
நெ.2.
ஆற்றுப்பாய்ச்சலுள்ள
இடங்களை
தெரிவிக்கும்படம்
மைல் காட்டும் அளவுகோல்
100 50 0 100
தண்ணீர் பாயும் இடங்கள்
கறுப்பாகவுள்ளன.




வ
மே
கி
தெ
No. 3
முக்கியமான விளைபொருள்களையும்
காடுகளையும் தெரிவிக்கும் படம்
மைல் காட்டும் அளவு
100 50 0 100
1. சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காசோளம்
உளுந்து, துவரை, பயறு.
2. நெல்
3. பருத்தி
4. மலைக்காடுகள்


நெ.4.
ஜனத்தொகையைத்தெரிவிக்கும படம்
மைல்காட்டும்அளவுகோல்
100 50 0 100
அதிக ஜனநெருக்கமுள்ளது
ஜன நெருக்கமுள்ளது
ஜன நெருக்கமில்லாதது
—பட்டணங்கள்—
5,00,000 ஜனங்களுக்கு மேற்பட்டவை
1,00,000 " "
50,000 " "
20,000 " "
ஜில்லாவின் எல்லைகள்
வ
மே
கி
தெ
20
15
10
75
80




வ
மே
கி
தெ
№ 5.
முக்கியமான பாஷைகள் வழங்கும் இடங்களைத் தெரிவிக்கும் படம்
மைல் காட்டும் அளவு
100 50 0 100
1. தமிழ்
2. தெலுங்கு
3. கன்னடம்
4. மலையாளம்
5. உரியா
6 துளுவும் கொங்கணமும்
7 மலைவாசிகளுடைய பாஷைகள்
ஜில்லாவின் எல்லைகள்





நெ. 6.
ஜில்லாக்களைத்தெரிவிக்கும் படம்


நெம்பர். 7.
சென்னை ராஜதானி
(இருப்புப்பாதைகளைக் காட்டும் படம்)
பெரிய ரெயில்
சின்ன ரெயில்
நாகப்பூர்
சண்டா
கோதாவரி நதி
பர்ஹாம்பூர்
பார்வதிபுரம்
விஜயநகரம்
விசாகபட்டணம்
ஹைதராபாத்து
ராஜமகேந்திரம்
வாடி
பெஸ்வாடா
மசூலிப்பட்டணம்
கிருஷ்ணா நதி
கர்நூல்
மர்மகோவா
குந்தக்கல்
கடப்பை
நெல்லூர்
ஷிமுகா
மை
சூ
ர்
பெங்களூர்
சென்னை
செங்கற்பட்டு
மங்களூர்
மைசூர்
நஞ்சன்கோடு
கண்ணனூர்
சேலம்
உதகமண்டலம்
கள்ளிக்கோட்டை
போதனூர்
காவேரி
பொள்ளாச்சி
நாகப்பட்டணம்
மதுரை
கொல்லம்
திருவனந்தபுரம்
கொழும்பு
காலி


மே
கி
தெ
நெம்பர்.8.
சென்னை ராஜதானி
ஸ்தூலரூபம்
(அப்பியாசங்களுக்கு.)
மைல் காட்டும் அளவுகோல்.
100 50 0 100


M.P.H.


நெம்பர் ௰.
சென்னை ராஜதானி
(இயற்கையமைப்புப்படம்)
மைல் காட்டும் அளவுகோல்.
குறிப்பு அட்டவணை.
ராஜ. ராஜமகேந்திரம்
அன. அனந்தபுரம்
ஹி. ஹிந்துபுரம்
பங். பங்களூர்
மை. மைசூர்
காஞ். காஞ்சீபுரம்
சே. சேலம்
ஈ. ஈரோடு
கோய. கோயம்புத்தூர்
பா.க. பாலக்காட்டுக்கணவாய்
உ. உதகமண்டலம்
தொ. தொட்டபெட்டா
சோ. சோரனூர்
எர் எர்ணாகுளம்
ஆ.மு. ஆனைமுடி
திண். திண்டுக்கல்
கோ. கோடைக்கானல்
திச். திருச்சிராப்பள்ளி
கும். கும்பகோணம்
தி.நெ. திருநெல்வேலி
ராமே. ராமேசுவரம்
தநு. தநுஷ்கோடி
பம்பாய்
அரபிக்கடல்
வங்காளக் குடாக்கடல்.
மர்மகோவா
உடுப்பி
மங்களூர்
கண்ணனூர்
தலைச்சேரி
கள்ளிக்கோட்டை
கொச்சி
கொல்லம்
திருவனந்தபுரம்
கன்னியாகுமரிமுனை
தூத்துக்குடி
தாம்பிரபர்ணி
மன்னார்குடா
இலங்கைத்தீவு
கொழும்பு
நீலகிரி
மதுரை
பாக்ஸ் ஜலசந்தி
நாகபட்டணம்
புதுச்சேரி
கூடலூர்
சென்னபட்டணம்
பழவேற்காட்டுத்தீவுகள்.
பழவேற்காட்டேரி
பல்லாரி
கர்நூல்
பெஸ்வாடா
காகிநடா
விஜயநகரம்
பிமிலிபட்டணம்
விசாகபட்டணம்

## படம் 1. மழை.

1. சென்னை ராஜதானியில்வருஷந்தோறும்எந்தப்பாகத்தில அதிக மழை பெய்கிறது? ஏன் அந்தப் பாகம் அவ்வளவு குறுகலாக இருக்கவேண்டும்? இயற்கையமைப்புப் படத்தைப் பார்த்து அந்தப் பாகம் சமமாக இருக்கிறதா, மலைப்பிரதேசமாக இருக்கிறதா அல்லது இரண்டு விதமாகவும் இருக்கிறதா என்பதைத் தெரிவிக்க. ஜில்லாக்கள் படத்தை (6) ப்பார்த்து எந்த ஜில்லாக்களும் சுதேச ராஜ்யங்களும் அந்தப்பாகத்தில் அடங்கியிருக்கின்றன என்பதைச்சொல்லுக. அதிக ஈரக்கசிவுள்ள இடத்தில் என்னதானியம் செவ்வையாக விளைகிறது? தானிய விளைவைப்பற்றிய படத்தை (3) ப்பார்த்து விடை சரிதானா என்று கவனிக்க. மழை அதிகமாகப் பெய்வதால் காடுகள் அதிகமாக வளருமா? 3–ஆவது படத்தைக்கொண்டு இதற்கு விடை சொல்லலாம்.

2. ராஜதானியின் எந்தப்பாகங்கள் அதிக வறட்சியுள்ள இடங்கள்? ஜில்லாக்களின் படத்தைக் கொண்டு எந்த எந்த ஜில்லாக்கள் இந்த வரிசையில் அடங்கும் என்பதைத்தெரிவிக்க. இப்படிப்பட்ட வறட்சியான இடங்களில் என்ன என்ன விளையும்? 3–ஆவது படத்தைப் பார்த்து விடை சரிதானா என்று பாருங்கள்.

3. மலையாளதீரத்திலிருந்து கிழக்கே போகப் போக ஏன் மழை குறைவாக இருக்கிறது. சோழமண்டலக் கரையிலிருந்து மேற்கே போகப்போக மழை மொத்தத்தில் குறைவா? அதிகமா? கோதாவரிக்கு வடக்கேயுள்ள ஜில்லாக்களில் அதன் தெற்கேயுள்ள ஜில்லாக்களைக்காட்டிலும் மழை அதிகமா? குறைவா? மேற்குக்கரையில் நதிகள் அதிகம் என்று நினைக்கிறீர்களா? கிழக்குக்கரையில் அதிகம் என்று நினைக்கிறீர்களா? காரணம் என்ன? பாசனத்தைப்பற்றிய படத்தை (2)ப் பார்த்து விடை சரிதானா என்று பாருங்கள். வங்காளக் குடாக்கடலில் விழும் நதிகள் அரபிக் கடலில் விழும் நதிகளைக்காட்டிலும் ஏன் நீளமாகவும் பெரியவைகளாகவும் இருக்கின்றன. கோதாவரி, கிருஷ்ணா, காவேரி இந்த நதிகளுக்கு வேண்டிய ஜலத்தைக் கொடுக்கும் மழை முக்கியமாக எங்கே பெய்கிறது? இந்த நதிகளின் டெல்டாக்களிலெல்லாம் அங்கங்கே பெய்யும் மழையினால் வேண்டிய ஜலம் கிடைக்கிறதா அல்லது வேறு இடங்களில் பெய்யும் மழையினால் கிடைக்கிறதா? ஜூலை ஆகஸ்டு மாதங்களில் பாலாறு, பெண்ணையாறு, பொன்னியாறு ஆகிய மூன்று நதிகளும் ஜலம் வறண்டிருக்கையில இந்த மூன்று டெல்டாக்களில்மட்டும் ஜலம் நிறைந்திருப்பதற்குக் காரணம் என்ன? கிருஷ்ணாவின் முக்கிய உபநதிகளுள் எந்த உபநதியாவது அதன் டெல்டாவிலேயே உற்பத்தியாகிறதா அல்லது வேறு இடத்தில் உற்பத்தியாகிறதா? விளக்கமாகச் சொல்லுக.

5. நீங்கள்வசிக்கும் ஊர் மிகவும் ஈரக்கசிவுள்ள இடமா, அல்லது நீர்வறண்ட பிரதேசமா? ஊற்று ஜலம் என்றால் என்ன என்பதை உங்கள் உபாத்தியாயரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். கோடைநாளில் எவ்வளவு ஆழம் தோண்டினால் நல்ல ஜலம் கிடைக்கும்? படத்தைப் பார்த்து, கிணறு வெட்டுவதாக இருந்தால் கோயம்புத்தூரில் அதிக ஆழம் தோண்டவேண்டுமா அல்லது செங்கற்பட்டில அதிக ஆழம் தோண்டவேண்டுமா என்பதைச் சொல்லுங்கள்.

6. கீழேயுள்ள பட்டணங்களை மழையினளவுப்படி வரிசைப்படுத்துக; மிகவும் கொஞ்சமாக மழை பெய்யும் பட்டணம் முதலிலும் மற்றவை அதற்கு அடுத்தபடியும் இருக்கவேண்டும்:—

ராஜமகேந்திரம், பல்லாரி, சென்னபட்டணம், கள்ளிக்கோட்டை.

சென்னபட்டணத்தில் பெய்யுமளவு மதுரையிலும் கர்நூலில் பெய்யுமளவு கும்பகோணத்திலும், காக்கிநாடாவில் பெய்யுமளவு கோயம்புத்தூரிலும், பல்லாரியில் பெய்யுமளவு பர்ஹாம்பூரிலும், கொச்சியில் பெய்யுமளவு கடப்பையிலும், தூத்துக்குடியில் பெய்யுமளவு நெல்லூரிலும் மழை பெய்கிறதா?

7. மேற்குத்தொடர்ச்சிமலையே நமது ராஜதானியில் இல்லையென்று வைத்துக்கொள்வோம். அப்போது மழை பெய்வதில் என்ன வித்தியாசம் ஏற்படும்? காரணத்துடன் விடை கூறுக.

8. மழைக்குறைவினால் பஞ்சம் உண்டாகிறது. சென்னை ராஜதானியில் எந்த இடங்களில் பஞ்சம் நேரிடக்கூடும்? உங்கள் சிநேகிதன் ஒருவன் க்ஷயரோகத்தினால் வருந்துகிறான். மிகவும் வறட்சியான இடத்தில் அவன் ஒரு வருஷம் இருக்கவேண்டுமென்று வைத்தியர்கள் சொல்லுவார்கள். அப்படியானால் அவனை நீங்கள் எங்கே போயிருக்கச்சொல்லுவீர்கள்? மலையாளதீரத்துக்கும் விடப்பட்ட ஜில்லாக்களுக்கும் சீதோஷ்ணஸ்திதியில் என்ன வித்தியாசம்? அந்த இரண்டு இடங்களுள் எங்கே இருக்க நீங்கள் விரும்புவீர்கள்? காரணஞ் சொல்லுக.

9. மழையை அளக்கும்விதம் எப்படி? மழையை அளக்கும் யந்திரம் இன்னதென்பதை உங்

கள் உபாத்தியாயரைக் கேட்டுத் தெரிந்துகொள் ளுங்கள். அந்த யந்திரம் உள்ள இடத்துக் கும் உங்கள் பள்ளிக்கூடத்துக்கும் எவ்வளவு தூரம்?

## படம் 2. பாசனம்.

நமது ராஜதானியில் பாசனவிஷயமாகச் செய் திருக்கும் விசேஷமான ஏற்பாடுகளை யெல்லாம் இந்தப் படம் தெரிவிக்கிறது. ஆனால் இதில் ஏரி களையும் கிணறுகளையும் காட்டவில்லை. ஆயிரக் கணக்கான ஏரிகளும் கிணறுகளும் நமது மாகா ணத்தில் உண்டு.

1. முக்கியமாகப் பாசன வசதிகளுக்கு வேண் டிய ஜலத்தைக் கொடுக்கும் நதிகள் யாவை? பாச னத்துக்குச் செய்திருக்கும் கட்டிடங்களுள் மிக வும் பெரியவை யாவை? தானிய விளைவுப் படத் தை (3) ப் பார்த்து ஜலம் பாயும் இடங்களில் எந் தத்தானியம் அதிகமாக விளைகிறதென்பதைச் சொல்லுக.

2. பாசன சம்பந்தமான கட்டிடங்களெல்லாம் பெரும்பாலும் தாழ்வான சமவெளியில் உள் ளன. இந்தப் படத்தைத் தானிய விளைவுப் படத் தோடு ஒப்பிட்டு இந்த விஷயம் சரிதானாவென்று சொல்லுக.

3. மேலைத்தீர வெளியில் பாசன சம்பந்தமான கட்டிடங்கள் ஏன் இல்லை?

4. பாலாறும், பெண்ணையாறும் பெரிய நதிக ளாக இருந்தும் அதிக ஜலத்தைச் சமுத்திரத்துக் குக் கொண்டுபோகவில்லை; அதற்கு என்ன கார ணம்? படத்தைப் பார்த்துச் சொல்லுக.

தாமிரபரணி சிறிய நதியாக இருந்தும் மிக வும் முக்கியமாக எண்ணப்படுவது ஏன்?

. மழையின் அளவைத் தெரிவிக்கும் படத் தை (1)ப் பார்த்து, கடப்பை—கர்நூல் கால்வாயா னது எந்தப் பிரதேசத்தின் வழியாகப் போகிற தென்பதைச் சொல்லுக. அது நீர்வறண்ட இட மா? அல்லது ஈரக்கசிவுள்ள இடமா? பக்கிங்காம் கால்வாய் சென்னபட்டணத்துக்குத் தெற்கி லிருந்து கடலோரமாகக் கோதாவரி நதிவரை யில் போகிறது. அதன் ஜலம் பாய்ச்சலுக்கு உபயோகப்படுகிறதா? காரணஞ் சொல்லுக.

6. பாசனத்துக்காக அமைத்திருக்கும் பெரி யாறு அணைக்கட்டைப்பற்றித் தெரிந்ததைச் சொல்லுக.

7. அணைக்கட்டின் உபயோகங்கள் யாவை? கோதாவரி, கிருஷ்ணா, காவேரி இந்த நதிகளுக்கு எந்த இடங்களில் பெரிய அணைக்கட்டுகள் கட் டப்பட்டிருக்கின்றன? ஏரி யென்றால் என்ன? அதற்கும் அணைக்கட்டுக்கும், அதற்கும் கிணற் றுக்கும் என்ன வித்தியாசம்?

## படம் 3. தானியங்களும் காடுகளும்.

நமது ராஜதானியிலுள்ள முக்கியமான காடு களையும் விளை பொருள்களையும் இந்தப் படம் தெரிவிக்கிறது. ஆனாலும் கரும்பு, அவுரி, எண் ணெய்விதைகள், புகையிலை, தேயிலை, காபி, தென்னை முதலியவைகளை இந்தப் படத்தில் காட்டவில்லை. நெற்பயிருக்குப் போதுமான ஜலம் இல்லாத இடங்களிலெல்லாம் நமது மாகா ணத்தில் அவுரி, கரும்பு, எள்ளு, நிலக்கடலை முதலியவற்றைப் பயிரிடுவார்கள். மதுரை, கோ யம்புத்தூர் ஜில்லாக்களிலும் கோதாவரியி லுள்ள லக்ஷத்தீவுகளிலும் புகையிலை முக்கிய மாகப் பயிராகிறது. நீலகிரி, ஆனைமலை, பழனி இந்த இடங்களில் தேயிலையும் மேற்குத்தொடர்ச்சி மலையின் தாழ்வான சரிவுகளிலும் சேர்வராய மலையிலும் காபியும் பயிராகின்றன. கடலுக்குச் சமீபமான இடங்களில் தென்னைமரங்கள் செழிப் பாக வளரும். மலையாளதீரத்தில் தென்னைமரங் களை விசேஷமாகக் காணலாம்.

1. சென்னை ராஜதானியில் என்ன விளைபொ ருள்கள் விசேஷமாக இருக்கின்றன? ஒவ்வொன் றன் நிறமும் எப்படியிருக்கிறது?

2. எந்தப் பக்கங்களில் நெல் அதிகமாக விளை கிறது? மழையைத் தெரிவிக்கும் படத்தையும், பாசனத்தைப்பற்றிய படத்தையும் பார்த்து விடை கூறுக.

3. ஜில்லாக்களின் படத்தோடுஇந்தப் படத்தை ஒப்பிட்டு எந்த ஜில்லாக்களில் பருத்தி முக்கிய மாக உண்டாகிறதென்று சொல்லுக. இந்த விஷ யத்தை மழையைத் தெரிவிக்கும் படத்தைக் கொண்டு சொல்ல முடியுமா?

4. முக்கியமான காடுகளெல்லாம் எங்கேயுள் ளன? குன்றுகளிலா சமவெளிகளிலா, மழை மிகுதியாகப் பெய்யுமிடத்திலா குறைவாகப் பெய்யுமிடத்திலா? காரணத்துடன் விடை கூறுக.

5. 6—ஆவது படத்தோடு இந்தப் படத்தை ஒப் பிட்டு எந்த ஜில்லாவில் நெல் மிகுதியாக விளை கிறதென்று சொல்லுங்கள்.

6. உங்கள் ஊரிலுள்ள வயல்களில் என்ன தானியங்கள் பயிராகின்றன?

## படம் 4. ஜனத்தொகை.

உணவுப் பொருள்கள் மிகுதியாக உண்டாகும் இடங்களிலும், மழை அதிகமாகப் பெய்யுமிடங்களிலும், ஜலம் நன்றாகப்பாயுமிடங்களிலும் மலைகளில்லாத சமவெளிகளிலும் ஜனத்தொகை அதிகமாக இருக்கும்.

1. நமது ராஜதானியின் எந்தப் பாகங்களில் ஜன நெருக்கமென்று படம் தெரிவிக்கிறது? அந்தப் பாகங்கள் எந்த ஜில்லாக்களில் அடங்கியிருக்கின்றன? அவைகளில் ஜலம் செவ்வையாகப் பாய்கிறதா? அல்லது மழை நன்றாகப் பெய்கிறதா? (1, 2—ஆம் படங்களைப் பார்க்க).

2. கீழேயுள்ள இடங்களில் ஜனங்கள் குறைவாக இருப்பதற்கு என்ன காரணம்?

விடப்பட்ட ஜில்லாக்கள், கஞ்சம் விசாகப்பட்டணம் ஜில்லாக்களின் உள்பாகங்கள், நீலகிரி ஜில்லா.

3. சென்னபட்டணத்திலிருந்து மங்களூர் வரையில் குறுக்கே படத்தில் ஒரு கோடு இருப்பதாக நினைத்துக்கொள்வோம். அந்தக் கோட்டுக்கு வடக்கிலா அல்லது தெற்கிலா நகரங்கள் அதிகமாக இருக்கும்?

4. படத்தைப் பார்த்துச் சென்னபட்டணத்தின் ஜனத்தொகை இவ்வளவென்பதைத் தெரிவிக்க. லக்ஷத்துக்குமேற்பட்ட ஜனத்தொகையுள்ள மூன்று பட்டணங்களைச் சொல்லுக. அடியிற் குறிப்பிட்ட பட்டணங்களில் 50000 த்துக்கு மேற்பட்ட ஜனங்கள் வசிக்கிறார்கள். படத்தில் அந்தப் பட்டணங்களைக் குறிப்பிடுக.

| | |
|---|---|
| சென்னபட்டணம் | சேலம் |
| மதுரை | கூடலூர் |
| திருச்சிராப்பள்ளி | காகிநாடா |
| கள்ளிக்கோட்டை | காஞ்சிபுரம் |
| கும்பகோணம் | வேலூர் |
| தஞ்சாவூர் | ராஜமகேந்திரம் |
| நாகபட்டணம் | மங்களூர் |
| திருவனந்தபுரம் | கோயம்புத்தூர் |
| | பாளையங்கோட்டை |

5. விடப்பட்ட ஜில்லாக்களைக்காட்டிலும் தஞ்சாவூர், கோதாவரி, கிருஷ்ணா இந்த ஜில்லாக்களின் டெல்டாக்களில் ஜனத்தொகை ஏன் அதிகமாக இருக்கிறது? அவைகள் மிகவும் ஆரோக்கியமாக உள்ளனவா?

## படம் 5. பாஷைகள்.

1. அடியிற் குறிப்பிட்ட பாஷைகள் எந் எந்த ஜில்லாக்களில் வழங்குகின்றன?

தமிழ், தெலுங்கு, உரியா, கன்னடம், மலையாளம்.

2. தென்கன்னடம் ஜில்லாவில் என்ன பாஷைகள் வழங்கி வருகின்றன?

3. என்ன பாஷை மிகவும் விசாலமான தேசத்தில் வழங்கி வருகிறது?

4. 4—ஆவது படத்தோடு இந்தப் படத் ஒப்பிட்டு அதிக ஜனங்கள் என்ன பாஷை பேசுகிறார்கள் என்பதைச் சொல்லுக.

5. நமது ராஜதானியில் உரியாபாஷை பே பவர்கள் அதிகமா? மலையாளம் பேசுபவர்க அதிகமா?

6. எந்த ஜில்லாக்களிலும் சுதேச ராஜ்யங்க லும் கன்னடபாஷை வழங்கி வருகிறது? மைசூ ராஜ்யத்தில் ராஜபாஷை எது?

7. மேற்குத்தொடர்ச்சி மலையின் இரண் பக்கங்களிலும் ஒரேபாஷை வழங்கிவருகிறத அல்லது வேறு வேறுபாஷைகள் வழங்குகி றனவா?

8. தென்னிந்தியாவில் பிரெஞ்சு பாஷை யார் பேசுகிறார்கள்?

## படம் 6. ஜில்லாக்களும் நதிகளும்.

1. நமது ராஜதானியின் எல்லைக்கு, துங்கப திரா நதியும் கிருஷ்ணாவும் எவ்வளவுதூரம் உத கின்றன?

2. இந்த நதிகளின் வெளியே என்ன என் ஜில்லாக்கள் இருக்கின்றன?

3. பெண்ணையாறு, பாலாறு, பொன்னியா இவைகள் எந்த எந்த ஜில்லாக்களின் வழியா ஓடுகின்றன?

4. காவிரியாறு இரண்டு ஜில்லாக்களைப் பிரி கிறது; இரண்டு ஜில்லாக்களின் குறுக்கே பே கிறது. அந்த ஜில்லாக்கள் யாவை?

5. மைசூர் ராஜ்யத்தின் ஓரத்திலும் திருவா கூர் ராஜ்யத்தின் ஓரத்திலும் உள்ள ஜில்லாக்கள் வரிசையாகச் சொல்லுக. கடலோரத்தில் இ லாத ஜில்லாக்கள் யாவை?

6. நமது மாகாணத்தில் மிகவும் பெரிய ஜில்ல எது? மிகவும் சிறிய ஜில்லா எது?

7. நமது மாகாணத்து ஜில்லாக்களின் தொகை
யும் எல்லைகளிலும் சமீபகாலத்தில் ஏதேனும்
றுபாடு ஏற்பட்டதா?

8. சென்னை ராஜதானியை ஏன் ஜில்லாக்களா
பிரித்திருக்கிறார்கள்? மொத்தம் எத்தனை ஜில்
க்கள் இருககின்றன?

## படம் 7. இருப்புப்பாதைகள்.

. சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குச் செல்
இருப்புப்பாதையையும், இயற்கையமைப்
படத்தையும் பார்த்து இந்த இருப்புப்பாதை
வளவு நேராகச் செல்லுவதற்குக் காரணம்
னவென்று சொல்லுக. எந்தக் குன்றின்
ாவது அது செல்லுகிறதா? அப்படியானால்
களைக் குடைந்திருக்கிறார்களா? முக்கியமான
ங்கள் எல்லாம் அந்தப் பாதையில் எங்கே
ன? சென்னபட்டணத்துக்கும் பர்ஹாம்பூ
தம் மத்தியில் உள்ள முக்கியமான ஸ்டேஷன்
யாவை? ஹைதராபாத்துக்குப் போகவேண்டு
ல் எந்த எந்த இடங்களில் இறங்கி வண்டி
மாற்றவேண்டும்? வங்காளநாகபுரி இருப்புப்
தயானது வால்டேர் என்னுமிடத்தில் சென்
தென் மகாராஷ்டிர இருப்புப்பாதையோடு
க்கிறது. வங்காளநாகபுரி இருப்புப்பாதை
னை மாகாணத்தில் எவ்வளவு மைல் தூரம்
யிருக்கிறது?

நீங்கள் காக்கிநாடாவில் இருப்பதாக வைத்
காள்வோம். அங்கிருந்து புகைவண்டியில்
குறுக்குப் பாதையாக மேற்குத் தீரத்துக்
போகவேண்டுமானால் எந்தவழியாகப் போ
ர்?

குந்தக்கல்லிலிருந்து என்ன என்ன இருப்
தைகள் கிளம்புகின்றன? அவற்றுள் எவை
ானவை? எவை குறுகலானவை?

சென்னபட்டணத்திலிருந்து மங்களூரு
யில் வண்டியில் போவதானால் எவ்வளவு
பிடிக்கும்? வழியில் என்ன என்ன ஜில்
இருக்கின்றன? மத்தியிலுள்ள முக்கிய
ஷன்கள் யாவை? ஒவ்வொரு கிளைப்பா
ாய் முடிகிற பட்டணத்தின் பெயரைச்
க. எந்த இடத்தில் காவேரிநதியை முக்
இருப்புப்பாதை கடந்து செல்லுகிறது?
நக்குச் சமீபமாகப் போகையில் எங்
யைநோக்கிநீங்கள் செல்லுவீர்கள்? அந்த
இருப்புப்பாதைப் பாலங்கள் அதிக
மாக இருக்கின்றனவா? இரண்டாவது படத்
தைப் பார்த்து இதற்கு விடை சொல்லுக.

5. சென்னபட்டணத்திலிருந்து போட்மெயி
லில் கொழும்புக்குப் பிரயாணம் செய்வதாக
வைத்துக்கொள்வோம். ஆரம்பம்முதல் கடைசி
வரையிலுள்ள முக்கியமான ஸ்டேஷன்களைச்
சொல்லி அவற்றுள் ஜங்ஷன்கள் இன்னவை
யென்பதையும் குறிப்பிடுக. எந்த இடத்தில்
புகைவண்டியிலிருந்து இறங்கிக் கப்பலில் ஏற
வேண்டும்? கொழும்புக்குப் போய்ச் சேருவத
ற்கு அங்கிருந்து எவ்வளவு நேரம்பிடிக்கும்?
சென்னையிலிருந்து கொழும்புக்கு இந்தவழியாகச்
செல்லாமல் வேறு குறுக்குப்பாதை வழியாகச்
செல்லக்கூடுமானால் அதைப் படத்தில் காட்டுக.
தூத்துக்குடி வழியாகப் போவதைக்காட்டிலும்
இந்தவழியாகச் செல்லுவதில் கப்பல்பிரயாணம்
எவ்வளவு மைல் குறையும்? அதனால் இருப்புப்
பாதைப் பிரயாணமும் குறைந்திருக்கிறதா?

6. நாகபட்டணத்திலிருந்து கொச்சிக்குச்
செல்லுவதானால் மத்தியிலுள்ள முக்கியமான
ரயில்வே ஸ்டேஷன்கள் யாவை? அந்தப் பிரயா
ணத்தில் கொஞ்சதூரம் படகில் ஏறிச்செல்ல
வேண்டும். எந்த இடத்தில்?

7. கொழும்பிலிருந்து திருவனந்தபுரத்துக்குப்
புகை வண்டியில் செல்லவேண்டுமானால் எந்த
வழியாகச் செல்லலாம்? சமுத்திர வழியாகப் பிர
யாணம் செய்வதைக்காட்டிலும் இந்தப் பிரயா
ணம் அதிக நேரம் பிடிக்குமா?

8. மைசூரிலிருந்து ஒருவன் உதகமண்டலத்
துக்குப்போகவேண்டும். எந்த வழியாக அவன்
பிரயாணம் செய்யவேண்டும்? படத்தில் காட்டுக.
ஆகாய விமானத்தில் அவன் பிரயாணம் செய்
வானேயானால் எவ்வளவுதூரம் அவன் பறக்க
வேண்டும்?

9. பாலக்காட்டிலிருந்து திண்டுக்கல்லுக்கு
இருப்புப்பாதையை அமைக்க ஆலோசித்துக்
கொண்டிருக்கிறார்கள். இந்தக் குறுக்குப்பாதை
யினால் எந்த எந்த இடங்களுக்கு உபயோக
ஏற்படும்?

10. 4-ஆவது படத்தோடு இந்தப் பட
பிட்டு, சென்னை—தென்மகாராஷ்டிர இரு
தையில் பிரயாணிகளின் கூட்டம் அதிக
லது தென் இந்தியா இருப்புப்பாதையில்
மா என்று சொல்லுக. தென் இந்தியா
புப்பாதையில் ஸ்தலயாத்திரை செய்பவர்
கூட்டம் அதிகம். அந்த இருப்புப்பாதை
அதற்குச் சமீபமாகவும் உள்ள ஸ்தலங்
யாவை?

11. உங்களுடைய ஊரிலிருந்து சென்னபட்டணம், தூத்துக்குடி, குண்டூர், மசூலிபட்டணம், கள்ளிக்கோட்டை, பங்களூர் இந்த இடங்களுக்குப் புகைவண்டியிற் செல்லவேண்டுமானுல் எந்த எந்த வழியாகப் போகவேண்டும்?

12. ஒரு வியாபாரி வால்டேரிலிருந்து தஞ்சாவூருக்குச் சில சாமான்களைப் புகைவண்டியில் ஏற்றி அனுப்புகிருன். எந்த ஸ்டேஷனில் அகலமான வண்டிகளிலிருந்து குறுகலான வண்டிகளுக்குச் சாமான்களை மாற்றவேண்டும்? இதே மாதிரி சேலத்திலிருந்து திருச்சிராப்பள்ளிக்கும் ஏர்ணுகுளத்திலிருந்து செங்கற்பட்டுக்கும் காக்கிநாடாவிலிருந்து மசூலிபட்டணத்திற்கும் சாமான்களை அனுப்பவேண்டுமானுல் எந்த எந்த ஸ்டேஷன்களில் வண்டியை மாற்றவேண்டும்?

13. அகலமான பாதை, குறுகலான பாதை என்ருல் என்ன? அவற்றுள் ஒவ்வொன்றினுலும் ஏற்படும் நன்மையும் தீமையும் யாவை?

14. கீழே காட்டியபடி பிரயாணம்
வேண்டுமானுல் எவ்வளவுதூரம் பிரய
செய்யவேண்டும்? படத்தைப் பார்த்து உ
மாகச் சொல்லுங்கள்.

சென்னையிலிருந்து போத்தனு
" மங்களூ
" பங்களூ
" தூத்துக்கு
" திருச்சிராப்பள்
" பெஸ்வாடா
" பர்ஹாம்பூ
" பம்பாய் இருப்
பையிலுள்ள துங்கபத்திராவின் பாலத்துக்

நாகபட்டணத்திலிருந்து கள்ளிக்கோ
க்கு,

திருச்சிராப்பள்ளியிலிருந்து தனுஷ்கோ

மதுரையிலிருந்து திருவனந்தபுரத்துக்கு

பிறகு ரயில்வே கைடை வைத்துக்கொண்
கள் சொல்லும் விடைகள் சரிதானு என்
பிட்டுப் பாருங்கள்.

224541
சென்னை-600 008
எழும்பூர்

# AUTHOR'S NOTE

IN this book, dealing with the Geography of the Madras Presidency, the method of treatment follows lines similar to those adopted in my 'Man's Home' to which it may be considered a sequel. The build and extent of the region are to be learned less as a piece of book-work than as the result of journeys across its surface and of voyages along its coasts. It is primarily a home where men have to make a living under fairly familiar conditions of heat and moisture, in plains and on hills, by river-banks and on the shores of the sea. Attention is, therefore, directed almost entirely to facts of geographical significance and to their bearing on human interests. Thus a diversified district such as The Nilgiris is given fuller treatment than the more important but monotonous deltaic tract of Tanjore. The object aimed at is not to store the pupil's mind with mere information about the Presidency, but to use the geographical data of the province as an introduction to the subject in general. A compendium of facts, however wonderful, or a Gazetteer-made-easy is the last thing to be desired. Comparisons and contrasts are naturally dwelt on but no statistics are given—even in an appendix. In a book of this grade they are little short of an abomination.

The book is confessedly an attempt to awaken interest in a subject too much neglected but which, when properly taught, is the most educative in the school curriculum. How far it has attained its object can best be appreciated by teachers who use it. The attention of all such is invited to the series of specially prepared maps which should constantly be referred to while studying and teaching the text. For a school book of its scope and standard they will, it is trusted, be found complete. The questions on them are not intended to be so; they are merely typical and suggestive of others.

Lastly, this is meant to be a *pupil's* book written *for* him not *at* him. I should be content if it is found to have educative value because, in some measure, it attracts the interest, elicits the thinking powers and stirs the imagination of the young.

C. M.




MORRISON'S OUR HOME—TAMIL, 10 ANNAS.